www.padippakam.com

# சமூக வளர்ச்சியின் அடித்தளமும் மேற்கட்டமைப்பும் பற்றி மார்க்சியம்



அ.கா.ஈஸ்வரன்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# சமூக வளர்ச்சியின் அடித்தளமும் மேற்கட்டமைப்பும் பற்றி மார்க்சியம்

அ.கா.ஈஸ்வரன்

செந்தழல் வெளியீட்டகம்
சென்னை

படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | **சமூக வளர்ச்சியின் அடித்தளமும் மேற்கட்டமைப்பும் பற்றி மார்க்சியம்** |
| பதிப்பு | : | முதல் பதிப்பு - டிசம்பர் 2010 |
| உரிமை | : | ஆசிரியர் |
| வெளியீடு | : | **செந்தழல் வெளியீட்டகம்,**<br>52/252, செல்லப்பா தெரு,<br>கொயப்பேட்டை, சென்னை - 600 012. |
| மின்னஞ்சல் | : | chenthazhal@gmail.com |
| கைபேசி | : | 9283275513 |
| அச்சு | : | ராஜம்ஸ், சென்னை - 600 014. |
| விலை | : | ரூ. 60/- |

| | | |
|---|---|---|
| Title | : | **SAMUGA VALARCHIYIN ADITHALAMUM MELKATTAMAIPPUM PATTRI MARXIAM** |
| Edition | : | First Edition - December 2010 |
| Copyright | : | Author |
| Published by | : | **Chenthazhal Veliyeettagam**<br>52/252 Chellappa Street,<br>Koyapet, Chennai 600 012. |
| email | : | chenthazhal@gmail.com |
| Cell No | : | 9283275513 |
| Printed at | : | Rajams, Chennai – 600 014. |
| Price | : | Rs. 60/- |

படிப்பகம்

www.padippakam.com

## பொருளடக்கம்

முன்னுரை 5

I. அடித்தளமும் மேற்கட்டமைப்பும் 17

அ. அடித்தளமும் மேற்கட்டமைப்பும்

ஆ. உற்பத்திச் சக்திகள்

இ. உற்பத்தி உறவுகள்

ஈ. உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையேயான இயக்கவியல் தொடர்பு

II. வர்க்கத்தின் தோற்றமும் சாரமும் 35

III. மேற்கட்டமைப்பு - சமூக உணர்வுநிலையும் அதன் வடிவங்களும் 43

1. அரசியல் சித்தாந்தம்
2. மதம்
3. பண்பாடு
4. கலைகள்
5. அறநெறி
6. தத்துவயியல்

IV. சமூக பொருளதார அமைப்பு 63

1. பண்டைய கூட்டுவாழ் கம்யூனிச சமூக உற்பத்திமுறை
2. அடிமை சமூக உற்பத்திமுறை
3. நிலப்பிரப்புத்துவ சமூக உற்பத்திமுறை
4. முதலாளித்துவ சமூக உற்பத்திமுறை

V. சமூகத்தின் அடித்தளம் மேற்கட்டமைப்பு பற்றிய திருத்தல் போக்கு 80

படிப்பகம்

www.padippakam.com

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்- அதை
ஆங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு;- தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்

—பாரதியார்

படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

எங்கெல்ஸ் கூறினார்:-

"அங்கக இயற்கையின் (organic nature) வளர்ச்சி விதியை டார்வின் கண்டுபிடித்ததைப் போல, மனித சமூக வரலாற்றின் வளர்ச்சி விதியை மார்க்ஸ் கண்டு பிடித்தார், மனிதன் அரசியல், அறிவியல், கலை, மதம், இதர வற்றில் ஈடுபடும் முன்னர் முதலில் உண்ண உணவைவும், இருக்க இருப்பிடத்தையும், உடுக்க உடையையும் பெற்றிருக்க வேண்டும் என்னும் சாதாரண மான உண்மை இதுவரை சித்தாந்த மிகை வளர்ச்சியினால் மூடி மறைக்கப்பட்டிருந்தது, ஆகவே உடனடியான பொருளாதார வாழ்க்கைச் சாதனங் களை உற்பத்தி செய்தல், அதன் காரணமாக ஒரு குறிப் பிட்ட மக்களினம் அல்லது குறிப்பிட்ட சகாப்தத்தின் போது அடைந்திருக்கின்ற பொருளாதார வளர்ச்சியின் அளவு என்னும் அடிப்படையின் மீது சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்கள், சட்டவியல் கருத்தாக்கம், கலை மற்றும் மதக் கருத்துக்கள் கூட வளர்ச்சியடைகின்றன, ஆகவே அதன் ஒளியில் அவற்றை விளக்க வேண்டுமே அல்லாது இதுவரை செய்யப்பட்டதைப் போல மறுதலையாக விளக்கக் கூடாது.

ஆனால் அது மட்டுமல்ல. மார்க்ஸ் இன்றைய முதலாளித்துவ உற்பத்திமுறை மற்றும் அந்த உற்பத்தி முறை தோற்றுவித் துள்ள முதலாளித்துவ சமூகத்தின் இயக்கத்தின் சிறப்பு விதியையும் கண்டுபிடித்தார். மிகை மதிப்பைக் கண்டுபிடித்தது திடீரென்று அந்தப் பிரச்சினையின் மீது ஒளியைப் பாய்ச்சியது,.."

மார்க்சின் உடலைப் புதைக்கின்ற பொழுது
எங்கெல்ஸ் நிகழ்த்திய உரை

வரலாற்றின் உந்து விசை, மிகை மதிப்பு ஆகிய இரண்டையும் மார்க்ஸ் கண்டுபிடித்தது, அவரது வாழ்க்கைச் சாதனை என்று கூறலாம். குறிப்பிட்ட சமூகத்தின் வளர்ச்சியை, அச் சமூகம் அடைந் திருக்கின்ற பொருளாதார வளர்ச்சியின் அளவைக் கொண்டுதான், அரசு நிறுவனங்கள், சட்டயியல், கலை, மதம், சித்தாந்தம் போன்ற வற்றின் வளர்ச்சியை புரிந்து கொள்ள வேண்டும். இதுநாள்வரை



படிப்பகம்

செய்யப்பட்டுவந்ததுபோல் தலைகீழ் முறையில் அல்ல என்பதைத் தான் எங்கெல்ஸ் மேலே கூறுகிறார் இது தான் மார்க்ஸ் கண்டு பிடித்துக் கொடுத்த, சமூக வளர்ச்சியைப்பற்றிய விதிமுறை. " ..ஆகவே அதன் ஒளியில் அவற்றை விளக்க வேண்டுமே அல்லாது இதுவரை செய்யப்பட்டதைப் போல மறுதலையாக விளக்கக் கூடாது" என்ற எங்கெல்ஸ் கூற்றை, பிற்காலத்தில் சோவியத் யூனியனும் மறுதலித்து செயல்பட்டதால்தான் தகர்வை அமைதி யாகச் சந்தித்தது. இதுபற்றி தனிஆய்வாக செய்திட வேண்டும்.

அவ்வுரையில் மேலும் எங்கெல்ஸ் கூறுகிறார், "மார்க்ஸ் தம் காலத்தில் அதிகமாக வெறுக்கப்பட்ட, மிகவும் அவதூறு செய்யப் பட்ட மனிதராக இருந்தார்".

வரலாறு இதுவரை கண்ட வளர்ச்சி, தற்காலத்தில் நிலவும் முதலாளித்துவ அமைப்பின் தோற்றம், சிக்கல், மறைவு, ஆகியன பற்றிய உண்மைநிலையை, மார்க்சின் இந்த இரு கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்துகிறது.

ஒருவர் கண்டுபிடித்ததைப் பற்றி விமர்சிப்பதற்கு பதில் வெறுப்பும், அவதூறும் தெரிவிப்பதென்பது மிகவும் இழிவான செயலாகும். தங்களின் தத்துவயிலில் நின்று மார்க்சியத்தை விமர்சனமுறையில் மறுத்தால், நாம் மார்க்சிய வழியில் பதில் அளிக்கலாம். ஆனால் அவர்கள், தம் நிலையிலிருந்து மார்க்சை எதிர்க்க முடியாத நிலையில், தங்களை மார்க்சியவாதியாக காட்டிக் கொண்டு, மார்க்சின் கண்டுபிடிப்புகளின் உள்ளிருந்து திருத்தவும், சிதைக்கவுமான செயல்களில் ஈடுபடுகின்றனர். மார்க்சின் கண்டு பிடிப்புகளைப் பற்றி தங்களால் விமசர்னம் செய்ய இயலாத நிலை யில் இருப்பதால் தான் இவ்வாறு செயல்படுகிறார்கள். இது பலகாலமாக தொடர்ந்து வருகிறது. இதனை எதிர்கொள்வது மார்க்சியவாதிகளின் கடமை. மார்க்சியத்தின் அடிப்படைகளை விளங்கிக் கொண்டவர்களிடம், இந்த சிதைக்கும் போக்கு பயன் தராது, என்பதை அறிந்ததால், மார்க்சிய அடிப்படை நூல்களை வெளியிடுவதும், மார்க்சியத்தை அறியத் துடிப்பவர்களுக்கு துணைபுரிய வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு இக் குறுநூல் எழுதப்பட்டது.

" சமூக வளர்ச்சியின் அடித்தளமும், மேற்கட்டமைப்பும் பற்றி மார்க்சியம்" என்ற இந்நூல் மார்க்சியத்தின் பால் ஈர்க்கப்பட்ட புதியவர்களுக்கும், மார்க்சியத்தின் அடிப்படைகளை வகுப்பெடுப்ப

வர்களுக்கும், மார்க்சியத்தை சொந்த முயற்சியில் படிக்க முற்படுபவர்களுக்கும், மற்றும் பல்கலைகழகத்தில் வரலாறு, சமூக வியல், பொருளாதாரம், தமிழ் ஆகிய பாடங்களை படிக்கும் இளங் கலை, முதுகலை, ஆய்வு மாணவர்களுக்கும் பயன்படும்படியாக எழுதப்பட்டதாகும். குறிப்பாக வரலாறு படிப்பவர்களுக்கு **"அடித்தளமும் மேற்கட்டமைப்பும்" என்ற முதல் இயலும், சமூகவியல் மாணவருக்கு "வர்க்கத்தின் தோற்றமும் சாரமும்" என்ற இரண்டாம் இயலும், பொருளியல் படிப்பவருக்கு "சமூக பொருளதார அமைப்பு" என்ற நான்காம் இயலும், தமிழ் படிக்கும் மாணவருக்கு "மேற்கட்டமைப்பு - சமூக உணர்வு நிலையும் அதன் வடிவங்களும்" என்ற மூன்றாம் இயலும் மிகுந்த பயனளிக்கும்.**

மார்க்சியத்தின் அடிப்படைகளை விளக்கும் நூல்களின் வரிசையில், முதலாவதாக **" சமூக வளர்ச்சியின் அடித்தளமும், மேற்கட்டமைப்பும் பற்றி மார்க்சியம்"** வெளியிடப்படுகிறது. மார்க்சிய தத்துவயியல், அரசியல் பொருளாதாரம், அறிவியல் பொதுவுடைமை ஆகிவற்றின் மையம் சமூக வளர்ச்சியும், மாற்றத்தை யும் எடுத்துக் காட்டுவதாகும். சமூக மாற்றத்தைப் புரிந்து கொண்டு, நிலவும் சமூகத்தின் போக்கையும், மாற்றத்தையும் மார்க்சிய முறை யில் அறிந்து செயல்பட விரும்பும் அனைவருக்கும் இந்நூல் வழிகாட்டியாய் இருக்கும். எந்த குறிப்பிட்ட கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதாரவாகவோ அல்லது எதிராகவோ, இந்நூல் எழுதப்படவில்லை. ஆதே நேரத்தில் தனிநபர் எவரையும் அவதூறு செய்வதற்காகவும் எழுதப்படவில்லை.

மார்க்சிய சித்தாந்தம் எதோ தனிநபருக்கு வகுக்கப்பட்ட வையோ, அல்லது தனிநபருக்கு வழிகாட்டும் சித்தாந்தமோ அல்ல. சமூக வளாச்சியை புரிந்து கொண்டு, மையப்படுத்தப்பட்ட சிந்தனை யின் வழியாக, (பெரும்பான்மைக்கு கட்டுப்பட்டு) கட்சி சமூக மாற்றத் தில் ஈடுபடுகிறது.

இதுவரை சமூகம் கண்ட மாற்றங்களை விட, தற்போதைய முதலாளித்துவ சமூகத்தில் நடைபெற வேண்டிய மாற்றம் என்பது மிகவும் கடினமான நடவடிக்கையாகும். புரட்சிகரமான கொள்கை யின் அடிப்படையில் அமைந்துள்ள கட்சியால் தான் இதனை சாதித்திட முடியும். அனைத்துச் சமூக போக்குகளையும் புரிந்து கொள்ளும் திறம் பெற்ற கட்சியால் தான் முடியும்.

**பொதுவாக கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குப் பயன்படும்படியாக எழுதப்பட்டவையே இக்குறு நூல்**

இந்நூலைத் தொடர்ந்து, மார்க்சிய அடிப்படையை விளக்கும் நூல்கள் வரிசையாக வரயிருக்கிறது, மிக விரைவில் வரயிருப்பவை, "முதலாளித்துவ பொருளாதார பொது நெருக்கடி பற்றி மார்க்சியம்", "மதத்தைப் பற்றி மார்ச்சியம்", "அராஜகவாதம் பற்றி மார்க்சியம்", "மார்க்சியம் பற்றி மார்க்சியம்", மற்றவை அடுத்தடுத்து வரயிருக்கின்றன.

எதிர்ப்பவர்களுக்கும், மறுப்பவர்களுக்கும் புரிந்த மார்க்சியம், மார்க்சியத்தின் பால் ஈர்த்தவருக்கும், ஈடுபாட்டோடு படிக்க முயல்பவர்களுக்கும் புரியாமல் போகாது, என்பதை அறிந்ததின் விளைவே, இந்நூல்களின் வரிசை. இந்திய நிலைமைகளையோ, இந்தியாவில் உள்ள மதம், தத்துவயியல் போக்குகளையோ, இங்குள்ள சமூக நிலைமைகளையோ புரிந்து கொள்ளாமல், இந்தியாவில் மார்க்சியத்தை முழுமையாய் அறிந்திட முடியாது. இந்நூல் வரிசையில் **"இந்தியத் தத்துவயியல் பற்றி மார்க்சியம்" என்ற நூலும் இடம்பெறுகிறது.**

மார்க்சின் வரலாற்றியல் பொருள்முதல்வாதம் என்பது சமூக வளர்ச்சியையும், மாற்றத்தையும் அறிவியல் முறையில் விளக்குகிறது. இதனை மார்க்ஸ் சமூகத்தின் அடித்தளம், மேற்கட்டமைப்பு என்ற கருத்தாக்கத்தின் வழிமுறையில் விளக்கியிருக்கிறார்.

> "சமூகஉற்பத்தி முறை தான், எல்லா வகையான சமூக உணர்வுநிலைகளையும் தீர்மானிக்கின்றன. உற்பத்தி முறை என்பது உற்பத்தி சக்திகள், உற்பத்தி உறவுகள் ஆகிய இரண்டையும் உள்ளடங்கியவையாகும். இந்த பொருளாதார அமைப்பையே அடித்தளம் என்றழைக்கப்படுகிறது.
>
> தத்துவயியல், மதம், அரசியல், சட்டம், அறநெறி, பண்பாடு, கலை போன்றவை குறிப்பிட்ட பொருளாதார அமைப்பிற்கு ஏற்ப தோன்றும் மேற்கட்டமைப்பாகும்.
>
> அடித்தளத்திற்கும் மேற்கட்டமைப்புக்கும் இடையே ஒன்றுடனொன்றான தொடர்பு நிலவுகிறது. இந்தத் தொடர்பில் அடித்தளம் முதன்மையாகவும், மேற்கட்டமைப்பை தோற்றுவிக்கும் காரணமாகவும் இருக்கிறது.

ஆகவே சமூகத்தின் அடித்தளத்திற்கு ஒத்த மேல்கட்டமைப்பு உருவாகிறது. உருவாகும் என்பதை அடித்தளத்திற்கு ஏற்ப மேற்கட்டமைப்பு தானாகவே ஏற்பட்டுவிடும் என்றும் விளக்கப்படுத்திக் கொள்ளக்கூடாது. அடித்தளம் மேற்கட்டமைப்பை தீர்மானிக்கிறது, நீர்ணயிக்கிறது என்று தான் மார்க்சியம் கூறுகிறது."

இதனை விளக்குவதற்கே, இக் குறுநூல் எழுதப்பட்டது.

லூக்காஸ், கிராம்சி ஆகியோர், ஜெர்மனியில் நாஜிக்களும், இத்தாலியில் பாசிஸ்ட்டுகளும் வெறும் பிரச்சாரத்தின் மூலம் சர்வாதிகார அரசியலை நிலைநாட்டி விட்டதாகவும், இதன் மூலம் பொருளாதார காரணங்கள் சமூக அடிப்படை என்பது பின்னுக்கு தள்ளப்பட்டதாக தவறாக புரிந்து கொண்டு, பண்பாட்டு மார்க்சியம் என்ற சிந்தனையைப் போக்கைத் தொடங்கினர்.

தீடீர்புரட்சியாளரான நெப்போலியனைப் பற்றி மார்க்ஸ் "லூயி போனபார்ட்டின் பதினெட்டாம் புருமேர்" என்ற நூலில் எழுதியதை இவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதனால் மார்க்சியத்தின் அடிப்படைக்கு எதிரான பண்பாட்டு மார்க்சியம் என்று மார்க்சின் பெயரைத் தாங்கிக்கொண்டே, மார்க்சியத்தின் அடிப்படையை மறுக்கின்றனர்.

மார்க்சியம் கூறும் அடித்தளம் மேற்கட்டமைப்பு என்பதை ஏற்றுக்கொள்ள முடியாமல், மேற்கட்டமைப்பு என்பது, - குறிப்பாக பண்பாடு - அடித்தளத்தின் பிரதிபலிப்பல்ல, மேற்கட்டமைப்பிற்கு தனியான சுதந்திரம் உண்டு என்று பண்பாட்டு மார்க்சியர்கள் கூறுகின்றனர். அதாவது மார்க்சியத்தின் அடிப்படையையே கேள்விக் குள்ளாக்குகிறார்கள் பண்பாட்டு மார்க்சியர்கள்.

மேலைநாடுகளில் நடைபெற்ற இம்முயற்சி, தற்போது தமிழகத்திலும் காணப்படுகிறது. பண்பாட்டு மார்க்சியவாதிகள் என்று தங்களைக் கூறிக்கொள்பவர்கள், மார்க்சால் எதிர்க்கப்பட்ட சித்தாந்தங்களை மார்க்சியத்துடன் இணைக்க முயற்சிக்கின்றனர். இத்துடன் நில்லாது, பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரத் தன்மையை மறுதலித்து, விளிம்பு நிலை மக்களைக் கொண்டு சமூக மாற்றம் செய்திட முடியும் என்று மார்க்சியத்திற்கு தொடர்பில்லா போக்கைக் கைக்கொள்கின்றனர்.

பண்பாட்டு மார்க்சியத்தை, மார்க்சியத்தின் அடிப்படையில் முழுமையான ஒரு விமர்சனத்திற்கு உட்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகிவிட்டது. இதற்கு மார்க்சியம் விவரிக்கும் சமூகத்தின் அடித்தளம் மேற்கட்டமைப்பு என்ற கருத்தாக்கத்தை தெளிவாய் புரிந்து கொண்டிருக்க வேண்டியது மார்க்சியவாதிகளுக்கு இன்றியமையததாகிறது.

இதனை வலியுறுத்துபவர்களை மரபு மார்க்சியவாதிகள் என்றும் வைதீக மார்க்சியவாதிகள் என்றும் கொச்சப்படுத்தி மார்க்சிய மரபை சிதைக்கும் முயற்சியும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

இந்நூலில் இந்தப் பண்பாட்டு மார்க்சியம் என்பது மார்க்சியத்தின் அடிப்படைக்கு எதிரானது என்பதையும், பண்பாட்டு மார்க்சியம் பேசுபவர்கள் மார்க்ஸ், எங்கெல்ஸ் படைப்புகளை திரித்து விளக்கம் அளிக்கின்றனர், என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. பண்பாட்டு மார்க்சியத்தை அடிமுதல்முடிவரையான விமர்சனம் செய்வதென்பது இந்நூலின் எல்லைக்குட்பட்டதல்ல. இதனை தனிநூலாக படைத்திட வேண்டும்.

இந்நூல் ஐந்து இயல்களைக் கொண்டிருக்கிறது. முதலியலில் அடித்தளம் மேற்கட்டமைப்பைப் பற்றி சிறுவரையறை கொடுக்கப்பட்டுள்ளது. உழைப்பின் குறிப்பொருள் (Objects of labour), உழைப்புக் கருவிகள் (Instruments of labour), உழைப்பு ஆகிய உற்பத்திச் சக்திகள் (Productive Forces) உற்பத்தி உறவுகள் (Relation of Production), உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையேயான இயக்கவியல் தொடர்பு பற்றிய விளக்கப்பட்டுள்ளது. இரண்டாம் இயல் வர்க்த்தின் தோற்றமும் சாரமும். இதில் முதலாளித்து சமூகத்தில் நடைபெறும் வர்க்கப் போராட்டத்தில், புரட்சிகரமான கொள்கைகளை வகுத்துக் கொண்டு, அதன் அடிப்படையில் செயல்படும் கம்யூனிஸ்ட் கட்சியின் பங்கு பற்றி எழுதப் பட்டுள்ளது.

மூன்றாம் இயல் மேற்கட்டமைப்பு என்றழைக்கப்படுகின்ற சமூக உணர்வுநிலையும் அதன் வடிவங்களில், அரசியல் சித்தாந்தம், மதம், பண்பாடு, கலைகள், அறநெறி, தத்துவயியல் போன்ற சிலவற்றை மட்டும், சுருக்கமாக கொடுக்கப்பட்டுள்ளது. இதனைப் படித்திடும் போது, விரிவாகப் படிக்கத் தூண்டும் வகையில்

மிகச்சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது. இதனைப் பற்றிய தனிநூல்கள் பல தமிழில் கிடைக்கிறது. கலையைப் பற்றி பேராசியர் ந.வா எழுதிய "தமிழர் கலை வரலாறும் கதைப்பாடல் ஆய்வும்" என்ற நூல் இப்போது கிடைக்கிறது.

இந்நூலைத் தொடர்ந்து தொடர்புடைய நூல்களை இனம்கண்டு கொண்டு படிக்க வேண்டும் என்பதே இந்நூலின் தலையாய நோக்கமாகும். ஏனென்றால் மார்க்சிய அடிப்படைகளை வாய்ப்பாடு போல் புரிந்து கொண்டுவிட்டால் பல தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது.

அடித்தளம் தான் மேற்கட்டமைப்பை நிர்ணயிக்கிறது என்பதனை வாய்ப்பாடு போல் புரிந்து கொண்டவர்கள் மேற்கட்டமைப்பை அடித்தளமே உருவாக்கிக் கொள்ளும் என்ற தவறான புரிதலுக்கு சென்றுவிடுகின்றனர்

இது பற்றி எங்கெல்ஸ் :-

"அரசியல், சட்டவியல், தத்துவஞான, சமய, இலக்கிய, கலை, இதர வளர்ச்சி பொருளாதார வளர்ச்சியை அடிப்படை யாகக் கொண்டிருக்கிறது, ஆனால் இவை அனைத்தும், ஒன்றின் மீது ஒன்றும், பொருளாதார அடிப்படையின் மீதும் எதிர்ச்செயல் புரிகின்றன. மற்றவை ஒவ்வொன்றும் செயலற்ற விளைவை மட்டுமே கொண்டிருக்கின்றன, பொருளாதார நிலைமை காரணமாக, தனியாக சுறுசுறுப்புடன் செயல் புரிகிறது என்பதல்ல. **பொருளாதார அவசியத்தின் அடிப்படையில் - அது இறுதியில் எப்பொழுதும் தன்னை வலியுறுத்துகிறது - இடைச்செயல் நடைபெறுகிறது.**

உதாரணமாக, காப்பு வரிகள், வர்த்தகச் சுதந்திரம், நன்மை யான அல்லது தீமையான நிதி அமைப்பின் மூலம் அரசு தாக்கம் செலுத்துகிறது. 1648 முதல் 1830 முடிய ஜெர்மனியின் பரிதாபகரமான பொருளாதார நிலைமையிலிருந்து தோன்றிய ஜெர்மன் அற்பவாதியின் மிகப் பெரும் களைப்பு கையாலா காத்தனமும் அவை முதலில் பக்திவாதத்திலும் பிறகு உணர்ச்சிப் பசப்பிலும் அரசர்களையும் பிரபுக்களையும் அண்டிப் பிழைக்கின்ற அடிமைத் தனத்திலும் தங்களை வெளிப்படுத்திக் கொண்டன - பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தாமலில்லை. புதிய மீட்சிக்கு அது மாபெரும்

தடைகளில் ஒன்றாக இருந்தது. புரட்சிகரப் போர்களும் நெப்போலியன் போர்களும் நெடுங்காலத் துன்பத்தைத் தீவிர மான துன்பமாக மாற்றுகின்ற வரையிலும் அது அசைக்கப்பட வில்லை - ஆகவே சில நபர்கள் தம் வசதிக்காகக் கற்பனை செய்ய முயல்வதைப் போல, பொருளாதார நிலைமை தானாகவே செயல்பட்டு விளைவை ஏற்படுத்து வதில்லை.

மனிதர்கள் தம்முடைய வரலாற்றைத் தாங்களே உருவாக்கு கிறார்கள் ஆனால் குறிப்பிட்ட சூழலில் (அந்தச் சூழல் அவர் களைத் தகவமைக்கிறது) ஏற்கெனவே இருந்து கொண்டிருக் கின்ற மெய்யான உறவுகளின் அடிப்படையில், இந்த மெய்யான உறவுகளில் பொருளாதார உறவுகள் (இவற்றின் மீது மற்ற உறவுகள் அரசியல் மற்றும் சித்தாந்த உறவுகள் எவ்வளவு அதிகமாகத் தாக்கம் செலுத்தினாலும்) முடிவில் இன்னும் தீர்மானகரமான உறவுகளாக இருக்கின்றன, அவை சமூக வளர்ச்சி முழுவதும் இழையோடியிருக்கின்றன, அவை மட்டுமே இவ்வளர்ச்சியைப் புரிந்து கொள்ள இட்டுச் செல்லும்"

*-எங்கெல்ஸ் வொ.போர்கியுசுக்கு எழுதிய கடிதம், லண்டன், ஜனவரி 25, 1894*

எங்கெல்ஸ் "சில நபர்கள் தம் வசதிக்காகக் கற்பனை செய்ய முயல்வதைப் போல, பொருளாதார நிலைமை தானாகவே செயல் பட்டு விளைவை ஏற்படுத்துவதில்லை." என்று எழுதியிருக்கிறார். ஆதே போல் மேற்கட்டமைப்பின் சுயேச்சையை மறுக்கும் போது, மேற்கட்டமைப்பு வரலாற்றில் எவ்விதமான தாக்கத்தையும் ஏற்படுத்து வதில்லை என்று தவறாக புரிந்கொண்டுள்ள சித்தாந்திகளின் முட்டாள் தனமான கருத்தை மறுக்கிறார் எங்கெல்ஸ்.

எங்கல்ஸ் மேரிங்குக் எழுதிய (ஜுலை 14, 1893)கடிதம்:-

"...மற்றபடி ஒரே ஒரு விஷயம் மட்டுமே இடம் பெறவில்லை, ஆனால் மார்க்சும் நானும் எங்களுடைய எழுத்துக்களில் அதைப் போதுமான அளவுக் வலியுறுத்தத் தவறினோம், அதைப் பொறுத்தமட்டில் நாங்கள் சம அளவுக்குத் தவறு செய்தவர்களே. அதாவது, நாங்கள் பிரதான அழுத்தத்தை முதலாவதாக அரசியல், சட்டவியல் மற்றும் இதர சித்தாந்தக்

கருத்துக்களையும் இக்கருத்துக்கள் என்னும் ஊடகத்தின் மூலமாகத் தோன்றுகின்ற நடவடிக்கைகளையும் அவற்றின் அடிப்படையான பொருளாதார மெய்விவரங்களிலிருந்து பெறுவதற்குக் கொடுத்தோம், அப்படிச் செய்யக் கடமைப் பட்டிருந்தோம். ஆனால் நாங்கள் அப்படிச் செய்கின்ற பொழுது, உள்ளடக்கத்துக்காக வடிவத்தைப் பற்றிய பிரச்சினையை, அதாவது இக்கருத்துக்கள் ஏற்படுகின்ற வழிகளை, இதரவற்றைப் புறக்கணித்தோம். அது நமது எதிரிகள் எங்களைத் தவறாகப் புரிந்துக் கொள்வதற்கும் திரித்துக் கூறுவதற்கும் விரும்பத்தக்க சந்தர்ப்பத்தை அளித்தது.

...விஷயத்தின் இந்த அம்சத்தை என்னால் இங்கே ஓரளவு தான் சுட்டிக்காட்ட முடிகிறது. இந்த அம்சத்தை நாம் அதற் குரியதைக் காட்டிலும் அதிகமாகப் புறக்கணித்திருக்கிறோம் என்று நான் நினைக்கிறேன். அது பழைய கதையே, உள்ளடக்கதுக்காக முதலில் வடிவம் எப்பொழுதுமே புறக் கணிக்கப்படுகிறது. ஏற்கெனவே நான் கூறியபடி நானும் இதைச் செய்திருக்கிறேன், அது தவறு என்று பிற்பாடுதான் எனக்குப் பட்டிருக்கிறது. ஆகவே நான் உங்களை இதற்காக எவ்விதத்திலும் குறைசொல்லாதது மட்டுமன்றி - தவறு செய்த தரப்பினரின் மூத்தவர் என்ற முறையில் அப்படிச் செய்வதற்கு எனக்கு உரிமையில்லை - அதற்கு மாறாக, எனினும் மற்றவை எப்படியிருந்தாலும் எதிர்காலத்தை முன்னிட்டு இந்த அம்சத்தை உங்களுடைய கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

வரலாற்றில் பாத்திரம் வகிக்கின்ற பல்வேறு சித்தாந்தத் துறை கள் சுயேச்சையாக வரலாற்று ரீதியில் வளர்ச்சி அடைவதை நாம் மறுப்பதால், அவை வரலாற்றின் மீது எவ்விதமான தாக்கத்தைச் செலுத்துவதையும் நாம் மறுக்கிறோம் என்னும் சித்தாந்திகளின் முட்டாள் தனமான கருத்தும் இதனுடன் சேர்ந் திருக்கிறது. காரணமும் விளைவும் தவிர்க்க இயலா எதிர் முனைகள் என்னும் பொதுப்படையான, இயக்கவியல் அல்லாத கருதுகோள், இடைச்செயல் முற்றிலும் கருதப்படா மல் இருப்பது இதற்கு அடிப்படை ஆகும். வரலாற்று நிகழ்ச்சி மற்ற காரணிகளால், முடிவில் பார்க்குமிடத்து பொருளாதாரக்

www.padippakam.com

காரணிகளால் ஏற்படுவதால், அது உடனேயே தீவிரமான காரணியாகிறது, அதன் சூழ்நிலை மற்றும் அதைத் தோற்று வித்த காரணங்களின் மீது கூட அதனால் எதிர்ச்செயல் புரிய முடியும் என்பதை இந்தக் கனவான்கள் பெரும்பாலும் அநேகமாக திட்டமிட்ட முறையிலும் மறந்து விடுகிறார்கள்."

இதுபோன்றவர்களிடம் இயக்கவியல் கண்ணோட்டம் கிடையாது, காரணத்தை ஓரிடத்திலும் விளைவை மற்றொருயிடத்திலும் பார்க்கிறார்கள் என்று எங்கெல்ஸ் கூறுகிறார். அதே நேரத்தில் மேற்கட்டமைப்பின் தாக்கம் சார்பானது எதுவுமே தனிமுதலானது அல்ல என்றும் எங்கெல்ஸ் ஷ்மிட்டுக்கு எழுதிய கடிதத்தில் கூறியிருக்கிறார்.

எங்கெல்சின் இந்த கடிதங்களை திருத்தி, சிதைத்து கருத்துரைக்கும் போக்கு அண்மையில் அதிகம் காணப்படுகிறது. அவர்களின் சித்தாந்தம் மார்க்சிய அடிப்படைகளுக்கு மாறானது என்பதை மட்டும் சுட்டிக் காட்டுகிறது ஐந்தாம் இயல். இதனை மார்க்சிய நோக்கில் முழுமையான விமசர்சனத்திற்கு உட்படுத்த வேண்டும். மார்க்சியப் படிப்பாளிகள் மார்க்சியத்தின் அடிப்படைகளை, மார்க்சிய ஆசிரியர்களின் கருத்தை நேரடியாக படித்து அறிந்து கொள்வது சரியாக இருக்கும் என்பதால் அவர்களின் நீண்ட மேற்கோள்கள் இடம் பெற்றுள்ளது. மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஆகியோர்களின் நூல்களை நேரடியாக படிக்கத் தூண்டும் வகையில், மேற்கோள்கள் பயன்படுத்தப் பட்டுள்ளது. இம்மேற்கோள்கள் புதிய வாசகர்களுக்கு எளிமையாக இருக்கும் வகையில் சிறுசிறு பத்தியாக பிரிக்கப்பட்டுள்ளது.

நான்காம் இயல், சமூகம் கண்ட நான்கு பொருளாதார அமைப்பைப் பற்றி (1. பண்டைய கூட்டுவாழ் கம்யூனிச சமூக உற்பத்திமுறை, 2. அடிமை சமூக உற்பத்திமுறை, 3. நிலப் பிரப்புத்துவ சமூக உற்பத்திமுறை, 4. முதலாளித்துவ சமூக உற்பத்திமுறை) மிகச்சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது. கம்யூனிச சமூகத்தைப் பற்றி இந்த இடத்தில் எழுதப்படவில்லை. "சோஷலிசப் புரட்சிப் பற்றி மார்க்சியம்" என்ற தனிநூலில் சோஷலிசப் புரட்சிப் பற்றியும், சோஷலிச சமூக உற்பத்திமுறையையும் எழுததிட்டமிடப் பட்டுள்ளது. இந்த இயலில், நான்கு சமூக பொருளாதார அமைப்பு ஒவ்வொன்றிலும் உற்பத்திச் சக்திகள், உற்பத்தி உறவுகள், முரண்பாடும் வீழ்ச்சி அகியவை எவ்வாறு, ஒரு பொருளாதார அமைப்பை



படிப்பகம்

www.padippakam.com

நிலைமறுத்து, மற்றொரு மேலான பொருளாதார அமைப்பா மாறுகிறது என்பதையும், அது, எவ்வாறு சோஷலிச சமூகத்தை நோக்கி செல்கிறது என்பதையும் சுருக்கமாக விவரிக்கிறது.

பண்டைய கூட்டுவாழ் கம்யூனிச சமூக உற்பத்திமுறை, முதலாளித்துவ சமூக உற்பத்திமுறை என்ற இருபகுதியில் உள்ளவை, வேறொரு நூலிற்காக எழுதப்பட்டவையாகும், அதனை இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. அதே போல் மூன்றாம் இயலில் உள்ள தத்துவயியல் என்ற பகுதி, வகுப்பெடுப்பதற்காக வைத்திருந்த குறிபை இந்நூலிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

மார்க்சிய அடிப்படைகள் மார்க்சிய ஆசான்களின் வழியிலேயே விவரிக்கப்படவேண்டும் என்ற நோக்கோடு இந்நூல் எழுதுப்பட்டுள்ளதால், இந்தியச் சமூக உதாரணங்கள் தவிர்க்கப்பட்டுள்ளது. இனிவரும் அடிப்படை நூல்களில் இந்தியச் சமூக வரலாற்றிலிருந்து விளக்கங்கள் கொடுக்கப்பட்டு எழுதப்படும்.

இந்நூலை ஏற்றும், மறுத்தும் எழுதப்படும் விமர்சனங்கள் அடுத்த எழுத்துப் பணிக்கு உதவும்.

விமர்சனங்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

**அ.கா.ஈஸ்வரன்**
**செந்தழல் வெளியீட்டகம்**
**சென்னை**
**கைபேசி எண்: 9283275513**
**மின்னஞ்சல்: marxism.eswaran@gmail.com**



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# I. அடித்தளமும் மேற்கட்டமைப்பும்

## அ. அடித்தளமும் மேற்கட்டமைப்பும்

சமூகத்தின் வளர்ச்சியையும், அதன் சாரத்தையும் அறிவதில் மக்களுக்கு நெடுங்காலமாக ஆர்வம் இருந்துவருகிறது. இதற்கு முதன்மையான காரணம், சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வும், பாது காப்பின்மையுமாகும், இவையே மக்களையும், சிந்தனையாளர்களையும், சமூகத்தின் இயங்கு சக்தி எது? என்று தேடவைத்துள்ளது.

சமூகத்தை இயக்குவது எது? என்ற கேள்விக்கு கருத்துமுதல்வாதி களும், மதவாதிகளும் சமூகத்திற்கு வெளியேயுள்ள சக்தி, கடவுள் ஆகியவற்றின் விருப்பப்படி நடைபெறுகிறது, என்ற கருத்தை முன் வைக்கின்றனர். மற்றும் சிலர் அரசர், ஆட்சியாளர், தளபதி, தலைசிறந்த மாமேதை போன்றோர்களின் விருப்பப்படி சமூகம் அமைகிறது என்றனர். இதனோடு கூட, வரலாற்றில் ஏற்படும் கலகங்கள், எழுச்சிகள், போர் நட வடிக்கைகள், தத்துவயியல் போராட்டங்கள் போன்ற சிக்கலான திடீர் நிகழ்வால் உருவாவதாக மற்றும் சிலர் கூறினர்.

மார்க்ஸ் சமூக வளர்ச்சி என்பது இயற்கையாக வரலாற்றில் நிகழும் போக்கு என்றும், அது புறநிலையான விதிகளுக்கு உட்பட்ட நிகழ்வாக இருப்பதையும் மெய்ப்பித்தார். இயற்கையில் நிகழும் புறநிலை விதிகள், சமூகத்திற்கு கிடையாது என்று மார்க்ஸ் காலத்திற்கு முன்புவரை சொல்லப்பட்டு வந்தது.

### எங்கெல்ஸ் கூறுகிறார் :-

> "வரலாற்றின் உந்து விசையைப் பற்றிய மாபெரும் விதியை முதன்முதலில் கண்டுபிடித்தவர் மார்க்ஸ். வரலாற்று ரீதியான அனைத்துப் போராட்டங்களும், அவை அரசியல், மத, தத்துவஞான அல்லது வேறு ஏதாவதொரு சித்தாந்தத் துறைக்குள்ளாக முன்னேறிய போதிலும், உண்மையில் அவை அநேகமாக சமூக வர்க்கங்களின் போராட்டங்களின் தெளிவான வெளியீடுகள் மட்டுமே, இந்த வர்க்கங்கள் இருப்பதும் அதன் காரணமாக இவற்றுக்கிடையே ஏற்படுகின்ற மோதல்களும் கூட அவற்றின் பொருளாதார நிலைமையின் வளர்ச்சியின் தரத்தினால், அவற்றின் உற்பத்தி முறையினாலும் அதனால் நிர்ணயிக் கப்படுகின்ற பரிவர்த்தனை முறையினாலும் நிலைப்படுத்தப் படுகின்றன என்பது அந்த விதியாகும். இயற்கை விஞ்ஞானத்



படிப்பகம்

www.padippakam.com

தில் சக்தியின் உருமாற்றம் பற்றிய விதிக்கு உள்ள அதே முக்கியத்துவம் வரலாற்றில் இந்த விதிக்கு உண்டு.”

*லூயீ போனபார்ட்டின் பதினெட்டாம் புருமேர் - எங்கெல்சின் முன்னுரை*

இயற்கை, சமூகம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதே இவ்வுலக மாகும். சமூகத்தை இயற்கையிலிருந்து தனித்து பிரித்து புரிந்து கொள்ள முடியாது. சமூகம் தமது இயக்கத்தை இயற்கையுடன் இணைந்தே செயல்படுகிறது. இதில் இயற்கை, மாறாத சில விதிகளுக்கு உட் பட்டவையாக இருப்பதை பொதுவாக ஒப்புக்கொள்வர். ஒத்த நிலைமைகள் எப்போதும் ஒத்த விளைவுகளையே உருவாக்குகின்றன, என்பது இயற்கையில் உள்ள அறிவியல் விதியாகும். ஆனால் சமூக மாற்றத்தையோ அல்லது வளர்ச்சியையோ விதிகளுக்குள் கொண்டு வரயியலாது என்பது, பலகாலமாக கூறப்பட்டு வரும் கருத்தாகும். இதனை மார்க்சியம் மறுத்து, இயற்கையில் உள்ள மாற்றத்தை உணர்த்தும் அறிவியலைப் போல், சமூக மாற்றத்திற்கான விதிகளையும் அறிந்து கொள்ளலாம், என்று சமூக வளர்ச்சியை அறிவியல் கண் ணோட்டத்தில் விளக்குகிறது. இதற்கு வரலாற்றியல் பொருள் முதல்வாதம் என்று பெயர்.

**லெனின் கூறுகிறார்:-**

“இயற்கை பற்றிய அறிதலை மனித சமுதாயம் பற்றிய அறிதலாகவும் (மார்க்ஸ்) விரிவாக்கினார். மார்க்சின் வரலாற்றி யல் பொருள்முதல்வாதம் விஞ்ஞானச் சிந்தனைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாக அமைந்தது. **முன்பெல்லாம் வரலாற்றையும் அரசியலையும் பற்றிய கருத்துக்களில் குழப்பமும் தான்தோன்றித் தனமும் ஆதிக்கம் செலுத்தி வந்தன. இப்போது அவை போய், வியப்பூட்டும் அளவுக்கு ஒருமித்த முழுமையும் உள்ளிணக்கமும் கொண்ட ஒரு விஞ்ஞானத் தத்துவம் வந்துவிட்டது.**

வரலாற்றியல் பொருள்முதல்வாதம் என்ற இந்தத் தத்துவம் காட்டுவதென்ன? உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் விளை வாக ஒரு சமுதாய அமைப்பு முறையிலிருந்து அதைவிட மேலான இன்னொரு சமுதாய அமைப்பு முறை எப்படி வளர்கிறது என்பதை - உதாரணமாக, நிலப்பிரபுத்துவச் சமுதாய அமைப்பு முறையிலிருந்து முதலாளித்துவச் சமுதாய அமைப்பு முறை எப்படி வளர்கிறது என்பைதை - அது காட்டுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

இயற்கை என்பது - அதாவது வளர்ச்சி பெற்றுக் கொண்டேயிருக்கும் பருப்பொருள் என்பது - மனிதனுக்கு அப்பால் சுயமாக இருந்து வருகிறது. இந்த இயற்கையை மனித அறிவு பிரதிபலிக்கிறது. அதே போலதான் மனிதனின் சமுதாய அறிவு எனப்படுவதும் (அதாவது தத்துவஞானம், மதம், அரசியல் முதலானவை சம்பந்தமாக மனிதன் கொண்டிருக்கும் பல்வேறு கருத்துக்களும் போதனைகளும்) சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு முறையைப் பிரதிபலிக்கிறது. அரசியல் நிறுவனங்கள் என்பவையெல்லாம் பொருளாதார அடித்தளத்தின் மீது நிறுவப்பட்ட மேல் கட்டமைப்பாகும்."

*மார்க்சியத்தின் மூன்று தோற்றுவாய்களும்*
*மூன்று உள்ளடக்கக் கூறுகளும்*

இதனை மறுத்து சமுதாய வளர்ச்சி என்பது இயற்கையின் வளர்ச்சியிலிருந்து பெருமளவிற்கு மாறுபடுகிறது. இயற்கையில் உணர்வுள்ள சக்திகள் இருப்பதில்லை, ஆனால் சமுதாயத்தில் உணர்வு பெற்றுள்ள மக்கள் செயல்படுகிறார்கள். மக்களின் விருப்பப்படி, அதாவது மக்களிடம் காணப்படும் உணர்வுகளின்படி அவர்களால் முன்வைக்கப்பட்ட லட்சியமே, சமூக வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது என்று கருத்துமுதல்வாத தத்துவவாதிகள், மற்றும் மதவாதிகள் கூறிவருகிறார்கள். ஆனால் மார்க்சியம் தத்துவயியல், மதம், அரசியல் நிறுவனங்கள் போன்றவை எல்லாம் பொருளாதார அடித்தளத்தின் மேல் உருவான மேல்கட்டமைப்பாகும் என்று நிறுவுகிறது.

வரலாற்றை இயக்க மக்கள் தேவைப்படுகிறார்கள், இயற்கை வளர்ச்சிக்கு மக்களின் நடவடிக்கை தேவையில்லை என்பதை அறிந்த மார்க்சியம், சமூகத்தில் செயல்படும் மக்கள், தாம் நினைத்தப்படி சமூகத்தை அமைத்துக்கொள்ள முடியவில்லை என்பதையும் அறிவுறுத்துகிறது.

## மார்க்ஸ் கூறுகிறார்:-

"மனிதர்கள் தங்களுடைய வரலாற்றை உருவாக்குகிறார்கள். ஆனால் தங்கள் விருப்பத்திற்கேற்ப அதை உருவாக்கிக் கொள்ள முடியவில்லை, தாங்களே தேர்ந்தெடுக்கும் சூழ்நிலைமைகளுக்கு ஏற்றபடி இல்லாமல் கடந்த காலத்திலிருந்து கைமாற்றிக் கொடுக்கப்பட்ட, தயாராயுள்ள சூழ்நிலைமைகளுக்கு, தாங்கள் நேரடியாகச் சந்திக்கும் சூழ்நிலைமைகளுக்கு ஏற்பவே வரலாற்றை உருவாக்குகிறார்கள். "

*- லூயி போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர்*



படிப்பகம்

உணர்வோடு செயல்படும் மக்கள், அவர்களது மனம், சிந்தனை போன்றவற்றை சாராத புறநிலை சூழ்நிலையில் வாழ்கிறார்கள். ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்க்கைச் சாதனங்களுக்காக இயற்கையுடனும், பிறமனிதர்களுடனும் குறிப்பிட்ட உறவை நிகழ்த்துகிறான். இந்த பொருளாயத வாழ்க்கை, அவர்களது சமுதாய வாழ்நிலைகளைத் தோற்றுவிக்கிறது. அதாவது, இதுவரை சமூகத்தில் வளர்ச்சியுற்ற, உற்பத்திச் சாதனங்களைக் கொண்டே மக்கள் உற்பத்தியில் ஈடுபட வேண்டியுள்ளது. அதனால் தான் மக்கள் தாம் விரும்பும் படியான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முடிவதில்லை. **பொருளாயத வாழ்விற்காக மக்களின் உழைப்பு நடவடிக்கைகளே சமுதாய வாழ்நிலையை உருவாக்குகிறது. இந்த சமூக வாழ்நிலையே, சமூக உணர்வுநிலையை நிர்ணயிக்கிறது.**

சமூக வாழ்நிலை, சமூக உணர்வுநிலை ஆகியவற்றிற்கு இடையே உள்ள உறவை, அதாவது சமூகத்தில் நிகழும் அகநிலை, புறநிலை ஆகியவற்றை ஆராய்ந்த மார்க்சியம், **சமூக வாழ்நிலை தான் சமூக உணர்வுநிலையை நிர்ணயிக்கிறது என்ற முடிவிற்கு வருகிறது.**

**இதனை மார்க்ஸ் கூறுகிறார்:-**

> " இதன் மூலம் நான் உருவாக்கிய பொதுவான முடிவை - இந்த முடிவுக்கு வந்தவுடன் அதுவே என்னுடைய ஆராய்ச்சிகளுக்கு வழிகாட்டும் கொள்கையாக மாறியது - பின்வருமாறு சுருக்கிச் சொல்லலாம். மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக ஈடுபடும் சமூக உற்பத்தியில் திட்டவட்டமான உறவுகளில் தவிர்க்க முடியாத வகையில் ஈடுபடுகிறார்கள். இந்த உறவுகள் அவர்களுடைய சித்தங்களிலிருந்து தனித்து நிற்பவையாகும், அதாவது அவர்களுடைய உற்பத்தியின் பொருளாயத சக்திகளில் வளர்ச்சியில் அந்தக் குறிப்பிட்ட கட்டத்துக்குப் பொருத்தமான உற்பத்தி உறவுகளாகும்.
>
> இந்த உற்பத்தி உறவுகளின் கூட்டுமொத்தமே சமூகத்தின் பொருளாதார அமைப்பாக, அதன் உண்மையான அடித்தளமாக அமைகிறது. இதன் மீது சட்டம், அரசியல் என்ற மேற்கட்டமைப்பு எழுப்பப்பட்டு, அதனோடு பொருந்தக் கூடிய சமூக உணர்வின் குறிப்பிட்ட வடிவங்களும் உருவாகின்றன. பொருளாயத வாழ்க்கையின் உற்பத்தி முறை சமூக, அரசியல், அறிவுத்துறை வாழ்வின் பொதுவான போக்கை நிர்ணயிக்கிறது. **மனிதர்களின் உணர்வுநிலை அவர்களுடைய வாழ்நிலையை நிர்ணயிப்ப**

www.padippakam.com

தில்லை, அவர்களுடைய சமூக வாழ்நிலையே அவர்களுடைய உணர்வுநிலையை நிர்ணயிக்கிறது.

வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், சமூகத்தின் பொருளாயத உற்பத்திச் சக்திகள் அன்றைக்கிருக்கின்ற உற்பத்தி உறவுகளோடு - அல்லது அவற்றைச் சட்டபூர்வமான வார்த்தைகளில் வெளிப்படுத்துகின்ற சொத்துரிமை உறவுகளோடு - இதுவரை அவை இயங்கி வந்திருக்கின்ற சுற்றுவட்டத்துக்குள் மோதுகின்றன. இந்த உறவுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கான வடிவங்கள் என்பதிலிருந்து அவற்றின் மீது மாட்டப்பட்டிருக்கும் விலங்குகளாக மாறிவிடுகின்றன. இதன் பிறகு சமூகப் புரட்சியின் சகாப்தம் ஆரம்பமாகிறது.

பொருளாதார அடித்தளத்தில் ஏற்படும் மாற்றங்கள், அந்த மாபெரும் மேற்கட்டுமானம் முழுவதையுமே சீக்கிரமாகவோ அல்லது சற்றுத் தாமதமாகவோ, மாற்றியமைக்கின்றன. இப்படிப்பட்ட மாற்றங்களை ஆராய்கிற பொழுது உற்பத்தியின் பொருளாதார நிலைமையில் ஏற்படுகிற பொருள்வகை மாற்றங்களுக்கும் (இயற்கை விஞ்ஞானத்தைப் போல இதைத் துல்லியமாக நிர்ணயிக்க முடியும்) சட்டம், அரசியல், மதம், கலைத் துறை அல்லது தத்துவஞானத் துறைகளில் - சுருக்கமாகச் சொல்வதென்றால் சித்தாந்தத் துறைகளில் - இந்தப் போராட்டத்தை மனிதர்கள் உணர்ந்து கொண்டு அதில் இறுதி முடிவுக்காகப் போராடுகின்ற கொள்கை வடிவங்களுக்கும் வேறுபாட்டைக் காண்பது எப்பொழுதுமே அவசியமாகும்.

ஒரு தனிநபர் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறார் என்பதைக் கொண்டு நாம் அவரைப் பற்றி முடிவு செய்வதில்லை. அது போலவே, இப்படி மாறிக் கொண்டிருக்கும் காலகட்டத்தை அதன் உணர்வைக் கொண்டு முடிவு செய்ய முடியாது. அதற்கு மாறாக, இந்த உணர்வைப் பொருளாயத வாழ்க்கையின் முரண்பாடுகள் மூலமாக, உற்பத்தியின் சமூக சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் இடையே உள்ள போராட்டத்தின் மூலமாகவே விளக்க முடியும்.

எந்த சமூக அமைப்பும் அதற்குப் போதுமான உற்பத்தி சக்திகள் அனைத்தும் வளர்ச்சியடைவதற்கு முன்பாக ஒரு போதும் அழிக்கப்படுவதில்லை, புதிய, உயர்வான உற்பத்தி உறவுகள் தாங்கள் நீடித்திருக்கக் கூடிய பொருளாயத



படிப்பகம்

நிலைமைகள் பழைய சமூகத்தின் சுற்றுவட்டத்துக்குள் முதிர்ச்சி யடைவதற்கு முன்பே பழைய உற்பத்தி உறவுகளை ஒருபோதும் அகற்றுவதில்லை. எனவே மனித குலம் தன்னால் சாதிக்கக் கூடிய கடமைகளையே தனக்குத் தவிர்க்க முடியாதபடி விதித்துக் கொள்கிறது. ஏனென்றால் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய பொருளாயத நிலைமைகள் முன்பே இடம் பெற்ற பிறகு அல்லது குறைந்தபட்சம் உருவாக்கிக் கொண்டிருக்கும் பொழுதுதான் அந்தப் பிரச்சினையே தோன்றுகிறது என்பது அதிக நுணுக்கமாக ஆராயும் பொழுது புலப்படும். ”

*அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு*
*ஒரு பங்களிப்பு முன்னுரை*

இம் முன்னுரையின் இந்தப் பகுதியில் மார்க்ஸ் தன்னுடைய தத்துவயியல் கண்ணோட்டமான பொருள்முதல்வாதத்தை மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

## இந்த முன்னுரையின் பொழிப்பு:-

மனிதர்கள் தமது வாழ்க்கைக்காக உற்பத்தி செய்திடும் போது, தவிர்க்க முடியாத வகையில் திட்டவட்டமான உறவு களில் ஈடுபடுகிறார்கள். இந்த உறவுகள் மனிதர்களுடைய சித்தங்களிலிருந்து தனித்து புறநிலையாக இருப்பவையாகும்.

இதுவரை வளர்ச்சியடைந்துள்ள பொருளாதார உற்பத்திச் சக்திகளின் மட்டத்திற்கு ஏற்ப, உற்பத்தி உறவு ஏற்படுகிறது. இந்த உற்பத்தியின் கூட்டுமொத்தமே அன்றைய அரசியல் பொருளாதார அமைப்பாகும், அதுவே அச்சமூகத்தின் அடித்தள மாகும்.

இந்த அடித்தளத்தின் மீது சட்டம், அரசியல் போன்ற மேல் கட்டமைப்பு எழுப்பப்படுகிறது. இதற்கு பொருத்தமாக சமூக உணர்வின் வடிவங்கள் தோன்றுகின்றன.

மனிதர்களின் உணர்வுநிலை அவர்களுடைய வாழ்நிலையை நிர்ணயிப்பதில்லை, அவர்களுடைய சமூக வாழ்நிலையே அவர் களுடைய உணர்வுநிலையை நிர்ணயிக்கிறது.

அடித்தளத்தில் ஏற்படுகிற மாற்றங்கள், மேல்கட்டமைப்பின் முழுமையும் விரைவாக அல்லது சற்று மெதுவாக மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

www.padippakam.com

அடித்தளமே மேல்கட்டமைப்பை நிர்ணயிக்கிறது.

இவ்வாறு முடிவெடுத்ததிலிருந்து மார்க்ஸ் இந்த முடிவையே, தனது பொதுவான தத்துவயியல் கண்ணோட்டமாக, தமது அராய்ச்சிகளுக்கு வழிகாட்டும் கொள்கையாக அமைத்துக் கொண்டார்.

ஒரு சமூகத்தின் முரண்பாட்டை, அந்த சமூகத்தின் உற்பத்தியில் இருந்துவருகிற உற்பத்தி சத்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் உள்ள போராட்டத்தின் வழியாகவே விளங்கிக் கொள்ள முடியும்.

ஒரு சமூக அமைப்பிலிருந்து மற்றொரு அமைப்பிற்கு மாற வேண்டுமானால், அங்கு உற்பத்தி சக்திகள் போதுமான அளவிற்கு வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும், இதற்கு முன்பாக பழைய சமூகம் அழிக்கப்பட முடியாது.

பழைய உற்பத்தி உறவுகள் மாறவேண்டும் என்றால், புதிய உற்பத்தி சக்திகள் முதிர்ச்சியடைந்திருக்க வேண்டும்.

இந்த புறநிலை விதிகளின் படியே, மனித குலம் தமது சாதிக்கக் கூடிய கடமைகளை அமைத்துக் கொள்கிறது.

பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய பொருளாதார நிலைமைகள் தோன்றுகின்ற பொழுதுதான் அதற்கான முடிவும்கிடைக்கும்.

இதன்படி மார்க்ஸ் கூறுவது, மனித சித்தத்தை சாராத புறநிலை போக்காக, உற்பத்தி நடைபெறுகிறது, அப்போது ஏற்படுகிற உற்பத்தி உறவுகளின் அடிப்படைகளே, அன்றைய பொருளாதார வாழ்வாகவும் சமூகத்தின் அடித்தளமாகவும் அமைகிறது. இந்த அடித்தளத்திற்கு ஏற்ப சட்ட, அரசியல் போன்ற மேல்கட்டமைப்பு தோன்றுகிறது. மனிதர்களின் உணர்வுநிலை அவர்களுடைய வாழ்நிலையை நிர்ணயிப்பதில்லை, அவர்களுடைய சமூக வாழ்நிலையே அவர்களுடைய உணர்வுநிலையை நிர்ணயிக்கிறது. இதுவே மார்க்சுடைய சமூகவியல் கண்ணோட்டமான வரலாற்றியல் பொருள்முதல்வாதம் என்ற தத்துவயியல் பிரிவாக அமைகிறது. இதனை புரிந்து கொள்வதற்கு மார்சியம் கூறும் அடித்தளம் மேற்கட்டமைப்பு என்ற கருத்தாக்கத்தை சற்று விரிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

சமூகஉற்பத்தி முறை தான், எல்லா வகையான சமூக உணர்வு நிலைகளையும் தீர்மானிக்கின்றன. உற்பத்தி முறை என்பது உற்பத்தி சக்திகள், உற்பத்தி உறவுகள் ஆகிய இரண்டையும் உள்ளடங்கியவை


படிப்பகம்

www.padippakam.com

யாகும். இந்த பொருளாதார அமைப்பையே அடித்தளம் என்றழைக் கப்படுகிறது.

தத்துவயியல், மதம், அரசியல், சட்டம், அறநெறி, பண்பாடு, கலை போன்றவை குறிப்பிட்ட பொருளாதார அமைப்பிற்கு ஏற்ப தோன்றும் மேற்கட்டமைப்பாகும்.

அடித்தளத்திற்கும் மேற்கட்டமைப்புக்கும் இடையே ஒன்றுடனொன் றான தொடர்பு நிலவுகிறது. இந்தத் தொடர்பில் அடித்தளம் முதன்மை யாகவும், மேற்கட்டமைப்பை தோற்றுவிக்கும் காரணமாகவும் இருக் கிறது. ஆகவே சமூகத்தின் அடித்தளத்திற்கு ஒத்த மேல்கட்டமைப்பு உருவாகிறது. இவ்வாறு கூறுவதால் மேற்கட்டமைப்பு என்பது தன் முனைப்பின்றி, அடித்தளத்தின் பிரதிபலிப்பாக மட்டும் செயல்படுவதாக சொல்லிவிட முடியாது. மேல்கட்டமைப்பின் தனிப் போக்கை மார்க்சியம் மறுத்திடவில்லை. அடித்தளத்தின் மீதான மேல்கட்டமைப்பின் தாக்கம், அடித்தளத்திற்கு பொருத்தமானதாக இருக்கும் என் பதைத்தான் வலியுறுத்துகிறது, இதனால் தான் மேல்கட்டமைப் பின் சுதந்திரம் சார்புநிலையானது என்ற கருத்தைத் தெரிவிக் கிறது. தீர்மானகரப் பங்காற்றுவது அடித்தளமேயாகும். அடித் தளத்தால் உருவாக்கப்பட்ட மேற்கட்டமைப்பு, அடித்தளத்தை உறுதிப்படுத்துகிறது. தோன்றிய அடித்தளத்தை வலுபடுத்த முடியுமே தவிர அடித்தளத்தில் எந்த மாற்றத்தையும், மேல் கட்டமைப்பால் உருவாக்க முடியாது.

மேற்கட்டமைப்பு என்பதின் தன்முனைப்பான செயற்பாட்டை மறுத்திடாமலும், இதன் செயப்பாட்டின் இன்றியமையாததை மார்க்சியம் அறிந்திடாமலும் இல்லை, அடித்தளத்தில் ஏற்படும் மாற்றம், மேற் கட்டமைப்பில் உடனே, தானாகவே ஏற்பட்டுவிடும் என்றும் கூறவில்லை, மேற்கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்கள், அடித்தளத்தால் தீர்மானிக்கப்படுகிறது. மேற்கட்டமைப்பு, அடித்தளத்தால் நிர்ணயிக்கப்பட்ட வகையில் சுதந்திரத்தோடு செயல்படுகிறது என்பதைத்தான் மார்க்சியம் வலியுறுத்துகிறது.

சமூக வாழ்வின் அடிப்படை பொருளுற்பத்தி முறையில் அடங்கி யிருக்கிறது. இந்த பொருள் உற்பத்திமுறை என்பது உற்பத்தி சக்திகள், உற்பத்தி உறவுகள் என்ற இவ்விரண்டையும் உட்கொண்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

## ஆ. உற்பத்திச் சக்திகள் (Productive Forces)

பொருள் உற்பத்தியே சமூகத்தின் அடிப்படையாகும். மக்கள், வாழ்வதற்கு உணவு, உடை, உறைவிடம் போன்ற தேவையான பொருளை உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. வாழ்விற்கான பொருட்களை தோற்றுவிக்கும், மக்களின் செயற்பாடுதான் உற்பத்தி என்றழைக்கப்படுகிறது. இந்த உற்பத்தி நிகழ்த்துவதற்கு, **உழைப்பின் குறிப்பொருள், உழைப்புக் கருவிகள், உழைப்பு** ஆகிய மூன்றும் தேவைப்படுகிறது.

## உழைப்பின் குறிப்பொருள் (Objects of labour)

உற்பத்தியை தொடங்குவதற்கும், விளைபொருட்களைச் செய்வதற்கும் தேவைப்படும் பொருளை உழைப்பின் குறிப்பொருள் என்றழைக்கப்படும். அதாவது எந்தப் பொருட்களின் மீது உழைப்பாளி, தமது உழைப்பை செலுத்துகிறாரோ, அந்தப் பொருள் உழைப்பின் குறிப்பொருள்.

தொடக்க காலத்தில் இயற்கையில் இருந்து மட்டுமே, உழைப்பின் குறிப்பொருளை எடுத்துப் பயன்படுத்தினர். அவ்வாறு இயற்கையிலிருந்து எடுக்கப்படும் போது, அவை உற்பத்திச் சக்தியாகிறது. கையாளப்படாத பொருட்கள் வெறும் இயற்கையின் ஒரு பகுதி என்று தான் அழைக்கப்படும்.

உழைப்பின் குறிப்பொருள் இரண்டு வகைப்படும். ஒன்று இயற்கையில் நேரடியாக கிடைப்பவை, அவை பூமியிலிருந்து கிடைக்கும் கனிமவளங்கள், நீரிலிருந்து கிடைக்கும் மீன்கள், வனப்பொருட்கள் மற்றும் நிலம் போன்றவை. சாகுபடிக்கு உகந்த நிலமே விவசாயத்திற்குரிய உழைப்பின் குறிப்பொருளாகும்.

மற்றது, ஏற்கெனவே உழைப்பிற்கு உட்படுத்தப்பட்டதான கச்சாப் பொருட்கள். நூற்பாலைக்குத் தேவையான பருத்தி, ஏற்கெனவே உருக்கி ஆயத்தமான நிலையிலுள்ள இரும்பு, அதாவது இரும்பைக் கொண்டு உருவாக்கப்படும் பொருளுக்கு, இரும்பு கச்சாப்பொருளாகும், இது போன்றவை இவ்வகையினைச் சேர்ந்ததாகும்.

உழைப்புச் செயல்பாட்டில் உழைப்புக் கருவிகளைக் கொண்டு, மனிதன் தனது தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, உழைப்பின் குறிப்பொருளை மாற்றுகிறான். இந்த உழைப்பின் விளைவே உற்பத்திப் பொருள் எனப்படுகிறது.



படிப்பகம்

## உழைப்பின் குறிப்பொருளைப் பற்றி மார்க்ஸ் "மூல தனத்தில்" எழுதுகிறார்:-

"கன்னி நிலம் (பொருளாதார வழியில் பேசுவதானால் இதில் நீரும் அடங்கும்) இப்படியே பயன்படுத்தத் தக்க தயார் நிலையில் அவசியப் பண்டங்கள் அல்லது வாழ்வுச் சாதனங்களை மனி தனுக்கு வழங்குகிறது. அது மனிதனைச் சாராமல் இயற்கை யாகவே இருப்பது, மனித உழைப்பின் சர்வப்பொது குறிப் பொருளாய் அமைவது. உழைப்பு சில பொருட்களைச் சுற்றுப் புறத்துடனான நேரடித் தொடர்பிலிருந்து பிரித்தெடுக்க மட்டுமே செய்கிறது.

அந்தப் பொருட்களெல்லாம் உழைப்பின் குறிப்பொருட்கள், இயற்கை தானாகவே வழங்குபவை. இயற்கையாகவே அமைந்த நீரில் நாம் பிடிக்கிற மீன்களும், இயற்கையான வனத்தில் நாம் வெட்டுகிற மரங்களும், படிவ நாளங்களிலிருந்து நாம் எடுக்கிற தாதுப் பொருட்களும் இப்படிப்பட்டவையே. மறுபுறம், உழைப்பின் குறிப்பொருள் முந்தைய உழைப்பின் மூலம் வடிகட்டப்பட்டதென்று சொல்லக் கூடுமானால், அதைக் கச்சாப் பொருள் என்று அழைக் கிறோம்.

ஏற்கனெவே எடுக்கப்பட்டுக் கழுவுவதற்குத் தயாராய் உள்ள தாதுப்பொருள் இப்படிப்பட்டதே. கச்சாப் பொருள் அனைத்தும் உழைப்பின் குறிப்பொருளாகும், ஆனால் உழைப்பின் குறிப் பொருள் ஒவ்வொன்றும் கச்சாப்பொருள் அன்று. உழைப்புச் சாதனங்களைக் கொண்டு சிறிது மாற்றத்துக்கு உட்படுத்தப் பட்டவையே கச்சாப்பொருளாக முடியும்."

*மூலதனம் தொகுதி 1 பக்கம் 247*

## உழைப்புக் கருவிகள் (Instruments of labour)

கருவிகளைப் பயன்படுத்தாமல், உழைப்பை உற்பத்தியில் செலுத்த முடியாது. மனிதன், உழைப்புக் கருவிகளை, உழைப்பின் குறிப் பொருளின் மீது செயல்படுத்தியே பொருட்களை உற்பத்தி செய்கிறான். தொடக்க காலத்தில் கற்கோடாரி, மண்வெட்டி, வில் அம்பு ஆகியவை யும், இன்றைய காலத்தில் இயந்திரம், சாலைகள், போக்குவரத்துச் சாதனங்கள், தொழில்நுட்பம் போன்றவையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். உழைப்புக் கருவிகளோடு சேர்ந்து இந்த தொழில்கூடம், கிடங்கு, ரயில்வே, கால்வாய், மின்சாரம் போன்ற சாதனங்களும் சேர்ந்து உழைப்புக் கருவிகளாகிறது.

www.padippakam.com

உழைப்புக் கருவிகளை தோற்றுவிப்பதிலிருந்து, மனித உழைப்பு தொடங்குகிறது எனலாம். ஒவ்வொரு சமூக பொருளாதார அமைப்பையும், அன்றைய உழைப்புக் கருவிகளின் வளர்ச்சியின் அளவைக் கொண்டே, அதன் வளர்ச்சி நிலையை அறிந்து கொள்ளலாம். உற்பத்தி சக்தியின் வளர்ச்சிக்கு உழைப்புக் கருவிகள் பெரும் பங்காற்றுகின்றன. உற்பத்தி முறையின் மாற்றம் என்பது உழைப்புக் கருவியின் வளர்ச்சியின் அடிப்படையில் அமைகிறது. உற்பத்தி முறையின் மாற்றம் சமூக மாற்றமாக காட்சித்தருகிறது.

பண்டைய கூட்டுவாழ் சமூகத்தில் கற்கோடாரி, தடித்த கழிகள் போன்றவற்றை உழைப்புக் கருவிகளாகப் பயன்படுத்தினர். அதனால் அச் சமூகம் கொண்டுள்ள எளிய கருவிகளால் இயற்கையை வெல்வதற்கு சக்தி குறைந்தவர்களாகவே காணப்பட்டனர். அடிமைச் சமூகத்தில் இரும்பாலன கருவிகள் வளர்ச்சியடைந்திருந்தது. நிலப்பிரபுத்துவ சமூகத்தில் இரும்பை உருக்கும் முறையின் தொடர்ச்சியாக, பட்டறைக்குத் தேவையான கருவிகள் வளர்ச்சியடைந்தது, இன்றைய முதலாளித்துவ சமூகத்தில் இயந்திரம், கணிப்பொறி போன்ற சாதனங்கள் உழைப்பிற்குத் துணைபுரிகிறது. தற்போது இயற்கையின் மீது செலுத்தும் சக்தி பெருமளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது.

## உழைப்புக் கருவிகளைப் பற்றி மார்க்ஸ் "மூலதனத்தில்" எழுதுகிறார்:-

> உழைப்புக் கருவிகள் என்பது உழைப்பாளி தனக்கும் தன் உழைப்பின் குறிப்பொருளுக்கும் இடையே வைப்பதும், அவரது செயற்பாட்டின் கடத்தியாகப் பயன்படுவதுமான பொருள், அல்லது பொருட் தொகுதி ஆகும். அவர் சில பொருட்களின் யாந்திரிக, பௌதிக, இரசாயனப் பண்புகளைப் பயன்படுத்தி பிற பொருட்களைத் தமது நோக்கங்களுக்கு சேவகம் புரியச் செய்கிறார்.
>
> பழங்கள் போன்ற தயார் நிலையிலுள்ள வாழ்வுச் சாதனங்களை சேகரிப்பதில் மனிதனின் கைகால்களே உழைப்புக் கருவிகளாகப் பயன்படுகின்றன. இவற்றை விலக்கிவிட்டுப் பார்த்தால், உழைப்பாளி சொந்தமாக்கிக் கொள்கிற முதற்பொருள் உழைப்பின் குறிப்பொருளன்று, உழைப்புக் கருவியே.
>
> இவ்வாறு, இயற்கை அவரது செயற்பாட்டுக்குதவும் உறுப்புகளில் ஒன்றாகின்றது. அதனை அவர் தமது உறுப்புகளோடு இணைத்துக் கொண்டு விலிலிய நூல் என்ன சொன்னாலும்



படிப்பகம்

தமது ஆகிருதியை ஓங்கி வளரச் செய்கிறார். பூமி அவரது ஆதி உக்கிராணமாய் விளங்குகிறது. எடுத்துக்காட்டாக, வீசுவதற்கும், அரைப்பதற்கும், அடிப்பதற்கும், வெட்டுவதற்கும் இன்ன பிற காரியங்களுக்குமான கற்களை அது அவருக்கு வழங்குகிறது. பூமியே ஓர் உழைப்புக் கருவிதான்.

ஆனால், அது விவசாயத்தில் அவ்வாறு பயன்படுத்தப்படுவதற்கு, வரிசையான இதர பல உழைப்புச் சாதனங்களும், ஒப்பளவில் உழைப்பின் வளர்ச்சி நிலையும் அவசியம். உழைப்பு சிறிதளவு வளர்ச்சி கண்டதுமே, அதற்கென தயாரிக்கப்பட்ட தனிவகைக் கருவிகள் தேவைப்படுகின்றன. இவ்வாறு மிகப் பழங் குகைகளில் கற்கருவிகளையும் கல்லாயுதங்களையும் காண்கிறோம். மனித வரலாற்றின் மிக ஆரம்ப காலத்தில், பழக்கப்பட்ட மிருகங்கள், அதாவது குறிக்கோளுடன் வளர்தெடுக்கப்பட்டு உழைப்பினால் மாற்றங்களுக்குள்ளான மிருகங்கள், - திருத்திச் செப்பனிட்ட கற்கள், மரம், எலும்புகள், கிளிஞ்சல்கள் ஆகியவற்றோடு - கூட உழைப்புக் கருவிகளாக முக்கியப் பங்குவகிக்கின்றன.

உழைப்புக் கருவிகளின் உபயோகமும் புனைவும் குறிப்பிட்ட சில மிருக ராசிகளிடையே இவை முதிரா நிலையில் காணப்பட்ட போதிலும் மனித உழைப்பு நிகழ்முறைக்கே உரித்தான தனிச் சிறப்புகளாகும், எனவே, கருவி செய்யும் மிருகம் என்று மனிதனுக்கு இலக்கணம் வகுக்கிறார் பிராங்க்ளின்.

**மறைந்து போய்விட்ட மிருக ராசிகளை நிர்ணயிப்பதற்கு புதைபடிவ எலும்புகள் எவ்வளவு முக்கியத்துவமுள்ளவையோ, மறைந்து போய்விட்ட சமூகப் பொருளாதாரக் கருவிகளின் மீதமிச்சங்களும் அதே அளவு முக்கியத்துவமுள்ளவையாகும்.**

வெவ்வேறு பொருளாதார சகாப்தங்களை நாம் வேறுபடுத்திப் பார்க்க உதவுவது தயாரிக்கப்பட்ட பொருட்களை எவை என்பதன்று, அவை தயாரிக்கப்பட்டது எப்படி என்பதும், எக்கருவிகளால் என்பதுமே. **உழைப்புக் கருவிகள் மனித உழைப்பு அடைந்துள்ள வளர்ச்சி நிலைக்கு ஓர் அளவுகோலை வழங்குவது மட்டுமல்லாமல், அந்த உழைப்பு நடைபெறுகிற சமூக நிலைமைகளைச் சுட்டிக் காட்டும் குறிகளாகவும் உள்ளன.**

www.padippakam.com

....இன்னும் விரிவான அர்த்தத்தில், நாம் உழைப்புக் கருவிகள் என்ற வகையில், உழைப்பை அதன் குறிப்பொருளுக்கு நேரடியாக மாற்றிக் கொடுப்பதற்குப் பயன்படுத்தப்படுபவையும், எனவே ஏதேனும் ஒரு விதத்தில் செயற்பாட்டின் கடத்திகளாகப் பயன்படுபவையுமான அந்தப் பொருட்களோடு கூட, உழைப்பு நிகழ்முறையை நடத்துவதற்கு அவசியமான எல்லாப் பொருட்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இவை நேரடியாக உழைப்பு நிகழ்முறையில் நுழைவதில்லை, ஆனால் இவையின்றி அது நடைபெறவே முடியாது, அல்லது பகுதியளவுக்கே நடைபெற முடியும். பூமி இவ்வகைப்பட்ட சர்வப் பொது கருவி என்பதை மீண்டும் காண்கிறோம். ஏனெனில் உழைப்பாளி நிற்பதற்கு ஓர் இடத்தையும் அவரது செயற்பாடு ஈடுபடுத்தப்படுவதற்கு ஒரு களத்தையும் அது வழங்குகிறது. முந்தைய உழைப்பின் பலனாய் அமைந்து, இவ்வகை உழைப்புக் கருவிகளாகவும் இருப்பவற்றில் பட்டறைகள், கால்வாய்கள், சாலைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

*மூலதனம் தொகுதி 1 பக்கம் 247-248*

## உழைப்பு

இயந்திரமோ, கச்சாப்பொருளோ தானாகவே எதையும் உற்பத்தி செய்திட முடியாது. அதில், மனிதனது உழைப்பு நடவடிக்கை செலுத்தும் போதுதான் உற்பத்தி நடைபெறுகிறது. உழைப்பு என்பது இயற்கை யிடமிருந்து கிடைக்கும் பொருட்களை, மனிதத் தேவைகளை நிறைவு செய்ய முற்படும் நடவடிக்கையாகும்.

மனிதயினம் தமக்குத் தேவையான வாழ்க்கைச் சானதங்களை உற்பத்திச் செய்துகொள்கிறது, இதுவே விலங்கினத்திடமிருந்து மனிதயினத்தைப் பிரித்துக் காட்டுவதாக இருக்கிறது.

உழைப்பு ஒருவகையில் மனிதனையே படைத்தது எனலாம். மனிதன் உழைப்பில் ஈடுபடும்போது திறமையும் தேர்ச்சியும் பெறுகிறான். உழைப்பு செற்பாட்டில் புதுப்புது மேம்பாட்டை புகுத்துகிறான்.

## உழைப்பைப் பற்றி மார்க்ஸ் “மூலதனத்தில்” எழுதுகிறார் :-

உழைப்பு என்பது, முதலாவதாக, மனிதனும் இயற்கையும் பங்குபெறுகிற, மனிதன் தனக்கும் இயற்கைக்கும் இடையிலான பொருளாயதப் பிரதிச் செயல்களைத் தானாகவே தொடங்கி,



படிப்பகம்

முறைப்படுத்தி கட்டுப்படுத்துகிற நிகழ்முறையாகும். மனிதன் இயற்கையின் சக்திகளில் தானும் ஒருவன் என்ற முறையில் தன்னையே இயற்கைக்கு எதிராக நிறுத்திக் கொள்கிறான். இயற்கையின் உற்பத்திகளைத் தன் சொந்தத் தேவைகளுக்குத் தகவமைந்த வடிவத்தில் தனதாக்கி கொள்ளும் பொருட்டு, தோளையும், காலையும், தலையையும், கையையும் அதாவது தன் உடலின் இயற்கைச் சக்திகளை இயங்கச் செய்கிறான். புறவுலகின் மீது இவ்வாறு செயல்பட்டு, அதனை மாற்றுவதன் மூலம் அவன் அதே நேரத்தில் தனது தன்மையையும் மாற்றிக் கொள்கிறான்.

..... **முழுக்க முழுக்க மனிதனுக்கே உரியதான உழைப்பு வடிவத்தையே நாம் மனத்தில் கொண்டுள்ளோம். ஒரு நெசவாளரின் செயல்முறைகளை ஒத்தவற்றை சிலந்தி செய்திடுகிறது. கட்டடக் கலைஞர்கள் பலரும் வெட்கித் தலை குனியும்படி தேனீ, தேன் கூட்டை அமைத்திடுகிறது. ஆனால், கட்டடக் கலைஞர் தன் கட்டட அமைப்பை எதார்த்தத்தில் எழுப்பு முன்பே மனத்தில் எழுப்பிக் கொண்டு விடுகிறார், படுமோசமான கட்டடக் கலைஞரையும் தலைசிறந்த தேனீயிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது இதுவே.**

உழைப்பு நிகழ்முறை ஒவ்வொன்றின் முடிவிலும் கிடைக்கும் விளைவு, அந்நிகழ்முறையின் தொடக்கத்திலேயே உழைப்பாளியின் மனத்தில் இருந்ததுதான். அவர் தாம் வேலை செய்கிற மூலப் பொருளில் வடிவ மாற்றத்தை உண்டாக்குவதோடு தமது குறிக்கோளையும் நிறைவேற்றிக் கொள்கிறார்.

இந்தக் குறிக்கோள் அவரது வேலை முறையின் நெறியை நிர்ணயிக்கிறது. அவர் இக் குறிக்கோளுக்குத் தமது சித்தத்தைக் கீழ்ப்படுத்திக் கொண்டாக வேண்டும். இப்படிக் கீழ்ப்படுத்துவது கண நேரத்துக்கு மட்டுமான செயலன்று. உடல் உறுப்புகளை வருத்திக் கொள்வதன்னியில், வேலையின் போது ஆரம்பம் முதல் கடைசி வரை உழைப்பாளியின் சித்தம் அவரது குறிக்கோளுக்குத் தொடர்ந்து இசைவாயிருப்பதையும் நிகழ்முறை அவசியமாக்குகிறது, வேலையில் உன்னிப்பாய் கவனம் செலுத்த வேண்டும் என்பது இதன் பொருள்.

*மூலதனம் தொகுதி 1 பக்கம் 244-245*\

### உற்பத்திச் சக்திகள்

உழைப்பின் குறிப்பொருள், உழைப்புக் கருவிகள் இரண்டும் சேர்ந்து உற்பத்திச் சாதனங்கள் (Means of Production) என்றழைக்கப்படும். இவைகள் கடந்த கால உழைப்பின் விளைபொருளாகும். இவை இரண்டும் தாமே பொருட்களை உற்பத்தி செய்திட முடியாது. உழைப்பைப் பயன்படுத்தாத உற்பத்திச் சாதனங்கள் உயிரற்ற பொருட் குவியலாக, பயனற்று வீணாய்க்கிடக்கும். மக்களின் உழைப்புச்சக்தி இதனோடு இணைந்து செற்பட்டால் தான் உற்பத்தியை நிகழ்த்த முடியும்.

உற்பத்தி அனுபவமும், திறமையும் கொண்ட மக்களின் உழைப்பு சக்தியும், உற்பத்திச் சாதனங்களும் சேர்ந்து **உற்பத்திச் சக்திகள் (Productive Forces)** என அழைக்கப்படும். மக்கள் தான் சமூகத்தின் முதன்மையான உற்பத்திச் சக்தியாகும். உற்பத்திச் சக்திகள் எப்போதும் சமூகத் தன்மை கொண்டவையாக இருக்கிறது.

கனிம வளங்கள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டால் மட்டும், அவைகள் உற்பத்திச் சக்தியாகிவிடாது, அதே போல் வனங்களில் வனச்செல்வங் கள் நிறைந்து இருந்தால் மட்டும் போதாது, மனித உழைப்பு அதில் செலுத்தப்பட்டால் தான், அவை உற்பத்திச் சக்தியாகிறது.

அறிவியலும், தொழில் நுட்பமும் மேம்பாடு அடைவதைத் தொடர்ந்து, உற்பத்திக் கருவிகள் செம்மையுறுகிறது. இதனோடு மக்களின் திறமை தேர்ச்சியும், அனுபவமும் விரிவடைகிறது. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி, சமூகத்தின் வளர்ச்சியை விரிவாக்குகிறது.

## இ. உற்பத்தி உறவுகள் (Relation of Production)

உற்பத்தியை நிகழ்த்தும் போது இயற்கையை மாற்றுகிற அதே நேரத்தில் மக்கள் ஒருவருடன் ஒருவர் இணைந்து செயல்படுகின்றனர், அப்போது உறவுகள் ஏற்படுகிறது. அத்தகைய உற்பத்தி தொடர்பாக நடைபெறும் உறவுகள் தான் உற்பத்தி உறவுகளாகும். சமூகத்தில் நிகழும் உறவுகளில் இதுவே முதன்மை பெற்றவையாக இருக்கிறது. மற்ற உறவுகளை இதுவே தீர்மானிக்கிறது.

தனக்குத் தேவையானவைகளை மனிதன் தன்னந்தனியாக அனைத்தையும் தோற்றுவிக்க முடியாது. தான் உற்பத்தி செய்ததை பிறருக்குக் கொடுத்தும், தனக்கு தேவைப்படும், ஆனால் தன்னால் உரு வாக்கப்படாத பொருளை பிறரிடம் பெற்றும் வாழவேண்டியிருக்கிறது. இந்தச் செயற்பாடுகள், மனிதர்களிடையே குறிப்பிட்ட சமூகப் பிணைப்பு களை உருவாக்குகிறது. இந்த பிணைப்புகள், புறநிலையானவை, அதாவது மனிதனின் உணர்வுநிலையை சாராமல் இருப்பவையாகும்.

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு, ஏற்பவே உற்பத்தி உறவுகள் தோன்றுகிறது. புதிய தலைமுறையினர் தமது முதல் அடியினை, முந்திய தலைமுறையினர் தோற்றுவித்திருக்கும் வாழ்நிலைமைகளின் வளர்ச்சி நிலையின், தொடர்ச்சியாகத் தான் எடுத்துவைக்கின்றனர்.

**உற்பத்தி நிகழும்போது ஏற்படும் அனைத்து உறவுகளும், உற்பத்தி உறவு எனப்பதில்லை. இதில் உள்ள பொருளாரதார உறவுகளே, உற்பத்தி உறவுகள் என்றழைக்கப்படுகிறது. குறிப்பாகச் சொன்னால் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வு ஆகியவற்றின் போது ஏற்படும் நிகழ்வுப்போக்கின் தொடர்பே, உற்பத்தி உறவுகள் எனப்படும்.**

உற்பத்தி உறவுகளில் முதன்மையாக விளங்குவது, உற்பத்திச் சாதனங்களிடையே மனிதர்களுக்கு உள்ள உறவுகள், அதாவது உற்பத்திச் சாதனங்கள் யாருக்கு உடைமையாய் இருக்கின்றன, என்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. உற்பத்திச் சாதனங்கள் முதலாளிகளுக்கு சொந்தமாக இருப்பதால், அப்போது உற்பத்தியின் விளைபொருட்கள் முதலாளிக்குச் சொந்தமாகிவிடுகிறது. **உற்பத்திச் சாதனங்கள் யாருக்கு உடைமையாக இருக்கின்றன என்பதே, உற்பத்தி உறவுகளை நிர்ணயிக்கின்றன.** அதன்படி, உற்பத்திப் பொருட்களின் வினியோகம் தனிச்சொத்து அடிப்படையில் சுரண்டல் கூட்டத்தின் நலன்களுக்கு ஏற்ப நடைபெறுகிறது. சமூகம் சுரண்டல் சமூகமாக நிலவுகிறது. சமூகத்தில் தனியுடைமை நிலவினால், அங்கே ஆதிக்கம், கீழ்படிதல் என்ற சுரண்டல் உறவுகள் செயல்படுகிறது.

முதலாளித்துவ சமூகத்தில் உடைமைகள் முதலாளிகளுக்கு தனியுடைமையாய் இருக்கின்றன. சட்டப்படியான பெயரளவுக்கு சுதந்திரமாக உள்ள தொழிலாளி வேலைக்கு அமர்த்தப்படுகிறான். எந்த உடைமையும் அவனுக்கு சொந்தமில்லை, இந்த நிர்பந்த நிலைமையில் அவன் தனது உழைப்புச் சக்தியை விற்கவேண்டிய கட்டாயத்திற்கு ஆட்படுகிறான்.

உற்பத்தி சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் இடையேயான ஒற்றுமையே குறிப்பிட்ட சமூக பொருளாதார அமைப்பாக நிலவுகிறது. உழைப்பு கருவிகளிலும், உழைப்பு திறமைகளிலும் ஏற்படும் படிப்படியான வளர்ச்சி உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியை பெருக்குகின்றன. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிகளில் ஏற்படும் மாற்றங்களை ஒட்டி, உற்பத்தி உறவுகளிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும், ஆனால் உற்பத்திச் சக்திகளில் குறிப்பிடும்படியான மாற்றங்கள் ஏற்படும் பொழுது, சொத்துடைமை வர்க்கம் பழைய உற்பத்தி உறவுகளில்

மாற்றம் ஏற்படுவதற்கு தடையாய் நிற்கிறது. இந்த உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையேயான மோதல், சமூகப் புரட்சிக்கு வித்திடுகிறது. இதனைத் தொடர்ந்து பழைய சமூகப் பொருளாதார அமைப்பு மறுதலிக்கப்பட்டு, புதிய சமூக பொருளாதார அமைப்பாக உருவெடுக்கிறது.

## ஈ. உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையேயான இயக்கவியல் தொடர்பு

உற்பத்திமுறையில் இரண்டு இன்றியமையாத தன்மை உற்பத்தி சக்திகளும், உற்பத்தி உறவுகளும் ஆகும். இவற்றில் ஒன்றை தனியே பிரித்து பார்க்க முடியாது. இவை இரண்டும் வளர்ந்து கொண்டே இருக்கிறது.

உற்பத்திச் சக்திகளின் இயல்புக்கு பொருத்தமாக, உற்பத்தி உறவுகள் அமைந்திருப்பது, சமூக வளர்ச்சிக்கு, இன்றியமையாதவை யாகும். ஆனால் இந்த பொருத்தம் தற்காலிகமானதே. உற்பத்தி வளர்ச்சியின் தொடக்க கட்டத்தில் மட்டுமே இசைவான முறையில் உற்பத்தி உறவுகள் நிலவுகிறது. வளர்ச்சி முதிரும் போது முரணும் பெருகுகிறது.

உற்பத்தியின் வளர்ச்சி என்பது உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி யிலிருந்தே தொடங்குகிறது. உழைப்புச் சக்தியின் வளர்ச்சி, முதன்மையாய் உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியால் தோன்றுகிறது. உற்பத்தியைப் பெருக்குவதற்கு, உற்பத்திக் கருவிகளை செம்மைப் படுத்துவதும், தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதன் கூடவே மனிதர்களின் உழைப்புத் திறன் தேர்ச்சி பெறுகிறது, உற்பத்தி அனுபவம் வளமை அடைகிறது.

உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி குறிப்பிட்ட கட்டம் வரை, உற்பத்தி உறவுகளை பெரிய அளவிற்கு பாதிக்கப்படாமல் கட்டுப்பட்டே காணப்படுகிறது. ஆனால் உற்பத்தி சக்திகள் வளர்ச்சியடைந்த காலகட்டத்தில் பழைய உற்பத்தி உறவோடு முரண்பட வைக்கிறது. **உற்பத்திச் சக்திகள் உற்பத்தி உறவுகளைக் காட்டிலும் விரைவாக மேம்பாடடைகிறது, பழைய உற்பத்தி உறவுகளோ, அந்த புதிய வளாச்சியடைந்த உற்பத்திச் சக்தியுடன் முரண்படுகிறது.**

பழைய உற்பத்தி உறவுகள், புதிய உற்பத்திச் சக்தியை மந்தப்படுத்த முயற்சிக்கிறது, புதிய உற்பத்தி உறவுகள் வளர்ச்சியை முன்னோக்கி எடுத்துச் செல்கிறது.

சமூக உற்பத்தி முறையின் முரண்பாடு, பழைய உற்பத்தி முறையை மறுதலித்து, புதிய உற்பத்தி முறைக்கு மாற்றுகிறது. புதிய உற்பத்தி சக்திகளுக்கு, பொருத்தமான உற்பத்தி உறவுகள், பழைய அமைப்பின் உள்ளிருந்தே தோன்றுகிறது. உற்பத்திச் சக்திகள், உற்பத்தி உறவுகள் ஆகியவற்றின் இயக்கவியல் வளர்ச்சி என்பது ஓர் உற்பத்திமுறை யிலிருந்து, மற்றொரு உற்பத்திமுறைக்கு மாற்றம் அடைவதாகும். அதாவது கீழ்நிலை உற்பத்திமுறையிலிருந்து, மேல்நிலை உற்பத்தி முறைக்குச் சென்றடைவதாகும்.

தனிச்சொத்துடைமையின் தோற்றத்திலிருந்து, சமூகம் வர்க்கமாக மாறியது. வர்க்க சமூகத்தின் வளர்ச்சிக்கும், மாற்றத்திற்கும் உந்து விசையாக இருப்பது வர்க்கப்போராட்டமே ஆகும். சமூகத்தில் வர்க்கங்கள் எவ்வாறு தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்துள்ளன என்பதை, அடுத்த இயலில் தொகுத்துப் பார்ப்போம்.

www.padippakam.com

# II. வர்த்தகத்தின் தோற்றமும் சாரமும்

குறிப்பிட்ட சமூகத்தில் சிலரது விருப்பங்கள், மற்றவர்களின் விருப்பங்களுடன் மோதுகின்றன. சமூகத்தில் முரண்பாடுகள் பரந்து கிடக்கின்றன என்பது பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. சமூகம் வர்க்கங்களாக பிளவுபட்டு இருப்பது என்பது வெகு காலத்திற்கு முன்பே பல அறிஞரால் கூறப்பட்ட கருத்தாகும். ஆனால் அதற்கான காரணத்தையும், சாரத்தையும் அறியப்படாமல் இருந்தது. அறிந்ததாக கூறியவர்களும் பொருத்தமான விளக்கம் கொடுக்க வில்லை. அதாவது, திறமையானவர்களும், ஊக்கமுள்ளவர்களும் மற்றும் அறிவாற்றல் பெற்றவர்களும் சமூகத்தில் தலைமை தாங்கும் பக்குவம் பெற்றவர்களாக இருந்தனர். திறமையற்றவர்களும், சோம்பேரி களும் ஒடுக்கப்பட்டவர்களாக ஆனார்கள். இது பொருத்தமான கூற்றில்லை என்பதை எளிதாக விளங்கிக்கொள்ளலாம். ஆளும் வர்க்கத்தின் அறிவாளிகளுக்கு இடையே அடிமுட்டாள்களை பார்க்கமுடிகிறது. ஒடுக்கப்பட்ட வர்க்கத்திடம் திறமையும், அறி வாற்றலையும் காணமுடிகிறது. இதை கணக்கில் எடுக்காமல் இருந்த தற்குக் காரணம் சமூகத்தில் வர்க்கத்தின் தோற்றத்தையும், சாரத்தையும் அவர்களால் அறிந்துகொள்ள முடியாமையேயாகும். இதனோடு இந்த கூற்றில் வர்க்க சார்பும் அடங்கியிருக்கிறது.

சமூகத்தின் வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களது வரலாறாகும் என்று மார்க்ஸ் கூறியது முதல், சமூகம் பற்றிய புரியாத் தன்மை நீங்கியது. சமூகத்தின் இயக்கும் விசையை கண்டுபிடித்து, அது சமூகத்தில் காணும் வர்க்கப்போராட்டம் என்னும் கொள்கையாக மார்க்ஸ் வகுத்துக் காட்டிய போது, திகைப்பூட்டும் புதிர் போல், குழப்படி யாய் காட்சி தந்த சமூகம், எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாயிற்று.

பண்டைய சமூகம் வர்க்கமாக பிரிவுபடாமல் இருந்தது, அதாவது பண்டைய கூட்டுவாழ் கம்யூனிச சமூகத்தில் வர்க்கம் தோற்றம் பெற வில்லை, அதற்கான வாய்ப்பும் அங்கில்லை. வாழ்விற்கு தேவையானதை அம்மக்கள் கூட்டாகவே முயன்று பெற்று, கூட்டாகவே அதனை பகிர்ந்தும் கொண்டனர். அச் சமூகத்தின் உற்பத்திச் சக்திகள் மிகவும் சதாரண மானவையாக இருந்தது. அவர்களுக்கு கிடைத்தப் பொருட்கள் சிறிதள வாகவே இருந்தது. கிடைத்தவை முழுவதும் உடனடியாக பயன்படுத்தி விடும் அளவிற்கு இருந்தது. மிகையான பொருள் என்று ஏதும் அப்போது சேகரிக்க முடியவில்லை, அதனால் அச் சமூகத்தில் வர்க்கம் தோற்றம் பெறுவதற்கு வாய்பில்லை.



படிப்பகம்

பண்டைய கூட்டுவாழ் கம்யூனிச சமூகம் சிதைவுற்ற நேரத்திலும், அடிமைச் சமூகம் தோற்றம் பெற்ற நேரத்திலும் வர்க்கம் உருவாகியது. ஆக சமூகம் வர்க்கமற்றதாகத் தான் தோற்றம் பெற்றது. சமூகத்தில் சிலரிடம் உற்பத்திச் சாதனங்கள் சேரவும், மற்றவர்களுக்கு மறுக்கப்படும் போதும் வர்க்கப் பிரிவு ஏற்பட்டது. சமூகத்தில் உற்பத்தி சக்தியின் வளர்ச்சியின் போது உருவான தனிச்சொத்துடமையின் தோற்றத்தில் தான், வர்க்கத்தின் தொடக்கம் அடங்கியிருக்கிறது.

வர்க்கங்களின் தோற்றமும், நிலையிருப்பும் உற்பத்தி வளர்ச்சியின் தேவைகளின் அடிப்படையில் ஏற்பட்டது என்று, மார்க்ஸ் தான் முதன் முதலில் வர்க்கங்களின் சாரத்தை பொருள்முதல்வாதக் கண்ணோட்டத் தில் விளக்கினார். வர்க்கங்களின் இருப்பதென்பது நிலையானது அல்ல, ஏன் என்றால் சமூகத்தின் தொடக்கம் வர்க்கமற்ற நிலையில் தான் காணப் பட்டது, தனிச்சொத்தின் தோற்றத்துடன் வர்க்கச் சமூகம் உருவாயின. உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமைநிலை மறையும் போது வர்க்கங்களும் மறைந்து போகும்.

**உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியடைதல், உற்பத்திச் சாதனங்கள் சிலரிடம் சேகரமாதல், சமூகத்திற்கு தேவை யானதைவிட மிகையாக உற்பத்தி செய்திட முடிந்தமை, சமூகத் தின் வேலைப் பிரிவினை ஆகிய புறநிலைக் காரணங்கள், வர்க்கங்களின் தோற்றத்திற்கு காரணமாகிறது.** இதனால் உரு வான சமூகத்தில் உடைமையுள்ளவருக்கும், உடைமையற்றவருக்கும் இடையேயுள்ள சமரசப்படுத்தமுடியாத முரண்காரணமாக அரசு தோற்றம் பெற்றது. மக்களின் எழுச்சியை அடக்குவதற்கு, ஆயுதம் தாங்கிய காவற்படைகளும், ராணுவமும், சட்ட நீதிகளும், சிறை தண்டனைகளும், சுரண்டலுக்கு ஆளான, மக்களின் மீது ஏவப்படும் வன்முறைக் கருவியாக அரசு உருவாகியது.

சுரண்டல் சமூகத்தின் வரலாறு முழுவதும் வர்க்கங்களுக்கிடையே யான போராட்டமாக காணப்படுகிறது. அடிமைச் சமூகத்தில் ஆண்டான் களுக்கும், அடிமைகளுக்கும், நிலப்பிரப்புத்துவ சமூகத்தில் நிலப்பிரவுக் களுக்கும் பண்ணை விவசாயிகளுக்கும், முதலாளித்துவ சமூகத்தில் முதலாளிகளுக்கும், பாட்டாளிகளுக்கும் இடையே வர்க்கங்களாக பிளவுபட்டு காணப்படுகிறது.

முரண்பட்ட வர்க்க அமைப்புகள், ஒன்றையடுத்து ஒன்றாக சுரண்டலின் வடிவங்கள் மாறி வந்துள்ளன. ஆனால் உழைத்திடும் வர்க்கங்கள் என்றும் ஒடுக்கத்திற்கு ஆளாகியே வருகின்றது. அடிமைச் சமூகத்தில் சுரண்டலின் வடிவம் அப்பட்டமாக காணப்பட்டது. நிலப்

பிரபுத்துவ சமூகத்தில், நிலத்தை சொந்தமாக வைத்திருந்த நிலப்பிரபு, தனது நிலத்தில் விவசாயிகள் வேலை செய்யவேண்டும் என்பதற்காக, கால்நடைகளும், கருவிகளும் வைத்திருந்த விவசாயிகளுக்கு துண்டு நிலங்களை கொடுத்து, தமது நிலத்தில் வேலை செய்திட வைத்தார். நிலப்பிரபுவின் நிலத்தில் வாரத்தில் சிலநாட்கள் வேலை செய்தும், மற்ற நாட்களில் தமக்காக ஒதுக்கப்பட்ட நிலத்தில் உழைத்தும், துண்டு நிலங்களை பெற்றதற்காக, நிலம் அளித்தவருக்கு பணமாகவோ, விளை பொருட்களாகவோ கொடுத்தும் வந்தனர். கருவிகளோ, கால்நடைகளோ இல்லாதவர்கள் சுரண்டலுக்கு ஏற்றவல்லாதவராயினர்.

முதலாளித்துவ சமூகத்தில் வர்க்க அமைப்பு வேறுவடிவில் அமைந்தது. ஆண்டானுடன் முழுமையாகச் சார்ந்திருந்த அடிமைவிடவும், நிலப்பிரபுவிடம் உரிமையற்ற பண்ணை விவசாயியாய் இருப்பதைவிட வும், பாட்டாளி, சட்டப்படியான சுதந்திரத்தைப் பெற்றவராக இருக்கிறார். உற்பத்திச் சாதனங்களை இழந்த பாட்டாளி, தம்மிடம் உள்ள உழைப்புச் சக்தியை முதலாளிக்கு விற்கவேண்டிய நிலையிலுள்ளவராவார்.

இவ்வாறு, வர்க்கங்களின் இருப்பின் சாரத்தை புறநிலையானவை என்பதை நிருபித்து, அதில் உள்ள பொருளாதாரக் காரணங்களையும் தெளிவுபடுத்தியதே மார்க்சின் கண்டுபிடிப்பாகும். ஏன் இதை குறிப்பிட்டு சொல்ல வேண்டிது இன்றியமையததாகிறது என்றால், சமூக சீர்திருத்தக் காரர்கள் சமூகத்தில் வர்க்கங்கள் இருப்பிற்கு காரணம், உற்பத்தி முறையில் அல்லாது, வினியோக முறையில் உள்ள முரண்பாடில் கண்டனர். அதாவது சமூக முரண்பாட்டை பொருளாதார உற்பத்தி முறை யில் காணாமல், வினியோகிக்கும் முறையில் குறைகண்டனர். ஆனால், மார்க்ஸ் ஒரு குறிப்பிட்ட பொருளாதார உற்பத்தி முறையில் உள்ள உற் பத்திச் சாதனங்கள் - பொதுவாக சொத்துடைமை - யாரிடம் இருக் கிறதோ, அந்த சொத்துடைமையாளர்களின் விருப்பப்படி வினியோகம் நடைபெறுகிறது என்றும், அந்த அடிப்படையில் உற்பத்தி உறவுகள் ஏற்படுகிறது என்றும் விளக்கினார். இந்த நிலைமைகளின் மூலமே வர்க்கத்தின் இருப்பும், போராட்டமும் நடைபெறுகிறது. சுருக்கமாகச் சொன்னால், உற்பத்தி சாதனங்களிடம் உள்ள, மனிதனுடைய உறவில் தான், வர்க்கத்தின் சாராம்சம் அடங்கியிருக்கிறது.

**வர்க்கப் போராட்டம் அனைத்து சுரண்டல் அமைப்புகளிலும் வரலாற்றின் உந்து விசையாக இருக்கிறது. முரண்பட்ட சமூகத் தில் வர்க்கப் போராட்டம் இல்லாமல் சமூக முன்னேறுவதில்லை.**

**மார்க்ஸ் கூறுகிறார்:-**

"இன்று முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து நிற்கும் எல்லா வர்க்கங்களிலும் பாட்டாளி வர்க்கம் மட்டும்தான் மெய்யாகவே புரட்சிகரமான வர்க்கமாகும். ஏனைய வர்க்கங்கள் நவீனத் தொழிலினது வளர்ச்சியின் முன்னால் நலிவுற்றுச் சிதைந்து முடிவில் மறைந்து போகின்றது, பாட்டாளி வர்க்கம் மட்டும் தான் நவீனத் தொழிலுக்கே உரித்தான அதன் நேரடி விளைவாய் அமைகிறது."

*கம்யூனிஸ்ட் அறிக்கை*

முதலாளித்துவ சமூகத்தில் பாட்டாளிகள் நடத்தும் வார்க்கப் போராட்டம் பொருளியல், அரசியல், மற்றும் சித்தாந்தம் என்கிற மூன்று வழிகளில் நடைபெறுகிறது.

முதலாளிகள், அதிக ஆதாயம் பெறுவதற்கும், அதனைத் தக்க வைப்பதற்கும் தேவைப்படுகின்றவற்றில் எதைவேண்டுமானாலும் செய்வ தற்கு முனைப்பாக இருக்கிறார்கள், இந்நிலையில், பாட்டாளிகள் தங்களது அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்காக நடத்தப்படும் போராட்டம், பொருளியல் போராட்டமாகும். அதாவது பாட்டாளிகளின் பொருளியல் நிலைமைகளை மேப்படுத்துவதற்கும், சுரண்டலிருந்து தங்களை கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் குறைத்துக் கொள்வதற்கும், இருப்பதைவிட மேம்பட்ட உழைக்கும் சூழ்நிலைகளுக்கும், ஊதிய உயர்விற்கும், வேலைநேரக் கட்டுப்பாடிற்கும் ஆன போராட்டமாகும். குறிப்பாக சொன்னால் பாட்டாளி தங்களது நலவுரிமைக்கும், பாதுகாப்பிற்கும் நடத்தப்படும் போராட்டமாகும். பாட்டாளிகள், தங்களது உடனடி பொருளாதார நலன்களை முன்னிருத்தி போராடுகின்றனர். இதற்கு அவர்கள் சங்கம் அமைத்துக் கொள்கின்றனர். இது வர்க்கப் போராட்டத்தின் தொடக்கப்புள்ளியாகும்.

பொருளாதார அடிப்படையில் நடத்தப்பட்டு வரும் போராட்டம், பாட்டாளிகளை, சுரண்டலிருந்து முழுமையாக விடுவிக்கவில்லை. ஏனென்றால் இந்தப் போராட்டங்களின் மூலம், கிடைத்திடும் பலன் அவர்களது வாழ்க்கைச் சாதனங்கள் அனைத்திற்கும் வழியமைத்து தருவதில்லை, மற்றும் தங்களது வாழ்வின் முழு பாதுகாப்பிற்கும் வழி கிடைக்கவில்லை. இதன் மூலம் முதலாளிகளிடமிருந்து சில சலுகை களை மட்டுமே பெறமுடிகிறது. அவர்களது வாழ்க்கைத் துன்பங்களுக்கு, முழு விடுதலை என்பது கிடைத்திடவில்லை. இந்தச் சலுகைகளை பெறுவதற்கே பெரும் போராட்டத்தை நடத்த வேண்டியிருக்கிறது.

www.padippakam.com

பொருளாதாரப் போராட்டத்தின் போது பாட்டாளிக்கள் தங்களது கூட்டம் கூடுவதற்கும், சங்கம் நடத்துவதற்கும், தமக்கான பத்திரிகை நடத்து வதற்கும் ஆன உரிமைகளை நிலைநிறுத்துவதற்கு போராட வேண்டி வருகிறது. **இவ்வாறு பாட்டாளிகளின் போராட்டம் அரசியல் போராட்டமாக வடிவெடுக்கிறது.**

போராடிப் பெற்ற சிறு சலுகைகளை தக்க வைப்பதற்கும், இதனை சட்டமாக்குவதற்கும், அதாவது அரசியல் போராட்டதிற்காக, தங்களது பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டி வருகிறது, இதன் மூலம் பொருளாதாரப் போராட்டம் அவர்களை அரசியல் போராட்டத்திற்கு இட்டுச்செல்கிறது.

தன்னியல்பான பொருளாதாரப் போராட்டத்துடன், அரசியல் போராட்டமும் இணையும் போது, பாட்டாளிகளின் அரசியல் உணர்வு மேலோங்குகிறது. அரசியல் கோரிக்கைகள் அவர்களின் கம்யூனிச உணர்வை வளர்த்துவிடுகிறது. முதலாளிக்கு எதிரான போராட்டத்தில், பாட்டாளிகள் சங்கமாய் இணைந்து போராடும் போது, பாட்டாளிகள் ஒரு வர்க்கமாய் சேகரமாகிறார்கள். வர்க்கமாய் தமது போராட்டத்தை நடத்தும் போது, முதலாளியை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டம், முதலாளித்துவ வர்க்கத்தை நோக்கிய போராட்டமாக - வர்க்கப்போராட்டமாக உருமாறுகிறது. இந்தப் போராட்டத்தில் முதலாளித்துவம், பாட்டாளி வர்க்கத்தை நோக்கி சட்டமுறைகளிலும், சட்டத்திற்கு எதிரான வழிகளிலும் ஒடுக்க முற்படுகிறது. அப்போது முதலாளித்துவ அரசிற்கு எதிரான போராட்டம், முதலாளித்துவ நாடாளுமன்றத்திற்கு எதிராகவும், முதலாளித்துவ அமைப்பு முழுமைகு எதிரான போராட்டமாகவும் மாறுகிறது. **பொருளாதாரப் போராட்டத்தை, அரசியல் போராட்ட மாக தொடரச் செய்யும் போது, உருவான நோக்கங்கள், குறிக் கோள்கள், போராட்ட முறைகள் ஆகியவை பாட்டாளி வர்க்கத் தின் சித்தாந்தமாக திரட்டப்படுகிறது.**

முதலாளித்துவ சித்தாந்தத்தை எதிர்கொள்ளும் வகையில், பாட்டாளிகள் தங்களது சித்தாந்ததை உருவாக்க வேண்டியிருக்கிறது. **சுரண்டும் வர்க்கமான முதலாளித்துவத்தை, சங்கம் அமைத்து எதிர்க்கும் போது, சமூகத்தில் உள்ள அனைத்து தொழிலாளிச் சங்கங்களையும் இணைத்து வழிநடத்துவதற்கு, பாட்டாளி களுக்கு புரட்சிகரமான கட்சி தேவைப்படுகிறது.**

**லெனின் கூறுகிறார்:-**

"தொழிலாளிகளிடையே சமூக-ஜனநாயகவாத (கம்யூனிச) உணர்வு இருந்திருக்க முடியாது என்று சொன்னோம். அது



படிப்பகம்

www.padippakam.com

வெளியிலிருந்துதான் அவர்களுக்கு கொண்டுவரப்படவேண்டும். பாட்டாளி வர்க்கம் தனது சொந்த முயற்சிகள் மூலமாகத் தொழிற் சங்க உணர்வு மட்டுமே -அதாவது, தொழிற்சங்கங்களில் ஒன்று படுவது, முதலாளிகளை எதிர்த்துப் போராடுவது, இன்றியமையாத தொழிலாளர் சட்டங்களை நிறைவேற்றுமாறு அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்த முயல்வது, முதலியவற்றின் இன்றியமையாமைப் பற்றிய துணுபு மட்டுமே - வளர்த்துக்கொள்ள முடிகிறது என்று எல்லா நாடுகளின் வரலாறு புலப்படுத்துகிறது. ஆனால் சோஷலிஸத்தின் கொள்கை, மெய்யறிவுவகைப்பட்ட, வரலாறுவழிப் பட்ட, பொருளாதார வகைப்பட்ட கொள்கைகளிலிருந்து வளர்ந்த தாகும், சொத்துள்ள வர்க்கங்களின் பிரதிநிதிகள், அறிவுத்துறை யினர், அவற்றை வகுத்து விளக்கினர். நவீன விஞ்ஞான சோஷலிஸத்தின் மூலவர்களான மார்க்சும், எங்கெல்சும் முதலாளி வர்க்கப் போக்கான படிப்பாளிப்பகுதினரைச் சேர்ந்தவர்கள்”

*- என்ன செய்ய வேண்டும் பக்கம் 47-48*

## மார்க்ஸ், எங்கெல்ஸ் கூறுகிறார்கள்:-

“.. ஆகவே நடைமுறையில் கம்யூனிஸ்டுகள் எல்லா நாடுகளிலும் தொழிலாளி வர்க்கக் கட்சிகளது மிகவும் முன்னேறிய, மிகவும் வைராக்கியமான பகுதியாய், ஏனைய எல்லோரையும் முன் னோக்கி உந்தித் தள்ளும் பகுதியாய் இருக்கிறார்கள், கொள்கை களில் அவர்கள் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் வழிநடப்பையும் நிலைமைகளையும் பொதுவான இறுதி விளைவுகளையும் தெளிவாய்ப் புரிந்து கொள்ளும் அனுகூலத்தை, பாட்டாளி வர்க்கத் தின் பெருந்திரளினருக்கு இல்லாத அனுகூலத்தைப் பெற்றிருக் கிறார்கள்”

*கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை பக்கம் 64 - 65*

இக்கட்சி புரட்சிகரமாக செயற்படுவதற்கு, புரட்சிகரமான கொள்கை தேவைப்படுகிறது. அந்தச் சித்தாந்தத்தை மார்க்சின் பொருள்முதல் வாதம் அளிக்கிறது. குறிப்பாக மார்க்சிய தத்துவயியலில் உள்ள வரலாற்றியல் பொருள்முதல்வாதம், பாட்டாளி வர்க்கத்திற்குரிய அறிவியல் கம்யூனிச சித்தாந்தம் என்கிற புரட்சிகர கொள்கைகளை வகுத் தளிக்கிறது.

**“புரட்சிகரமான கொள்கையில்லாமல் புரட்சிகரமான இயக்கம் இருக்க முடியாது”** (Without revolutionary theory there can be no revolutionary movement.) மற்றும் **“..முன்னேறிய**



படிப்பகம்

கொள்கையை வழிகாட்டியாகக் கொண்டுள்ள கட்சி ஒன்றுதான் முன்னணிப் போராளியின் பாத்திரத்தை நிறைவேற்ற முடியும் என்று மட்டும் தற்போதைக்குச் சொல்ல விரும்புகிறேன்" என்கிறார் லெனின்.

*என்ன செய்ய வேண்டும் பக்கம் 39, 40*

## சமூகப் புரட்சி

உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையேயான மோதல் சமூகப் புரட்சியின் பொருளாதார முன்நிபந்தனையாக உள்ளது. இந்தப் பொருளாதார நெருக்கடிச் சுழலைத்தான், புரட்சிகர நிலைமை என்று கூறுகிறார் மார்க்ஸ். இந்நிலைமையின் போது சுரண்டும் வர்க்கத்தால், சமூகத்தை நிர்வகிக்க இயலாது போகிறது. சுரண்டப்படும் வர்க்கமோ இனிமேலும் பழைய நிலைமையில் வாழ முடியாமல், புரட்சியைத் தொடங்குகிறது. எல்லாப் புரட்சிகர சுழலும் புரட்சியை ஏற்படுத்துவதில்லை, சமூகத்தில் அனைத்து துறையிலும் நெருக்கடிகள் ஏற்பட்டவுடன், சமூகத்தின் கட்டமைப்பு தளரத்தொடங்குகிறது. புரட்சியை இறுதி வெற்றியை எட்டும் நிலைக்கு எடுத்துச் செல்லும் புரட்சிகர பாட்டாளி வர்க்கமும், அதன் இணை சக்தியான விவசாயிகளும், மற்ற துணை சக்திகளையும் ஒருங்கிணைந்து தலைமைத்தாங்கும், புரட்சிகர கட்சி என்னும் முன்னணிப்படை தேவைப்படுகிறது. சமூகத்தில் காணப்படும் சூழலைக் கணக்கில் கொண்டு புரட்சிகர கட்சி, துணைச் சக்திகளையும் இணைத்து, பாட்டாளிகளின் புரட்சிக்கு வழிகாட்டுகிறது.

புரட்சியை நிறைவேற்றிய பாட்டாளி வர்க்கம், அரசைக் கைப்பற்றி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தால் சமூகத்தை நிர்வகிக்கப்படும். வர்க்கங்களை ஒழித்தல் என்பது ஒரு நீண்டநெடிய நிகழ்முறையாகும், சோஷலிசப் புரட்சியைத் தொடர்ந்து, பல கட்டங்களின் வளர்ச்சியில், கம்யூனிச சமூகத்தில் நிறைவு பெறுகிறது.

வர்க்கங்களை முடிவிற்குக் கொண்டுவரும், கம்யூனிச சமூகத்தில் உள்ள அனைவரும் சமத்துவம் பெற்றவராய் இருப்பர். உற்பத்திச் சாதனங்கள் பொதுவுடைமையாகவும், அதற்கேற்ற உற்பத்தி உறவுகளையும் பெற்று, சமூக முழுமைக்கும் விளைபொருட்கள், தேவைக்கு ஏற்ப கிடைக்கும். அதாவது உழைப்பிற்கு ஏற்ப கிடைத்தது, தேவைக்கு ஏற்ப வழங்கப்படும்.

## எங்கெல்ஸ் எழுதுகிறார்:-

"பாட்டாளி வர்க்கப் புரட்சி - முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்கிறது. பாட்டாளி வர்க்கம் பொது ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக்

கொள்கிறது. முதலாளி வர்க்கத்தின் கைகளில் இருந்து நழுவிக் கொண்டிருக்கும் சமூகமயமான உற்பத்தி சாதனங்களை இவ்விதம் அது பொதுச் சொத்தாக மாற்றுகின்றது. இந்தச் செயலின் மூலம் பாட்டாளி வர்க்கம் உற்பத்திச் சாதனங்களை அவை இது காறும் தாங்கி இருந்த மூலதன இயல்பிலிருந்து விடுவித்து, அவற்றின் சமூக இயல்பு செயல்படுவதற்கு முழுச் சுதந்திரம் அளிக்கின்றது. சமூகமயமான பொருளுற்பத்தி இனி முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் நடைபெறுவது சாத்தியமாகிறது.

பொருளுற்பத்தியின் வளர்ச்சியானது சமுதாயத்தில் வெவ்வேறு வர்க்கங்கள் இருத்தலை இனிமேல் காலத்திற்கொவ்வாததாக்குகிறது. சமூகப் பொருளுற்பத்தியில் ஆராஜகம் எவ்வளவுக்கு எவ்வளவு மறைகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அரசின் அரசியல் அதிகாரம் மடிந்து போகிறது. முடிவில் தனக்கு உரித்தான சமூக ஒழுங்கமைப்பை ஆட்சி புரியும் எஜமானனாகிவிடும் மனிதன், அதே போதில் இயற்கையின் அதிபதியும் ஆகி, தானே தனக்கு எஜமானன் ஆகிறான் - சுதந்திரமடைகிறான்.

உலகளாவிய இந்த விடுதலைப் பணியினைச் செய்து முடிப்பது நவீனப் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுக் கடமையாகும். இந்தச் செயலுக்கான வரலாற்று நிலைமைகளையும் அதோடு கூடவே இதன் தன்மையையும் தீர்க்கமாய்ப் புரிந்து கொண்டு, தற்போது ஒடுக்கப்பட்டதாய் இருக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கு இந்த நிலைமைகளையும் அது முடிக்க வேண்டிய சகாப்தகரச் சிறப்புடைத்த இந்தப் பணியின் முக்கியத்துவத்தை முழு அளவில் தெரியப்படுத்துவது தான் பாட்டாளி வர்க்கத்தின் கொள்கை வெளியீடாகிய விஞ்ஞான சோஷலிசத்தின் கடமை."

*-டூரிங்குக்கு மறுப்பு பக்கம் 500 - 501*

வர்க்கச் சமூகத்தில் கருத்துக்களும் சித்தாந்தங்களும் எவ்வாறு வர்க்கச் சார்புடையவையாக இருக்கின்றன என்பதை அடுத்த இயலில் பார்ப்போம்.

www.padippakam.com

# III. மேற்கட்டமைப்பு

## சமூக உணர்வுநிலையும் அதன் வடிவங்களும்

உற்பத்திச் சக்திகளும், உற்பத்தி உறவுகளும் சமூக அமைப்பிற்கு அடித்தளம் என்று கூறும் வரலாற்றியல் பொருள்முதல்வாதம், அதன் மேற்கட்டமைப்பையும் ஆராய்ந்து, அது எவ்வாறு வடிவம் பெறுகின்றன என்பதையும் விவரிக்கிறது. பொருளாதார வாழ்வு எவற்றை தீர்மானிக் கிறதோ அந்த அரசியல், சட்டம், குடும்பம், மதம், தத்துவயியல், அறநெறி, கலைகள் போன்றவை சமூக உணர்வுநிலையின் வடிவங்களாக, நிறுவனங்களாக செயல்படுகின்றன, என்பதை மார்க்சியம் விளக்குகிறது.

இந்த சமூக உணர்வுநிலையின் வடிவங்கள், கருத்துமுதல்வாதமும், மதக் கண்ணோட்டமும் புலனறிவுக்கு அப்பாற்பட்ட சத்தியினால், கடவுளால் தோற்றுவிக்கப்பட்டதாக கூறிவருகிறது. இது சமூக உணர்வு நிலையின் தோற்றுவாயை சமூகத்தின் பொருளியலுக்கு தொடர்பில்லாத வாழ்விற்கு அப்பால் தேடின. மார்க்ஸ் இதன் தோற்றுவாயை பொருள் உற்பத்தியிலும், அப்போது ஏற்படுகிற உற்பத்தி உறவுகளிலும் உள்ளன என்பதைக் கண்டுபிடித்தார்.

சமூக உணர்வுநிலை சமூக வாழ்நிலையைப் பிரதிபலிக்கிறது. சமூகத்தின் பொருளாதார உற்பத்தியும், உற்பத்தி உறவுகளும் எத்தகையானதோ, அத்தகையானதாகவே மக்கள்களின் கருத்துக் களும், சித்தாந்தங்களும் அமைகின்றன. சமூக உணர்வுநிலை, சமூக நிறுவனங்களுடன் சேர்ந்து செயல்படுகிறது.

சமூகத்தில் தோன்றும் கருத்துக்களும், சித்தாந்தங்களும் பொருளாதார உற்பத்திச் செயல்களின் அடிப்படையில் தோன்றுகின்றன. **இந்த அடிப்படையைத் தவிர்த்து, தனித்த சுதந்திரம் அதற்கு கிடையாது என்பதை உணர்த்தும் வரலாற்றியல் பொருள்முதல் வாதம், அதன் சார்புநிலையில் உள்ள சுதந்திரத்தை மறுக்க வில்லை. இந்தச் சுதந்திரம் ஏன் சார்புநிலை என்று கூறப்படுகிறது என்றால், பொருளாதாரத்திற்கும் சித்தாந்தத்திற்கும் இடையில் உள்ள இணைப்புகளின் தொடர்பில் தான் இந்தச் சுதந்திரம் அடங்கியிருக்கிறது.** இந்த சார்புநிலை அந்தந்த காலத்தில் நிலவும் பொருளாதார நிலைமைகளுக்கு, உள்ளடங்கி இருப்பதால், அதன் சுதந்திரம் அதற்கு பொருந்திய வகையிலேயே இருக்கிறது.

**அடித்தளம், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிகளுக்கு ஏற்ப மாறுகிறது, அடித்தளத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப, மேற்கட்டமைப்பு மாற்றம் பெறுகிறது.**



படிப்பகம்

மேற்கட்டமைப்பு என்பது அடித்தளத்தின் கட்டமைப்பு எனலாம். அடித்தளத்தின் வெளித்தோற்ற வடிவம் என்று மேற் தளத்தைக் கூறலாம். அடித்தளமும் மேற்கட்டமைப்பும் தம்முள் நெருக்கமான இணைப்பைப் பெற்றவை. அடித்தளமே நிர்ணயகர மான தன்மை பெற்றவை, அது மேற்கட்டமைப்புக்கு காரணமா கிறது. மொத்தத்தில் மேற்கட்டமைப்பு அடித்தளத்திற்கு பொருத்தமாக இருக்கிறது. அடித்தளம் எத்தகையதோ மேற் கட்டமைப்பும் அத்தகையதாகவே ஆகிறது. அடித்தளமும் மேற் கட்டமைபும் பொருந்தியிருப்பது, முறையான சமூக வளர்ச்சிக்கு இன்றியமையானவாகும்.

சமூக வாழ்நிலை, சமூக உணர்வுநிலையைத் தோற்றுவிக்கிறது என்று சொல்லும் போது, அவை ஒரேவிதமாக வெளிப்படுத்துகிறது என்று பொருள்கொள்ள முடியாது. வர்க்க சமூதாயத்தில் சமூக வாழ்நிலை, மாறுபட்ட சமூக உணர்வுநிலையாகத்தான் பிரதிபலிக்கும். சமூகத்தில் காணும் வர்க்கப் போராட்டத்தின் ஊற்றை இந்தப் பிரதிபலிப்பில் காணமுடிகிறது.

சமரசப்படுத்த முடியாத முரண்பாடுகளைக் கொண்ட முத லாளித்துவ சமூகத்தில், முதலாளிகளின் நலன்களும், தொழிலாளிகளின் நலன்களும் ஒன்றமுடியாமல் மோதுகின்றன. அவரவர்களின் நலன்களுக்கு ஏற்பவே கருத்தாக்கமும், தத்துவயியலும் தோன்று கின்றன. சமரசப்படுத்த முடியாத முரண்பாடுகளைக் கொண்ட வர்க்கச் சமூகத்தில், அனைவருக்கும் பொதுவான கருத்தும், தத்துவயியலும் இருக்க முடியாது.

உற்பத்திச் சக்திகள் யாருக்கு சொந்தமாக இருக்கின்றதோ, அவர்களுக்கு அரசும், சித்தாந்தமும் முன்னிலைப் பெறுகின்றன.

முதலாளித்துவ சித்தாந்தம் என்பது மாற்றம் பெறாது, அச்சமூகம் தோன்றியது முதல் ஒரே விதமாக தொடர்ந்து செல்வதாக, சொல்லிவிட முடியாது. நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றம் பெறுகிறது. முதலாளித்துவ வளர்ச்சியின் தொடக்கக் கட்டத்தில், நிலப்பிரப்புத்துவ சித்தாந்தத்துடன் ஒப்பிடுகையில், முதலாளித்துவ சித்தாந்தம் முற்போக்கான கருத்துக் களையும், கொள்கைகளையும் கொண்டிருந்தது. சமூக வளர்ச்சிக்கு நிலப்பிரத்துவ கருத்தாக்கங்கள் தடையாக இருந்ததால், அதனை எதிர்த்து போராடும் கட்டத்தில், முற்போக்கான சித்தாந்தங்களை ஏற்றுச் செயல்பட்டது. கால வளர்ச்சியில், பாட்டாளிகள் தனி வர்க்கமாக உறு பெற்று, சுரண்டலுக்கு எதிரான தமது போராட்டத்தை தொடங்கியவுடன், முதலாளித்துவம் பிற்போக்கான செயல்பாட்டிற்கு மாற்றிக்கொண்டது.

எதார்த்தப் போக்கை மாற்றி, திரித்து தமது நலன்களுக்கு சாதகமான கருத்துக்களையும், சித்தாந்தங்களையும் உருவாக்கி அதனை வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை போன்ற ஊடங்கங்களின் வாயிலாக பரப்பியது.

சமூக வாழ்நிலை மாறும் போது, சமூக உணர்வுநிலையும் மாற்றம் பெறுகிறது. ஒடுக்கும் வாக்கம், ஒடுக்கப்படும் வர்க்கம் இவைகளின் சித்தாந்தத்தில், நேருக்குநேர் பகைமையாய் இந்த மாற்றம் பிரதிபலிக்கிறது.

## மார்க்ஸ், எங்கெல்ஸ் கூறுகிறார்கள்:-

> "ஒவ்வொரு சகாப்தத்திலும் ஆளும் வர்க்கங்களின் கருத்துக் களே கோலோச்சும் கருத்துக்களாக விளங்கும். அதாவது, சமு தாயத்தின் பொருள்வகை சக்தியை ஆளும் வர்க்கம், அதே சமயம் அதன் கோலோச்சும் அறிவுத்துறை சக்திகளாகவும் விளங்கும். பொருள் உற்பத்தி சாதனங்களைத் தனது செயலாட்சி யில் வைத்திருக்கும் வர்க்கம், அதேசமயம் அறிவுத்துறை உற் பத்தி சாதனங்கள் மீது கண்காணிப்புச் செலுத்தும், எனவே அதன் மூலம், பொதுப்படச் சொன்னால், அறிவுத்துறை உற்பத்தி சாதனங் கள் தம் வசம் இல்லாதவர்கள், அதற்குக் கீழடங்கி இருப்பார்கள். கோலோச்சும் கருத்துக்கள் என்பவை மேலோங்கி நிற்கும் பொருள்வகை உறவுகளின் லட்சிய வெளிப்பாடும், கருத்துக்களாகப் புரிந்து கொள்ளப்பட்ட மேலோங்கி நிற்கும் பொருள்வகை உறவுகளும் தவிர வேறு எதுவு மல்ல."

*- ஜெர்மன் சித்தாந்த்தம் - மார்க்ஸ் - எங்கெல்ஸ்*

முதலாளித்துவ சித்தாந்திகள் முரண்பட்ட சமுதாயத்தில், சித்தாந்தமும் முரண்பட்டு இருப்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் சித்தாந்தங்களை எல்லோருக்கும் பொதுவானவையாக, முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்டதாக காட்ட முயற்சிக்கிறார்கள்.

## லெனின் கூறுகிறார்:-

> "முதலாளித்துவச் சித்தாந்தம் அல்லது சோஷலிஸ்டு சித்தாந்தம்...., நடுவழி ஏதும் கிடையாது (ஏனென்றால் மனிதகுலம் ஒரு "மூன்றாம்" சித்தாந்தத்தைப் படைக்கவில்லை, மேலும், வர்க்கப் பகைமைகளால் பிளக்கப்பட்டுள்ள ஒரு சமுதாயத்தில் வர்க்கத்தன்மையற்ற சித்தாந்தமோ வர்க்கத்துக்கு அப்பாற்பட்ட

சித்தாந்தமோ என்றைக்கும் இருக்க முடியாது). எனவே சோஷலிஸ்டு சித்தாந்தத்தை எந்த விதத்தில் சிறுமைப்படுத்தினாலும், அதிலிருந்து இழையளவேனும் விலகிச் சென்றாலும் முதலாளித்துவச் சித்தாந்தத்தைப் பலப்படுத்துவதாகவே பொருளாகும். மூன்றாம் வழி கிடையாது"

*என்ன செய்ய வேண்டும்?*

மார்க்சியம், சித்தாந்தத்தின் சார்புத் தன்மையை வெளிப்படுத்துகிறது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள், மார்க்சியத்தின் இந்த போக்கை சிதைப்பதற்காக பெரும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். அதில் முன்னிலையில் இருப்பது மார்க்சியத்தின் அடித்தளம், மேற்கட்டமைப்பு என்ற கருத்தாக்கமாகும், மார்க்சியர் என்ற வேடமிட்டும், மார்க்சியர் என்ற போர்வையிலும் இதனைத் திரித்து எழுதுவதை, நீண்ட காலமாக செய்துவருகின்றனர். ஏன் இதனை மார்க்ஸ் தமது கருத்தை படைத்தளித்தது முதல் இந்த வேலை நடைபெற்று வருகிறது என்று சொல்லலாம்.

அடித்தளம் மேற்கட்டமைப்பை தீர்மானிக்கிறது என்றால் அது பொருள்முதல்வாத கண்ணோட்டமாகும். மேற்கட்டமைப்பு அடித்தளைத்தை நிர்ணயிக்கிறது என்றால் அது கருத்துமுதல்வாதமாகும். சித்தாந்தமே சமூகத்தை நடத்திச் செல்கிறது, மேல்கட்டமைப்பே அடித்தளத்தைத் தீர்மானிக்கிறது என்பதெல்லாம் கருத்துமுதல்வாத போக்காகும். மார்க்ஸ் கண்டுபிடித்த கருத்தாக்கத்தின் வலுவை குலைப்பதற்கு மற்றொரு போக்கையும் கைகொள்வர், அது அடித்தளமும், மேற்கட்டமைப்பும் ஒன்றையொன்று இடைசெயல்புரிகிறது, தாக்குகிறது என்பதை மிகைப்படுத்தி, அடித்தளத்தின் தீர்மானப் போக்கை குறைத்தும், மறைத்தும் மதிப்பிடுவர். இது மார்க்சியத்தின் அடித்தளம் மேற்கட்டமைப்பு என்ற கருத்தாக்கத்தை சிதைப்பதை நோக்கமாக கொண்டதாகும்.

சமூகஉணர்வுநிலை வடிவங்களில் சிலவற்றைப் பார்ப்போம்.

## 1. அரசியல் சித்தாந்தம்

அரசியல் சித்தாந்தம் நெருக்கமாகவும், நேரடியாகவும் பொருளாதாரத்துடன் தொடர்பை பெற்ற சித்தாந்த வடிவமாகும். இது பொருளாதாரத்தை ஒன்றுதிரட்டப்பட்ட வடிவமாக பிரதிபலிக்கிறது. மற்ற வடிவங்களின் மீது மிகுந்த செல்வாக்கை

www.padippakam.com

செலுத்தும் வடிவமாக அரசியல் சித்தாந்தம் இருக்கிறது, இதற்கு காரணம் அரசியல் சித்தாந்தத்திற்கும் பொருளாதாரத்திற்கும் இருக்கும் நெருக்கமும் பிணைப்பும் ஆகும்.

பொதுவாக அரசியல் சித்தாந்தம் என்பது அனைவருக்கும் பொருந்துவதாகவும், அனைத்து மக்களின் நலன்களின் அடிப்படையில் உருவானதாகவும் ஆளும்வர்க்கம் தெரிவித்துவருகிறது.

ஒவ்வொரு அரசியல் சித்தாந்தமும், அந்தந்த வர்க்கத்தின் நலன்களை பிரதிபலிக்கிறது. அதனால் தான் எல்லா வர்க்கமும் தமக்கென்று தனித்தனியான அரசியல் சித்தாந்தத்தை கொண்டவையாக இருக்கிறது. முதலாளித்துவ வர்க்கத்தின் சித்தாந்தம் சனநாயகம், சுதந்திரம், மனித உரிமைகள் என்ற சொல் அலாங்காரத்திற்குள் ஒளிந்திருக்கிறது. ஏன் இதனை வெறும் அலங்காரம் என்று சொல்லப்படுகிறது என்றால் இவற்றை அந்தச் சமூதாயத்தில் நிறைவேற்றுவது சாத்தியம் இல்லாமையேயாகும். அதனால் இதற்கான விளக்கங்கள் தெளிவில்லாமலும், குழப்பமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

குட்டிமுதலாளித்துவ சித்தாந்தப் போக்கு விவசாயிகள், கைவினைஞர்கள், பழங்குடியினர் ஆகியோர்களின் நலன்களை முன்னிருத்துகிறது. இந்த சித்தாந்தம் இந்த சுரண்டும் சமூகத்தை எதிர்க்கின்றது, புரட்சிகரமான செயல்களுக்கு ஆதரவைத் தெரிவிக்கின்றது, மறுபக்கத்தில் சொத்துடைமைக்கு ஆதவரவாகவும் இருக்கின்றனர். குறிப்பாக முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு எதிராக செயல்படுவதற்கு பதில், பகிர்வுக்கு மட்டும் முதன்மை கொடுக்கிறது. முதலாளித்துவ அரசில் காணும் சுதந்திரத்தை ஏற்றுக்கொள்வதில்லை, ஆட்சியதிகார மாற்றத்தின் மூலம் புதிய சமூகத்தைப் படைத்தளிக்க முடியும் என்று கருதுகிறது. மூலதன ஆட்சியினையும், சமூக வளர்ச்சியின் விதிகளையும் இவர்கள் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. அரசமைப்பின் வர்க்கத் தன்மையைப் பார்க்காமல், அவற்றை அனைத்துவித தீமைகளுக்கும் மூலம் என்று கருதிக்கொள்கிறது. புரட்சியை தன்னிச்சையான கிளர்ச்சியாக விளக்கப்படுத்திக்கொள்கிறது, இந்த குட்டி முதலாளித்துவ சித்தாந்தம்.

தொழிலாளி வர்க்கத்தின் சித்தாந்தம் ஒளிவுமறைவில்லாத வகையில் வெளிப்படுத்தப்படுகிறது. சுரண்டல் முறைக்கு தமது எதிர்ப்பை, நேரடியாக தெரிவிக்கிறது, சுரண்டலை போக்குவதற்கான வழிமுறைகளைக் கையாள்கிறது. தமது சித்தாந்தத்தை பாட்டாளி வாக்கம் சமூகத்தின் செயல்பாடுகளையும், வளர்ச்சி



படிப்பகம்

விதிகளையும், வரலாற்றில் அதன் புறநிலைப் போக்குகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்குகிறது, அதனால் இந்த சித்தாந்தம் விஞ்ஞான வகைப்பட்டதாக இருக்கிறது. பொதுவாக ஆளும்வர்க்கச் சித்தாந்தம், அன்றைய ஆளும் சித்தாந்தமாக இருக்கிறது என்பதை புரிந்து கொண்டும், சமூக வளர்ச்சியின் போக்கை அறிந்து கொண்டும், அன்றைய மற்றும் தொலை-ர திட்டங்களை அமைத்தும் செயல்படுகிறது. வரலாற்றியல் பொருள்முதல்வாத வழியில் அமைந்த விஞ்ஞான கம்யூனிசம் பாட்டாளி வர்க்கத்தின் சித்தாந்தமாகும்.

## 2. மதம்

சமுதாய உணர்வுநிலையின் இதர வடிவங்களைப் போல் மதமும் சமூக வாழ்நிலையின் பிரதிபலிப்பேயாகும். பொருளியல் வாழ்வின் பொய்யான, திரிந்த முறையில் பிரதிபலிக்கும் வடிவமாகவே மதம் திகழ்கிறது. அறிவியல் வளர்ச்சி, பெருமளவிற்கு வளர்ந்த பின்னும், மதச் சிந்தனை சமூகத்தில் நீடித்து நிற்கக் கூடியதாக இருக்கிறது.

மதம் என்பது இறை வெளிப்பாடாக, உலகிற்கப்பால் உள்ள சக்தியின் பிரதிபலிப்பாக, மதம் தன்னைக் காட்டிக் கொள்ள முயற்சிக் கிறது. ஆனால் சமூக எதார்த்தத்தின் பிரதிபலிப்பே மதம் என்கிறது மார்க்சியம். இது இவ்வுலக வாழ்வின் வெளிப்பாடேயாகும்.

பண்டைய மனிதன் இயற்கையை அறிந்து கொள்வதில் சக்தியற்ற வனாக இருந்தான், இயற்கை நிகழ்வுகளுக்கும், சமூக நிகழ்வுகளுக்கும் காரணத்தை அறியாமல் திகைத்தான், இதற்கெல்லாம் இயற்கைக்கும் சமூகத்திற்கும் மேற்பட்ட சக்திகளின் சங்கல்பத்தால் நடைபெறுவதாக கருதிக்கொண்டான். இவ்வாறுதான் சமூகத்தில் இயல்பாய்த் தோன்றியது மதவுணர்வு. பகுத்தறிவுவாதிகள் சொல்வது போல், அறியாமையில் இருந்த மக்களை ஏய்ப்பதற்காக சமூகத்தில் திணிக்கப்பட்டதல்ல மதம். ஆனால் இந்த மதவுணர்வு சுரண்டல் வர்க்கத்திற்குப் பயன்பட்டது என்பதை மார்க்சியம் மறுக்க வில்லை.

உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்த போது மதம் தோன்றியது. அப்போது இயற்கைக்கு வடிவம் கொடுத் தார்களே அன்றி, அதற்கு இயற்கையை மீறிய சக்தி இருப்பதாக, அதன் மீது ஏற்றிக் கூறவில்லை. இதனை இந்து மதம் போற்றும் நான்கு வேதங்களில் காணலாம்.

இயற்கையை எதிர்த்து போராட முடியாத நிலையே, பண்டைய மக்களின் தொடக்க கால மதவுணர்வுக்கு காரணமாக

www.padippakam.com

இருந்தது. இதனோடு கூட சமூகத்தில் காணப்படும் சுரண்டல் முறையும், அதன் அழுத்தத்தினால் உண்டான செயலற்ற தன்மை யும், மதவுணர்வு வலுபெறுவதற்காண சமூக நிலைமைகளும் காரணமாகின்றன. தமக்கு எதிராக காணப்படும் இந்த சமூக சக்திகளை, எதிர்கொள்ள முடியாத நிலையே, மக்களை கற்பனையான, எதிர்நிலையான வடிவத்தில், மதம் உறுபெற்றது.

சமூகத்தில் காணப்படும், மக்களுக்கு மீறிய சக்திகள், உலகிற்கு அப்பாற் பட்ட அதீத சக்திகளைத் தோற்றுவிக்கிறது.

**இதனை எங்கெல்ஸ் கூறுகிறார்:-**

> "எல்லாச் சமயங்களுமே, மனிதர்களின் அன்றாட வாழ்க்கையைக் கட்டுப்படுத்துகிற அந்தப் புறம்பான சக்திகள் பற்றி மனிதர்களின் மனங்களில் ஏற்படும் கற்பனையின் பிரதிபலிப்பே தவிர வேறு ஏதுவுமில்லை, **இந்தப் பிரதிபலிப்பில் மண்ணுலக சக்திகள், இயற்கையை மீறியதான சக்திகளின் வடிவத்தை மேற் கொள்கின்றன.** வரலாற்றின் துவக்கத்தில் இயற்கையின் சக்திகளே அவ்வாறு பிரதிபலிக்கப்பட்டன, மேலும் ஏற்பட்ட பரிணாமப் போக்கில் இவை பல்வேறு மக்களிடையே மிகவும் பன்முகமான பல்வகையான உருவகத் தோற்றங்களை மேற் கொண்டன. இந்த ஆரம்ப இயக்கப் போக்குக்கு மூலாதாரம் இந்திய வேதங்களில் தோன்றிய முன்பு - குறைந்தபட்சம் இந்தோ - ஐரோப்பிய மக்கள் விஷயத்தில் - ஒப்பியல் புரணாங்களால் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது, பிறகு இதன் கூடுதல் பரிணா மத்தில் இது இந்தியர்கள், பாரசீகர்கள், கிரேக்கர்கள், ரோமானி யர், ஜெர்மானியர்களிடையே விவரமாக எடுத்துக்காட்டப் பட்டிருக்கிறது. ..
>
> ஆனால் விரைவிலேயே **இயற்கையின் சக்திகளுடன் அக்கம் பக்கமாகச் சமுதாயச் சக்திகளும் செயலூக்கமடையத் தொடங்குகின்றன.** இந்த சக்திகள் மனிதனைச் சம அளவில் புறம்பாகவும் முதலில் சம அளவில் விளக்கமுடியாத வகையிலும் எதிரிடுகின்றன, **இயற்கை சக்திகளைப் போலவே காணப்படு கின்ற அதே இயற்கை அவசியத்துடன் அவன் மீது ஆதிக்கம் செலுத்துகின்றது.** முதலில் இயற்கையின் விந்தை யான சக்திகளை மட்டுமே பிரதிபலித்து வந்த கற்பனை உருவங்கள் இந்தக் கட்டத்தில் சமுதாய இயல்புகளைப் பெற்று வரலாற்று சக்திகளின் பிரதிநிதிகளாகின்றன."

*-டூரிங்குக்கு மறுப்பு - பக்கம் 555 - 556*



படிப்பகம்

இந்த அதித சக்திகளை வணங்கியும், அதனைச் சார்ந்து இருக்கவும் வேண்டும் என்று, மக்கள் கருதிக்கொண்டனர். மனிதனையும், சமூகத்தையும் கட்டுப்படுத்தும் அந்த சக்திகளே, இதனை ஒழுங்குப்படுத்துவதாக நினைத்தனர். அதனால் அதன் மீது அச்ச உணர்வும், கீழ்படிதலும் உருவானது.

சமூகத்தை ஒழுங்குபடுத்துகின்ற இந்த மதத்தின் போக்கு, சுரண்டும் வர்க்கத்தின் ஆதிக்கத்தை வலுப்படுத்த துணைசெய்கிறது.

மதம் என்பது மனிதமனதின் கற்பனையான வடிவம் அல்ல, சமூகப் பிரதிபலிப்பின் கற்பனை வடிவமாகும். மதம் தோன்றுவதற்கான சமூகக் காரணங்களின் அழிவின் மூலமே மதவுணர்வின் மறைவும் அடங்கியுள்ளது. அதனால் சமூகத்தில் காணப்படும் சுரண்டல் முறையின் அழிவோடு, மதவுணர்வு இருப்பின் தோற்றமும் மறைந்து போகும். அப்போது மதம் மேலுலகில் கிடைப்பதாக கூறப்பட்ட பொன்னான வாழ்வு, இவ்வுலகிலேயே கிடைத்துவிடும். மதம் மறைந்துவிடும்.

## எங்கெல்ஸ் கூறுகிறார்:-

> "... மனிதர்கள் புறம்பான, இயற்கை மற்றும் சமுதாய சக்திகளின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் வரையில், அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் இந்த சக்திகளுடனான மனிதர்களின் உறவின் நேரடியான அதாவது உணர்ச்சி பூர்வமான வடிவில் சமயம் தொடர்ந்து நிலவமுடியும். எனினும், நிலவும் முதலாளித்துவ சமுதாயத்தில் மனிதர்கள் தம்மாலேயே உருவாக்கப்பட்ட பொருளாதார நிலைமைகளால், அவர்களே உண்டாக்கியுள்ள உற்பத்தி சாதனங்களால் புறம்பான ஒரு சக்தியின் பலம் போன்று ஆதிக்கம் செலுத்தப்படுகின்றனர். எனவே, சமயத்தைத் தோற்றுவிக்கும் பிரதிபலிக்கிற செயல்பாட்டின் உண்மையான அடிப்படை தொடர்ந்து நிலவுகிறது. அதோடு சேர்ந்து அதன் சமயப் பிரதிபலிப்பும் நிலவுகிறது.
>
> இந்தப் புறம்பான ஆதிக்கத்தின் தற்செயலான தொடர்பு குறித்து, முதலாளித்துவ அரசியல் பொருளாதாரம் ஒரு குறிப்பிட்ட அளவு நுண்ணறிவினை வழங்கியிருந்த போதிலும், இதனால் முக்கியமான வித்தியாசம் எதுவும் ஏற்பட்டு விடவில்லை. முதலாளித்துவப் பொருளாதாரத்தால் பொதுவாக நெருக்கடிகளைத் தடுக்க முடியாது, தனிப்பட்ட முதலாளி

களை நஷ்டம், திரும்பிவராத கடன், வக்கற்ற வகையற்ற நிலை ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கவும் முடியாது, தனிப் பட்ட தொழிலாளர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் வறுமைக்கு எதிராக பாதுகாப்பளிக்கவும் முடியாது. மனிதன் ஒன்று நினைக்கத் தெய்வம் (அதாவது முதலா ளித்துவ உற்பத்தி முறையின் அன்னிய ஆதிக்கம்) ஒன்று கட்டளையிடுகிறது என்பது இன்னும் மெய்யாகவே உள்ளது.

முதலாளித்து பொருளாதார விஞ்ஞானத்தைக் காட்டிலும் மேலும் கூடுதலாகவும் அதிக ஆழமாகவும் சென்றதாயினும் சரி, வெறும் அறிவு சமூக சக்திகளை சமூகத்தின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வருவதற்குப் போதுமானதல்ல. எல்லாவற்றுக்கும் மேல் இதற்கு அவசியமாக இருப்பது ஒரு சமூதாயச் செயலே. இந்தச் செயல் நிறைவேற்றப்படும் பொழுது, சமுதாயம் எல்லா உற்பத்தி சாதனங்களின் உடைமையையும் மேற்கொண்டு, அவற்றை திட்ட மிட்ட அடிப்படையில் பயன்படுத்துவது மூலம், தன்னையும் தனது உறுப்பினர்கள் எல்லோரையும், அவர்களாலேயே உண்டாக்கப் பட்டு அவர்களை (வெல்ல) முடியாத அன்னிய சக்தியாக எதிரிட்டு நிற்கும் இந்த உற்பத்தி சாதனங்களால் அவர்கள் தளைப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் நிலையிலிருந்து தன்னைத் தானே விடுவித்துக் கொள்ளும் பொழுது - மனிதன் நினைப்பது மட்டு மின்றி செயல்படவும் செய்கிறான் - அப்பொழுது மட்டுமே சமயத் தில் இன்னும் பிரதிபலித்துக் கொண்டிருக்கும் கடைசி அன்னிய சக்தி மறையும், அதனுடன் சமயப் பிரதிபலிப்பே மறையும், இதற்குக் காரணம் பிறகு பிரதிபலிப்பதற்கென்று எதுவும் மீதமாக இருக்காது."

*-டூரிங்குக்கு மறுப்பு 557 - 558*

மனித சமூகம் தனது தொடக்க நிலையில் மதத்தை பெற்றிருக்க வில்லை. மதமற்ற சமூகமாகவே இருந்திருக்கிறது. அதே போல் வருங்காலத்தில் மதம் இல்லாத சமூகம் உருவாகும்.

## 3. பண்பாடு

இயற்கை மனிதனுக்கு எவ்வளவோ படைத்தளித்திருக்கிறது. மனிதன் படைத்தளிப்பதை பண்பாடு என்றழைக்கப்படுகிறது. லத்தீன் மொழியில் பண்பாடு என்றால் பயிரிடல், அதாவது இயற்கை நிலங்களில் தமக்கு தேவையான உணவிற்காக, (வேளாண்மை) பயிரிடப்படுவதைக்

குறிக்கிறது. பொதுவாக இதை இயற்கை ஆற்றல்களை மனிதன் வெற்றிக் கொண்டதை கருத்தில் கொண்டு இவ்வாறழைக்கப்பட்டது. மனிதயினம் தமக்கு தேவைப்படும் உணவை சேகரிக்கும் நிலையி லிருந்து, பயிரிடும் நிலைக்கு உயர்ந்ததை இங்கு பண்பாடு என்று குறிப்பிடப்படுகிறது.

முதலாளித்துவச் சிந்தனையாளர்கள், பண்படுத்துதல் என்பதை முதன்மைப்படுத்தி, மனிதனது உற்பத்தி நடவடிக்கைகளுக்கு அப்பால், மனிதனின் தன்னியல்பில் பண்பாட்டின் தோற்றத்தைக் காண்கின்றனர். மார்க்சியம் பண்பாட்டை தனிநபரிடையே, தானேயான வளர்ச்சி யாக பார்க்காமல், பொருளாயத வாழ்க்கையின் உற்பத்தி நட வடிக்கையின் போது மனிதனிடம் தோற்றம் பெறுவதாக கூறு கிறது. பண்பாடென்பது எல்லாத் துறைகளிலும் உள்ள மனிதனது செயற்பாட்டில், ஈடுபடும் உடல், அறிவு ஆகியவற்றின் முழுமை யிலும் அடங்கியிருக்கிறது. இச்செயற்பாட்டின் போது நடை பெறும் முறைகளிலும், படைப்பாற்றலில் உள்ள நேர்த்தியிலும், மதிப்புகளிலும், விளைவுகளிலும், உள்ளது. அந்தந்த காலகட்டங் களில் உள்ள சமூகம், நாடுகள் படைத்தளித்த சாதனையின் தனித் தன்மையில் பண்பாட்டின் வளர்ச்சி காணப்படுகிறது.

மார்க்சியம் பண்பாட்டை சமூக வளர்ச்சியின், அந்தந்த கால கட்டத்தில் காணப்படும் பண்புவழிப்பட்ட வளர்ச்சியாக காண்கிறது. பண்பாடென்பது சமூக உற்பத்தி மற்றும் அறிவுத்துறையின் முயற்சி என்று வரையறுக்கிறது. பண்பாடு சமூக உற்பத்திச் சக்தி களிலும் உற்பத்தி உறவுகளிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் கட்டத்தில் உள்ள பொருளாயத மற்றும் அறிவுத்துறைகளிலும் உள்ள தனித்தன்மையில் வெளிப்படுகிறது. அதாவது, பண்பாடென் பது பொருளாயத மற்றும் அறிவுத்துறைச் சாதனைகளின் முழுமையிலும், சமூகத்தின் பண்பாட்டு மரபுத் தொடர்ச்சியிலும் அடங்கியிருக்கிறது.

பண்டைய மனிதன் முதலில் கையாண்ட கரடுமுரடான கற்கள், தடித்த கழிகள் போன்றவற்றை தனது கைகளில் எடுத்து கையாண்ட போது மனிதயினத்தின் பண்பாட்டின் வளர்ச்சி தொடங்கியது. இயற்கையை எதிர்த்து நடத்துவதில், அதாவது மனித யினம் தானே தனக்கு வேண்டியதை படைத்துக் கொண்டதிலிருந்து, இது தொடங்குகிறது. இன்றைய கட்டத்தில், முதலாளித்துவ சமூகத்தில் பிரமாண்டமான வளர்ச்சியாக காட்சியளிக்கிறது. முந்தைய தலை முறையினரின் பண்பாட்டை இதுவரை வளர்ச்சியுற்றுவந்த கருவிகளிலும், இயந்திரங்களிலும், கோயில் வடிவிலும், பல்லடுக்க மாளிகையிலும் பொருளாயத பண்பாட்டு வளர்ச்சியினை காண முடிகிறது.

பண்டைய கம்யூனிச சமூகத்தின் மறைவிலும் அடிமைச் சமூகத்தின் தொடக்கத்திலும் குறிப்பாக அறிவுத்துறைப் பண்பாட்டில், வர்க்கத்தன்மை பெறத்தொடங்குகிறது. பகைமை கொண்ட வர்க்கச் சமூகத்தில் பண்பாட்டு உள்ளடக்கத்திலும், செயற்பாட்டிலும் வர்க்கத் தன்மை பெற்றதாக காட்சியளிக்கிறது.

மனிதயினம் வாழவேண்டு என்னும் போராட்டத்தில் தமது திறமைகளை வளர்த்துக் கொள்ளும் போது பண்பாடும் வளர்கிறது. அப்போது மனித சமூகத்தில் செய்திறன், பழக்கவழக்கங்கள் மற்றும் நெறிமுறைகள் ஆகியவை உருபெற்று வளர்ச்சியடைகிறது.

சமூகத்தின் உந்துவிசையாக வர்க்கப்போராட்டம் அமைகிறது. சுரண்டல் சமூகத்தில் உற்பத்தியில் ஈடுபடும் மக்கள் வர்க்க பிரிவாக செயல்பட்டு வர்க்க அமைப்பாக வளர்கிறது. அன்றைய அமைப்பின் அடித்தளத்தமே, அன்றைய பொருளாயத மற்றும் அறிவுத்துறையின் பண்பாட்டைத் தீர்மானிக்கிறது.

ஒருகுறிப்பிட்ட சமூக அமைப்பின் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருப்பது பண்பாட்டு வளர்சியா? அல்லது உற்பத்தி சக்திகளா? ஏன்ற கேள்வி எழுப்பப்படுகிறது. இந்த இடம் பலரை தடுமாற வைத்திடுகிறது.

வர்க்க சமூகத்தை சரியானபடி அறிந்து கொள்ளாததால் இந்த தடுமாற்றம் ஏற்படுகிறது. மார்க்சியம் கூறுகிறது, உற்பத்தி சத்தியின் வளர்ச்சியில் தான் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சி அடங்கியிருக்கிறது, இந்த உற்பத்தி முறையின் வளர்ச்சியிலிருந்து தான் இதை விட மேலான உற்பத்தி முறைக்கு மாறுகிறது. இந்த மாற்றத்தை பண்பாட்டு வளர்ச்சியிலிருந்து பார்ப்பவர்களுக்கு, மார்க்ஸ் விளக்கும் வர்க்கச் சமூகக் கொள்கையை பற்றிய சரியான புரிந்தல் இல்லை. சமூகம் தனியுடைமையாக ஆனதிலிருந்து, வர்க்கம் தோன்றியது, வர்க்க சமூகத்தின் உற்பத்தியின் அடித்தளதிலிருந்தான் பண்பாடு நிர்ணயிக்கப்படுகிறது. இதனை மறுப்பவர்களும், ஏற்றுக்கொள்ள முடியாதவர்களும் மார்க்சியத்திற்கு மாறான முடிவிற்கே வரமுடியும். (இந்நூலின் இறுதியியலில் இதனை சுருக்கமாக விவரிக்கப்படுகிறது)

பண்பாடு இரண்டு தளங்களில் செயல்பெறுகிறது, அது பொருளாயதம் மற்றும் அறிவுத்துறை ஆகியவையாகும். மார்க்சியம் இந்த இரண்டிற்கும். இடையேயுள்ள உறவையும், சார்பையும் வலியுறுத்துகிறது. அறிவுத்துறை இரண்டாம் நிலையினதாகவும், சார்பு நிலையில் சுதந்திரம் பெற்றதாகவும் இருக்கிறது. மற்ற சமூக நிகழ்வுகளைப் போல், பண்பாடும் குறிப்பிட்ட பொருளாதார அமைப்பிற்கு

பொருத்தமான மேற்கட்டமைப்பாய் இருக்கிறது. ஒவ்வொரு சமூக பொருளாதார அமைப்பிற்கு ஏற்ற பண்பாடுகள் காணப்படுவதைக் கொண்டு இதனை அறிந்துகொள்ளலாம்.

பொருளாயத பண்பாடு, சமூகம் இயற்கையை வெற்றிக் கொண்ட அளவைக் காட்டுவதாக இருக்கிறது. உழைப்புக் கருவிகளின் தரம், பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம், தொழிலாளியின் தொழில் திறம் மற்றும் அன்றைய அறிவியல் வளர்ச்சியின் சாதனங்கள் ஆகியவற்றில் அடங்கியிருக்கிறது. உழைப்புக் கருவிகளின் வளர்ச்சி, பொருளாயத பண்பாட்டின் உள்ளடக்கமாக இருக்கிறது.

பொருளாத பண்பாட்டின் வளர்ச்சியை அறிந்து கொள்வதற்கு, சமூகத்தில் காணும் பண்படுத்திய நிலம், உடை, உறைவிடம், மக்களால் பயன்படுத்தப்படும், மரம் மற்றும் உலோகத்தைக் கொண்டு உருவாக்கிய சாமான்கள், தொழில் கூடங்கள், மாடமாளிகைகள், மற்றும் கல்வி, அறிவியல், மருத்துவம் ஆகியவற்றில் உள்ள வளர்ச்சியின் சாதனைகளில் காணலாம். பொருளாயத பண்பாடு வர்க்க சமூகத்தின் தனியுடைமைத் தன்மையை வெளிப்படுத்துகிறது.

கருத்துக்கள், சமூக நெறிமுறைகள், கலைவடிவங்கள் மற்றும், நூல்கள், ஓவியங்கள், நாடகம், நடனம், திரைப்படம், ஊடகம் மற்றும் இவற்றோடு இணைந்த அழகியல் ஆகியவை அறிவுத்துறையைச் சார்ந்த பண்பாடாகும். இதுவரை சேகரித்து வைத்துள்ள அறிவு, அனுபவம், விழுமியம், பழகுமுறைகள் ஆகியவை இதைச் சார்ந்ததாகும். இந்த அறிவுத்துறை பண்பாட்டு, வர்க்கச் சார்பை வெளிப்படுத்தும் பகுதியாக இருக்கிறது. ஆதனால் தான் இதனை அறிவுத்துறை ஒடுக்குமுறை என்று லெனின் கூறினார். பாட்டாளி வர்க்கத்தின் அறிவுத்துறை பண்பாடு அவர்களது வாழ்வின் போராட்டத்தில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைகிறது.

## 4. கலைகள்

சொல்ல வரும் கருத்தை, கலைப் படைப்பாளர்கள் அழகியலோடு வெளிப்படுத்துகிறார்கள். மனிதர்கள் தமது வீட்டில் பயன்படுத்தும் சிறுசிறு பொருட்கள் முதற்கொண்டு அழகியலோடு உருவாக்கிக் கொள்கின்றனர். உடை, உறைவிடம், உணவு ஆகிய அனைத்தையும் அழகியலோடு படைத்துக்கொள்கின்றனர். இதனை பழங்குடி மக்களிலிருந்து, நாகரீக மக்கள்வரை உள்ள அனைவரிடத்தும் காணலாம். **இதில் அழகியல் தன்மையைவிட பயன்பாடு முதன்மையானது, அதாவது தங்களுக்கு பயன்பாட்டுக்கு உட்பட்டதாகவே அழகியல் இருந்துவருகிறது.** கலை என்பதை வெறும் அழகியல் உணர்ச்சி என்று சுருக்கிக் கொள்ளமுடியாது.

கலை, ஒரு சமூக உணர்வுநிலையின் வடிவம் என்ற வகையில் மற்றவற்றோடு வேறுபடுகிறது. அரசியல் சித்தாந்தம், சட்டம் போன்றவை போல் சமூக வாழ்வின் நெருங்கிய, நேரடியான முறையில் கலை தம்மை வெளிப்படுத்திக் கொள்வதில்லை. இதில் அழகியல் உணர்வும், கற்பனை வளமும் மேலோங்கி இருக்கிறது.

கலை என்பது சிறுகதை, நாவல், கவிதை, நடனம், சிலை, ஓவியம், இசை, நாடகம், திரைப்படம் போன்வற்றை குறிக்கும். மக்கள் கலைத் தன்மையை அழகியல் உணர்வை, தங்கள் நடவடிக்கைகள் அனைத் திலும் வெளிப்படுத்துகின்றனர்.

சமூகவாழ்வின் தேவைகளின் விருப்பத்திற்கு ஏற்ப, மக்கள் இயற்கையை மாற்றிக் கொள்ளும் போது, தமது திறமைகளை யும், படைப்பாற்றலையும் வளர்த்துக் கொள்கிறார்கள். இவ்வாறு இயற்கையை மாற்றி அமைக்கும் செயற்பாட்டின் போது மக்கள் அழகியல் உணர்வுகளையும் தோற்றுவித்துக் கொள்கின்றனர்.

கலை என்பது மக்களின் அழகியல் உணர்வை நிறைவு செய்வதோடு, சமூகத்தின் எதார்த்தத்தை அறிந்து கொள் வதற்கும், அதனை மாற்றுவதற்கும் வழிமுறையையும், வெளிப் படுத்துவதாக இருக்கிறது.

பண்டைக் காலத்தில் கலை, உற்பத்திச் செயலோடு நேரடியாக இணைந்தும், பிணைந்தும் காணப்பட்டதை, கற்பாறைகளிலும், குகை களிலும் வாழ்ந்த மனிதன் தீட்டிய ஓவியங்களில் காணலாம். வேட்டையாடுதல், மீன் பிடித்தல், உழவுசெய்தல் போன்ற செயல்களின் போது தேவைப்படும், நுணுக்கத்தை பகிர்ந்து கொள்வதற்காகவே இவைகள் தீட்டப்பட்டிருப்பதை அறிந்து கொள்ளலாம். உடல் உழைப்பிலிருந்து, அறிவு உழைப்பு தனித்த பிரிவாக செயற்பட தொடங்கியது முதல் நிலைமை மாறுகிறது.

கருத்துமுதல்வாதக் கண்ணோட்டமானது, கலையைச் சமூதாயத் தின் அடித்தளத்திலிருந்து பிரித்தும், விலக்கியும் காட்ட முயற்சிக்கிறது. கலை கலைக்காகவே என்கின்றனர். கலையை முழுமையான கருத்துப் போக்காக, அகநிலை உணர்வாக, தனிமனித உள்ளாற்றலாக கருத்து முதல்வாதம் கருதுகிறது.

மார்க்சியமோ, கலை வர்க்கத் தன்மை பெற்றதாக தெரிவிக்கிறது. முரண்பட்ட சமூகத்தில் கலை ஒரு சார்பற்றதாக, வர்க்கங்களுக்கு அப்பாற்பட்ட கலையாக இருக்க முடியாது. பகைமை கொண்ட சமூகத்

www.padippakam.com

தில், கருத்துப் போரை நிகழ்த்த கலை எப்போதும் ஒரு கருவியாக செயல்படுகிறது.

அதனால் எதார்த்தத்தை தொழிலாளி வர்க்கக் கலை படம்பிடித்து காட்டுகிறது. முதலாளித்துவ கலை யதார்த்த போக்கை திசை திருப்பவும், புரியாத வகையில் மாயத் தோற்றமாக, சமூகத்தைச் சித்தரிக்கிறது. முதலாளித்துவத்தில் ஓவியம் புரியாத் தன்மையில், மாயப்பொருளாக வெளிப்படுகிறது. அது மட்டுமல்லாது சிறுவர் கதைகளிலும் உலகத்திற்கு, வெளிக் கோள்வாசிகளிடமிருந்து, எப்போதும் ஆபத்து இருப்பதாக தெரிவித்துக் கொண்டேயிருக்கிறது. சமூகத்தின் மிது அச்சமும், அதற்கான மாயமயக்கமும் மக்களிடம் இருக்குமாறு, கலையை முதலாளித்துவம் படைத்தளிக்கிறது.

முதலாளித்துவ பொதுநெருக்கடியின் ஆபத்துக்களை வெளிப்படுத் தாமல், அந்த ஆபத்திலிருந்து தப்பித்து வருவதாக மட்டும் தொடர்ந்து செய்திகளை, புதுப்புது புள்ளிவிவரங்களோடு வெளியிட்டுக் கொண்டே யிருக்கிறது. பிற்காலங்களில் பொருளாதார நெருக்கடி ஏற்படாமல் இருப்பதற்கான வழிவகை ஏதும் இருக்கிறதா? என்று தேடிக்கொண்டே இந்த பணியை செய்துவருகிறது. இதற்கு முதன்மையான காரணம் முதலாளித்துவத்தின் ஆபத்தை மறைப்பதற்கும், அதனைப் பற்றிய சிந்தனைக்கு செல்ல விடாமல் தடுப்பதையும் கருத்தில் கொண்டுள்ளது. இதுவே, முதலாளித்துவ கலையின் தன்மை, மற்றும் மக்களை பிளவுபடுத்தும் போக்கும் இதன் முதன்மையான செயற்பாடாகும், மக்களை கோட்பாடு இல்லாமல், சிதைந்து இருப்பதையே விரும்பு கிறது. அதற்கான புதுப்புது தத்துவப்போக்குகளைப் படைத்துக் கொண்டே இருக்கிறது. இதற்காக மாவோவின் ஆயிரம்பூக்கள் மலரட்டும் என்ற முழக்கத்தையும் குட்டிமுதலாளித்துவ போக்குடையவர்களின் மூலம் பயன்படுத்திக்கொள்கிறது. கலைப் படைப்பாளி அறிந்திருந் தாலும் அறியாவிட்டாலும் கலையினுள் சித்தாந்தக் கண் ணோட்டம் வெளிப்படவே செய்கிறது.

சித்தாந்தத்திலிருந்து பிரித்து விடாமலும், கலையை சித்தாந்த முழக்கத்துடன் ஒன்றாக்கி குழப்பிவிடாமலும் தொழிலாளி வர்க்கம் தமது கலையை உருவாக்குகிறது. கலை சமூகத்தின் வெளிப் பாடாக இருப்பதால், அதில் அரசியல், சட்ட, அறநெறி, மதத்தைப் பற்றிய கண்ணோட்டம் அனைத்தும் வெளிப்படும். கலை யதார்த் தத்தை பிரதிபலிக்கும் போது யதார்த்தத்தைப் பற்றி மதிப்பீடும், அணுகுமுறையும் வெளிப்படுத்துகிறது. இதனால் கலையை சித் தாந்தத்திற்கு ஆட்பட்டதாகவே கருதுகிறது தொழிலாளி



படிப்பகம்

www.padippakam.com

வர்க்கம். அழகியல் உணர்வை வெளிப்படுத்துவது மட்டுமே கலையின் நோக்கமாக கருதாத பாட்டாளி வர்க்கம், தமது உலகக் கண்ணோட்டத்தை அழகியலோடு படைத்தளிக்கிறது.

## 5. அறநெறி

சமூகத்தில் நிறைய மரபுகளும், நியதிகளும் வழக்கத்தில் உள்ளன. இவற்றில் சில நியதிகள் அரசாங்கத்தின் சட்டங்களால் வகுக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகிறது. சட்டத்தின் மூலம் கடைபிடிக்க வேண்டியது மக்களுக்கு கட்டாயமாக்கப்படுகிறது. பிற நியதிகள் பொதுமக்களின் பழக்க வழக்கங்களால் உண்டாகின்றன. இவை அறநெறி, ஒழுக்கநெறி மற்றும் நீதிநெறி போன்றவையாகும். இதனை எளிதாக மக்கள் தாங்களே பின்பற்றிக் கொள்கின்றனர்.

இந்த அறநெறி பண்டைய மக்களிடையே ஒருவர் மற்றொருவருடனும், பொதுவாக இனத்தினினுள் கொண்டுள்ள உறவுகளின் அடிப்படையில் தோன்றியது. செய்யக் கூடியது, செய்யக் கூடாதது, ஏற்கக் கூடியது, ஏற்கக் கூடாதது என்பவை அன்றைய சமூகத்தில் மக்கள் தங்களுக்கிடையில் கூட்டுக் கருத்துக்களின் அடிப்படையில் உருவாக்கிக்கொண்டனர். இந்தக் கருத்துக்கள் அன்றை இனமக்களின் அனுபவங்கள், மற்றும் பழக்கவழக்கங்களின் தொகுப்பாக இருந்தது. அறநெறி மரபுகளும், பழக்கங்களும் மிகுந்த வலுவுள்ளவையாக இருக்கிறது. சில அறநெறிகள் தாம் தோன்றுவதற்கு காரணமாக இருந்த பொருளாதார நிலைமைகள் மாற்றமடைந்த பின்னரும் கூட நீண்ட நெடிய காலத்திற்கு நீடித்து செல்கிறது. அதன் தோற்றப் பொருள் மாற்றம்பெற்று வேறொரு பொருள்கொண்டேனும் அவை நீடித்து நிற்கிறது.

இந்த அறநெறியின் தோற்றம், மதம் தோன்றுவதற்கு முன்பாக ஏற்பட்டவையாகும். அதாவது அறநெறி என்னும் சமூக உணர்வுநிலையின் வடிவம் மிகப் பழைமையானது. பிறகு இதனை மதம் தம்முள் இணைத்துக் கொண்டது. இதனைத் தொடர்ந்து, மதம் அறநெறி என்பது கடவுளின் விருப்பம் என்றும், கடவுளின் கட்டளை என்றும் கூறத் தொடங்கின.

மார்க்சியம் இதனை மறுத்து, அறநெறியின் தோற்றம், சமூக வளர்ச்சியின், பொருளாதார உறவுகளின் மாற்றத்தின் அடிப்படையில் உருவானவை என்று விளக்குகிறது. அதன் வர்க்க சார்பையும் வெளிப்படுத்துகிறது. பகைமைக் கொண்டுள்ள ஒரு சமூகத்தில் அனைவருக்கும் பொதுவான ஒரே அறநெறி இருக்கமுடியாது என்பதை வலியுறுத்துகிறது.



படிப்பகம்

www.padippakam.com

தொடக்க காலத்திலிருந்து, சுரண்டலை பொதுவாக அநீதியை எதிர்த்து போராடாதே, பொறுமையைக் கடைபிடி, எது உனக்கோ, அதுவே உனக்கு கிடைத்தவை, கிடைத்ததைக் கொண்டு வாழ், உழைப்பது உன் கடமை, பலனை எதிர்ப்பார்க்காதே, ஊரோடு ஒத்துவாழ் போன்றவை ஆளும் வர்க்கத்துக்கு சாதகமான அறநெறியாகும்.

கிடைத்தைக் கொண்டு ஏன் பொறுமையாக இருக்க வேண்டும், நமக்கு வேண்டியதை நாமே எடுத்துக்கொள்வோம், உழைப்பை செலுத்தியவருக்கு இல்லாத உரிமையா? என்பவை அராஜகவாத போக்காகும், இதனால் சமூகத்தில் எந்த மாற்றமும் ஏற்பட்டதில்லை, மக்களுக்கு எந்தப் பயனும் கிடைத்திடல்லை. இவர்கள் சமூக வளர்ச்சியையும், மாற்றத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், தனிப்பட்டவரின் விருப்பம், அல்லது குழுவினது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள முயல்கின்றனர். இது குறுங்குழுவாதமாய் வடிவெடுக்கிறது.

அடுத்து தொழிலாளிகளின் அறநெறி, கிடைப்பதைக் கொண்டு வாழ்வதும், உடன் உழைக்கும் தொழிலாளியுடன் சேர்ந்து தமது தேவைகளுக்காக போராடுவதும், சுரண்டல் முறையை எதிர்ப்பதுடன், அதனை நீக்குவதற்கான வழியை கடைபிடிப்பதும், இந்த நோக்கோடு செயற்படும் விவசாயத் தோழர்களையும் இணைத்துக் கொள்வதும், அதற்கு சார்பான அறநெறிகளைப் பின்பற்றுவதும் தொழிலாளி வர்க்க அறிநெறியாகும்.

இனக்குழு தம் வளர்ச்சியின் இறுதி கட்டத்தில் இருந்த போது, மிகுந்த குழப்பமும், போட்டியும் உடையதாக இருந்தது. அப்போது ஏற்பட்ட சண்டைகள் மிகவும் கொடுரமாக இருந்ததன. பல்லுக்கு பல், ரத்தத்திற்கு ரத்தம் என்பது போன்ற போக்கு இருந்தது. பிறகு வர்க்கச் சமூகம் தோன்றிய பின், சமூகத்தில் அமைதியை எதிர்பார்த்தபோது பழிக்குபழி என்றபோக்கு மாற வேண்டிவந்தது. மன்னிக்கும் மனோ நிலை உருவானது அப்போது ஒரு கன்னத்தில் அடித்தால், மறுகன்னத்தைக் காட்டச் சொல்லிற்று, அவர் நாண நன்னயம் செய்வதை விரும்பியது.

**எங்கெல்ஸ் கூறுகிறார் :-**

> “இன்றைய சமுதாயத்தின் மூன்று வர்க்கங்களான நிலவுடைமைப் பிரபுக் குலம், முதலாளி வாக்கம் மற்றும் பாட்டாளி வர்க்கம் ஒவ்வொன்றுக்கும் அவற்றுக்கே உரிய ஒழுக்கநெறி இருப்பதை காணும் பொழுது நாம் ஒரு முடிவுக்கு மட்டுமே வரமுடியும், கடைசியாக நோக்குமிடத்து மனிதர்கள் தமது வர்க்க நிலைமை அடிப்படையாகக் கொண்டிருக்கும் நடைமுறை உறவுகளிலிருந்தே - அவர்கள் உற்பத்தியையும் பரிவர்த்தனையை



படிப்பகம்

யும் நடத்தி வரும் பொருளாதார உறவுகளிலிருந்தே - உணர்வு பூர்வமாகவோ அல்லது உணர்வுபூர்வம் இன்றியோ தமது அறநெறிக் கருத்துக்களைப் பெறுகிறார்கள்.

... ஜங்கம சொத்துக்களின் தனியார் உடைமை வளரத் தொடங்கிய தருணம் முதல் இந்தத் தனியார் உடமை நிலவிய எல்லா சமூகங்களும் இந்த ஒழுக்க நெறி ஆணையைப் பொதுவாக வைத்திருக்க வேண்டியிருந்தது, நீ திருடக்கூடாது. இதன் மூலம் இந்த ஆணை ஒரு சாசுவத ஒழுக்க நெறி ஆணையாகி விடுமா? எவ்வழியிலும் ஆகாது. திருடுவதற்கான எல்லாச் செயல் நோக்கங்களும் அறவே ஒழிக்கப்பட்ட ஒரு சமுகத்தில் அதன் காரணமாக அதிகமாய்ப் போனால் பைத்தியக் காரர்கள் மட்டுமே எப்பொழுதாவது திருடுவார்கள் என்ற நிலையில் "நீ திருடக் கூடாது" என்ற சாசுவத உண்மை யினை பயபக்தியுடன் பறைசாற்ற முயலும் ஓர் ஒழுக்க நெறிப் பிரசாரகர் எவ்வாறு சிரிப்புக்கு ஆளாவார் தெரியுமா!

எனவே, ஒழுக்க நெறி உலகத்திற்கும் அதன் நிரந்தரக் கோட் பாடுகள் உள்ளன, அவை வரலாற்றுக்கும் நாடுகளிடையான வேற்றுமைகளுக்கும் அப்பாற்பட்டு நிற்பவை என்ற சாக்கில் ஒரு சாசுவதமான அறுதியான என்றென்றும் மாற்றவொண்ணா அற நெறி விதி என்ற முறையில் ஏதேனும் ஓர் ஒழுக்க நெறி சூத் திரத்தையும் எம்மீது திணிக்க நடத்தும் ஒவ்வொரு முயற்சியை யும் நாம் நிராகரிக்கிறோம். இதற்கு மாறாக, இறுதியாக ஆய்வு செய்து பார்க்கும் பொழுதில் இதுகாறுமுள்ளதான எல்லா ஒழுக்கநெறிக் கொள்கைகளும் அந்தந்தக் காலங்களில் நிலவிய சமூகத்தின் பொருளாதார நிலைமைகளின் விளைவே என்று நாம் மெய்ப்பித்து நிலைநிறுத்துகிறோம். சமூகம் இதுவரையில் வர்க்கப் பகைமைகளிலேயே இயங்கி வந் திருப்பதால், ஒழுக்க நெறி எப்பொழுதுமே வர்க்க ஒழுக்க நெறியாக இருந்து வந்துள்ளது, அது ஒன்றா ஆளும் வர்க்கத்தின் ஆதிக்கத்தையும் மற்றும் நலன்களையும் நியாயப்படுத்தியுள்ளது அல்லது ஒடுக்கப்பட்ட வர்க்கம் போதியளவு வலுப்பெறத் தொடங்கியது முதல் இந்த ஆதிக்கத்திற்கு எதிரான அதன் கோபாவேசத்தின், ஒடுக்கப்பட்டவர்களின் எதிர்கால நலன்களின் சின்னமாக அமைந்துவிட்டது."

*- டூரிங்குக்கு மறுப்பு - பக்கம் 165 - 167*

www.padippakam.com

சமூகத்தில் பொதுவான அறநெறி என்று சில தொடர்ந்து வருவதும் உண்டு. குழந்தைகளின் மீது பெற்றோருக்கு இருக்கும் அக்கறை, பெற்றோர்களின் மீது குழந்தைகளுக்கு இருக்கும் அன்பு, மூத்தோரை மதித்தல், தன்னடக்கம், பொறுமை, சொன்னசொல் காப்பாற்றுதல் போன்றவை இவ்வகையைச் சார்ந்தது. இந்தப் பொதுவான அறநெறிகள் தோன்றிய காலத்தில் வர்க்க சார்பு இல்லாமல் இருந்த போதிலும், பிற்பாடு ஏற்பட்ட வர்க்க சமூதாயத்தில், அதற்குள் வர்க்க நலன்கள் இணைந்து கொண்டன.

## 6. தத்துவயியல்

தத்துவயியல் என்பது பற்றி மக்களிடம் பலதரப்பட்ட கருத்து நிலவுகிறது. தத்துவயியல் என்பது ஓய்வு பெற்ற, குடும்ப பொறுப்புகளை முடித்தவர்கள் அறிந்து கொள்ள வேண்டியது. மேட்டுகுடியினரால் மட்டுமே அறிந்து கொள்ளக் கூடியது, புரிந்து கொள்வதற்கு கடினமானது, அத்துடன் தத்துவயியல் வாழ்வியலுக்கு அப்பாற்பட்டது என்ற கருத்தையும் சமூகத்தில் பார்க்க முடிகிறது.

தத்துவயியல் கண்ணோட்டம் இன்றி, அதாவது ஓர் உலகக் கண்ணோட்டமில்லாத ஒரு நபரையும் சமூகத்தில் பார்த்திட முடியாது என்பது தான் உண்மை. குறிப்பிட்ட சமூகத்தில் வாழும் ஒரு நபர் நூற்றுக் கணக்கான, ஆயிரக் கணக்கான நிகழ்வுகளைக் காண்கிறார், நாட்டில் நடக்கும் நிகழ்வுகளை பற்றி தனக்கென்று சில கருத்துக்கள், உடையவராக இருக்கிறார். இதனோடு இயற்கை நிகழ்வுகளைப் பற்றியும் எண்ணிப்பார்க்காமல் அவரால் இருக்க முடியாது. இந்த உலகம் எங்கிருந்து வந்தது? மனித இனம் இவ்வுலகில் எவ்வாறு தோன்றியது? இறப்பிற்கு பின் மக்களுக்கு ஏற்படுவது என்ன? மகிழ்ச்சி என்றால் என்ன? வாழ்க்கையின் சாரம் என்ன? இது போன்ற கேள்விகளைப் பற்றி சிந்திக்கும் போது தன்னை அறியாமலேயே அவர் தத்துவயியலின் அடிப்படைகளைப் பற்றி சிந்திக்கிறார். இந்தக் கேள்விகளுக்கு எந்த விடையளித்த போதிலும் அதற்கு ஒரு தத்துவயியலின் உட்பொருள் இருக்கும். இவை அவர் சார்ந்திருக்கும் வர்கத்திற்குத் தக்கப்படி அமைந்திருக்கும். இவ்வகையில் தத்துவயியல் சமூக வாழ்வின் பிரதிபலிப்பகாகவே திகழ்கிறது.

இயற்கை நிகழ்வுகள், சமூக சிந்தனை ஆகியவைகளை கட்டுப் படுத்தும் மிகப் பொதுவான விதிகளை ஆராய்கிறது தத்துவயியல். அதாவது இயற்கை, சமூகம், சிந்தனை இவற்றுடைய வளர்ச்சியின் மிகப் பொதுவான விதிகளைப் பற்றிய அறிவியல் என்று தத்துவயியலைக் கூறலாம்.



படிப்பகம்

www.padippakam.com

உலகத்தைப் பற்றிய ஒரு பொதுக்கருத்து நமக்குத் தேவை. அதில் நடைபெறும் நிகழ்ச்சிகளுடன், செயலற்ற முறையில் நில்லாமல், அவற்றின் மேல் ஆதிக்கம் செலுத்துவதற்கு இந்தக் கருத்து தேவைப்படுகிறது.

வாழ்க்கையின் பொருள் என்ன? மகிழ்ச்சி என்பது என்ன? என்ற கேள்விகளுக்கு முதலாளித்துவ சிந்தனையாளர்களும், பாட்டாளி வர்க்க சிந்தனையாளர்களும் வெவ்வேறு பதில்களை அளிக்கின்றனர். முதலாளித்துவ சிந்தனையாளர்கள் மகிழ்ச்சி என்பது முதன்மையாகச் செல்வமேயாகும் என்கின்றனர். அதுவே வாழ்க்கையின் குறிக்கோள், அதனை எப்படியாகிலும் அடைய வேண்டும் என்று கருதுகின்றனர். பாட்டாளி வர்க்க சிந்தனையாளர்களுக்கு பாட்டாளிகள் யாருடன் சேர்ந்து உழைக்கிறார்களோ அந்தத் தொழிலாளர்களால், தங்களுக்கும் தங்களைப் போன்ற மக்களுக்கும் மகிழ்ச்சி கிடைப்பதில், விருப்பம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஒரு புதிய மகிழ்ச்சிகரமான வாழ்வை எட்டுவதற்காகவும், உழைத்துக் கொண்டிருக்கும் தங்களுக்கும், தங்களைப் போன்ற மக்களுக்கும் பயன்படும்படியாக வாழ வேண்டும் என்பதிலும், இதற்காக நடத்தும் போராட்டத்திலும், அவர்களது மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது.

இவ்வாறாக தத்துவயியல் சிந்தனைக்கு இரண்டு அணுகு முறைகள் இருப்பதை, அதாவது முதலாளித்துவ கண்ணோட்டம், பாட்டாளி வர்க்க கண்ணோட்டம் இருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது. வர்க்கம் தோன்றியது முதல், கண்ணோட்டங்கள் தனித் தனியாக செயல்படுகிறது. பண்டைய பொதுவுடைமை சமூகத்தின் சிதையிலிருந்து, அதாவது ஏட்டிலேறிய வரலாற்றிலிருந்து தத்துவயியல் கண்ணோட்டமும் பிரிவுப்பட்டே காணப்படுகிறது.

சமூகம் பகைமைப்பட்ட வர்க்கங்களாகப் பிரிவுபட்டதிலிருந்து, எந்தப் பொதுவானதொரு உலகக் கண்ணோட்டத்தையும் காண முடியாது. ஒரு வர்க்கத்திற்கு ஒரு தத்துவயியலும், மற்றொன்றிற்கு வேறொரு தத்துவயியலுமாக இரண்டு பட்டே காணப்படுகிறது. பாட்டாளி கள், உழைக்கும் மக்கள் இவர்களது வாழ்க்கை நலன்களும், முதலாளிகளின் வாழ்க்கை நலன்களும முரணாகவும், பகையாக வும் இருக்கிறது. உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு அவர் கள் வெவ்வேறு வழிகளில் மறுவினை புரிகிறார்கள். ஒவ்வொரு வர்க்கமும் தனக்கே உரித்தான வழியில் அவற்றைப் புரிந்து கொள்கிறது. எனவே உலகக் கண்ணோட்டத்தில், அதாவது தத்துவயியல் கண்ணோட்டத்தில் வேறுபடுகிறார்கள். இதை



படிப்பகம்

www.padippakam.com

தவிர்த்து நடுநிலையான தத்துவயியல் என்பது கிடையாது, அதாவது அனைத்து மக்களுக்கும், பகைமைக் கொண்டுள்ள வர்க்கம் அனைத்திற்கும் ஒரேவிதமான பொதுத் தத்துவயியல் என்பது இருக்க முடியாது. தத்துவயியல் என்பது வர்க்க சார்புடையதேயாகும்.

பொருள்முதல்வாதிகள் தங்களின் கண்ணோட்டத்தை இயற்கை, பருப்பொருள், வாழ்நிலை என புறநிலையிலிருந்து தொடங்குகிறார்கள். கருத்துமுதல்வாதிகள் துவக்கத்தை ஆன்மீகமாக, அதாவது கருத்து, சிந்தனை, சங்கல்பம் என அகநிலையிலிருந்து தொடங்குகிறார்கள்.

பொருள்முதல்வாதிகள் உலகை விளக்குவதற்கு வெளிச் சேர்க்கைகள், கற்பனை வளங்கள் போன்றவற்றின் துணையை நாடாது, உலகில் காணப்படுபவைகளிலிருந்தே தமது கண்ணோட்டத்தை அமைத்துக் கொள்கின்றனர். இதனால் தான் இதற்கு பொருள்முதல் வாதம் என்று பெயர்.

கருத்துமுதல்வாதிகள் உலகத்தின் தொடக்கத்தையும், இருப்பை யும் உலகத்திற்கு அப்பால் உள்ளவற்றிலிருந்து விளக்குகிறார்கள், அதனால், சமூகத்தின் சாரத்தை அறிந்து கொள்ள முடியாமல், விடிவை சமூகத்திற்கு வெளியே தேடுகிறார்கள்.

சுரண்டுவோருக்கு கருத்துமுதல்வாதம் துணைபுரிகிறது, தொழி லாளிகளுக்கு பொருள்முதல்வாதம் உதவுகிறது.

அடுத்த இயலில், நான்கு சமூக பொருளாதார அமைப்பு ஒவ்வொன்றி லும் உற்பத்திச் சக்திகள், உற்பத்தி உறவுகள், முரண்பாடும் வீழ்ச்சி ஆகியவை எவ்வாறு, ஒரு பொருளாதார அமைப்பை நிலைமறுத்து, மற்றொரு மேலான பொருளாதார அமைப்பை ஏற்படுத்துகிறது என்பதை யும், அது, எவ்வாறு சோஷலிச சமூகத்தை நோக்கி செல்கிறது என்பதை யும் சுருக்கமாக காண்போம்.



படிப்பகம்

www.padippakam.com

# IV. சமூக பொருளாதார அமைப்பு

அடித்தளத்திற்கும், மேற்கட்டமைப்புக்கும் இடையிலுள்ள தொடர்பே, குறிப்பிட்ட சமூக வாழ்வின் முழுவடிவத்தை மொத்தமாக பார்க்க உதவுகின்றன. அடித்தளமும் மேற்கட்டமைப்பும் குறிப்பிட்ட காலகட்டம் வரை முரண்பாடுகளில் ஒற்றுமை (இணக்கம்) காணப்படுகிறது. அது அந்த காலத்திற்குரிய அரசியல் பொருளதார அமைப்பாக காட்சியளிக்கிறது.

சமூகம் கண்ட நான்கு பொருளாதார அமைப்பைப் பற்றி மிகச் சுருக்கமாகப் பார்ப்போம். அவை, 1 பண்டைய கூட்டுவாழ் கம்யூனிச சமூக உற்பத்திமுறை, 2 அடிமை சமூக உற்பத்திமுறை, 3 நிலப்பிரப்புத்துவ சமூக உற்பத்திமுறை, 4 முதலாளித்துவ சமூக உற்பத்திமுறை

## 1. பண்டைய கூட்டுவாழ் கம்யூனிச சமூக உற்பத்திமுறை பண்டைய கூட்டுவாழ் கம்யூனிச சமூகத்தின் உற்பத்தி சக்திகள்

மலைகளிலும், காடுகளிலும் மனித இனம் வாழ்ந்து வந்த காலத்தில், அவர்கள் முதலில் பயன்படுத்திய கருவி கல்லால் உருவானவையாகும். அவை கூர்மையற்ற கரடுமுரடானவை. இதனை பயன்படுதுவதற்கு, மனிதயினத்திற்கு பல்லாயிரம் ஆண்டுகள் கடக்கவேண்டியிருந்தது. இதனையடுத்து தடித்த கழிகளைப் பயன்படுதினார்கள். குகைகளும், காடுகளின் ஓரங்களும் அவர்களது வாழ்விடமாக இருந்தது.

இவ்விதமான வாழ்க்கை பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்தது. காலவோட்டத்தில் நன்றாக செதுக்கப்பட்ட கற்கருவிகளையும், கற்கோடாலிகளையும் பயன்படுத்தத் தொடங்கினர். ஈட்டி, அரிவாள் போன்ற கருவிகளையும் உருவாக்கிக் கொண்டனர்.

வில்லும் அம்பும் கண்டு பிடிக்கப்பட்டதற்கு பின், அக்கால மக்களின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மேம்பாடடைந்தது.

புதிய கருவிகளின் வளர்ச்சி, பழங்கால மனிதனின் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. இவற்றின் துணையால் மான், யானை, காண்டாமிருகம் போன்ற விலங்குகளை, முன்பைவிட அதிக அளவில் வேட்டையாட முடிந்தது.

நெருப்பைப் பயன்படுத்த தொடங்கியவுடன், பெரும் மாற்றங்கள் இனகுழுவில் ஏற்பட்டன. இப்போது நெருப்பினால் உணவுகளை



படிப்பகம்

உருவாக்கினார்கள், பிடித்த விலங்குகளை பச்சையாக உண்பதற்கு பதிலாக சமைத்து உண்டார்கள். இதன்மூலம் இனக்குழுவில் உள்ள மனிதர்களின் உடல் வலுபெற்றது, முன்பைவிட அதிகமாக உணவைத் திரட்ட முடிந்தது. முன்பை போல் பிழைப்பிற்காக இடம்பெயர்தல் குறைந்தது. ஒரேயிடத்தில் தங்கி வாழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. தனித்தனி இனக்குழுவாக வாழத் தொடங்கினர்.

வேலைகளை தங்கள் இனக்குழுவிற்குள் பிரித்துக் கொண்டனர். வேட்டையில் ஆண்கள் ஈடுபட்டனர். பெண்கள் பிள்ளை வளர்ப்பு, வயதில் முதிர்ந்தவர்களை பராமரித்தல் போன்றவற்றில் ஈடுபட்டனர். இதுவரை மனிதயினம் ஒருவித மந்தைகள் போல் வாழ்ந்த நிலைமாறி, ஒரு தொல்குலமாக வடிவெடுத்தது.

**இச் சமூகம் தாய்வழிச் சமூகமாக விளங்கியது.**

இயற்கையான புல்வெளிகளை தங்களது வளர்ப்புக் கால்நடைகளுக்கு உணவாகக் கொடுத்தனர். கால்நடை வளர்ப்பு வளர்ச்சியுற்ற காலகட்டத்திலும், தமக்கான பயிர்களைத் தாமே சாகுபடி செய்யத் துவங்கிய போதும், உழைப்புப் பிரிவினை ஏற்பட்டது. கால்நடை வளர்ப்பும், பயிர் சாகுபடியும் பிரிந்தது. இவ்வாறு வரலாற்றில் முதல் சமூக உழைப்புப் பிரிவினை உண்டாயிற்று. சாகுபடியாளர்கள் தமக்கு வேண்டிய சிறுசிறு கருவிகளை தாமே செய்து கொண்டனர்.

இனக்குழுக்களிடையே ஏற்பட்ட சண்டையில், தோற்ற இனக்குழு மக்களை இப்போது தமது இனக்குழுவிற்காக உழைக்கச் செய்தனர். முன்பெல்லாம் அவ்வாறு தோற்ற இனமக்களை பராமரிப்பதில் உள்ள கூடுதல் சிரமத்தின் காரணத்தால், கொலை செய்துவிடுவர். இப்போது அடிமைகளாய் வேலையில் ஈடுபட வைத்தனர்.

## பண்டைய கூட்டுவாழ் கம்யூனிச சமூகதில் உற்பத்தி உறவுகள்

மந்தை வாழ்க்கையிலும், பின்பு இனக்குழு வாழ்க்கையிலும் வளர்ச்சியடைந்த உற்பத்தி சக்திகளுக்கு, ஏற்ப உற்பத்தி உறவுகள் இருந்தது. உற்பத்தி சக்திகள் சிறிதளவிற்கே வளர்ச்சியடைந்திருப்பதால் ஒருவராலும் தனியாகத் தனக்கு வேண்டியதைத் நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை. எளிய கருவிகளைப் பயன்படுத்தினர். ஒவ்வொருவரும் இனக்குழுவில் உள்ள அனைவருக்காகவும் உழைத்தனர்.

www.padippakam.com

இவ்வகையான இனக்குழு சமூகத்தில் உழைப்பு கூட்டாக செயல் பட்டது, உணவு சேகரிப்பதில் அனைவரும் சமமாக ஈடுபட்டனர். சேகரித்த உணவுகள் இனகுழு முழுமைக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. **எளிய கூட்டுறவு செயல்பாடாக அன்றைய சமூக உறவுகள் இருந்தன.**

அன்றைய சமூகப் பொருளாதாரத்தில் ஏற்றதாழ்வு நிலை உருவாக வில்லை. மக்கள் வர்க்கமாக பிளவுபடாமலும், சொத்து என்று எதையும் தனிநபர்களிடம் சேரமாலும், அதாவது வர்க்க மற்ற, தனிச்சொத்து டைமையற்ற சமூகமாக, **ஒன்றுபட்ட தொன்மை கம்யூனிச சமூக அமைப்பாகக் காணப்பட்டது.**

தொன்மைக்கூட்டுவாழ் மக்களின் தேவைகளுக்கும், அப்போது கையாண்ட எளிய உற்பத்திக் கருவிகளுக்கும் இடையேயுள்ள முரண் பாடே தொன்மை கூட்டுவாழ் கம்யூனிச சமூக உற்பத்திமுறையின் முரண்பாடாகும்.

## தொன்மைக்கூட்டுவாழ் கம்யூனிச சமூக உற்பத்திமுறையின் முரண்பாடும் - வீழ்ச்சியும்

வளர்ச்சி அடைந்த உற்பத்தி சக்தியும், உழைப்பில் ஏற்பட்ட திறனும், உற்பத்தியை வெகுவாக அதிகரித்தது. வேலையில் ஈடுபட்டவர் களின் பிழைப்புக்குத் தேவையான, குறைந்தளவிற்கு மேல் உற்பத்திப் பொருட்கள் மிகையாய் கிடைத்தது. அப்பொருட்கள் சமூகத்தில் உள்ள சிலரது கையில் சேரத்தொடங்கியது.

அதாவது, விரைவாக வளர்ச்சியுற்ற உற்பத்தி சக்திகளுக்கு ஏற்ப உற்பத்தி பொருட்கள் அதிகரித்தன. சமூகம் உற்பத்தி செய்த மிகை உற்பத்திகளை, அன்றைய இனக்குழுத் தலைவர்களும், இனக்குழுவில் செயற்பட்ட சில பொறுப்பாளர்களும், சடங்குகளை நிறைவேற்றி வந்தவர் களும் தமதாக்கிக் கொண்டனர். உடல் உழைப்பு, மூளை உழைப்பு என்ற பிரிவு தோன்றியது. தனி மனித உழைப்பு தோன்றியவுடன், பழைய கூட்டுழைப்பு மறைந்து போனது. கூட்டுழைப்பின் போது சமூகத்திற்கு தேவைப்பட்ட எளிய கருவிகள் சமூகச் சொத்தாக இருந்தது. புதிதாக ஏற்பட்ட தனிமனித உழைப்பின் காரணமாக தனிச்சொத்து தோன்றத் தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து செல்வங்கள் ஓரிடத்தில் சேரத் தொடங்கிய தால், ஏழை, பணக்காரர்கள் என்ற வர்க்கப் பிரிவினை ஏற்பட்டது. இவ்வாறு தனிச்சொத்துடைமையின் தோற்றம் என்பது உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியால், புறநிலையினால் உருவானவையாகும். இதற்கு அடுத்து வந்த சமூகம், சொத்துடைமையுடன், வர்க்கச் சமூகமாக உருவெடுக்கத் தொடங்கியது.



படிப்பகம்

# 2. அடிமை சமூக உற்பத்திமுறை

## அடிமை சமூகத்தின் உழைப்பு சக்திகள்

தொன்மைக்கூட்டுவாழ் கம்யூனிச சமூக உற்பத்திமுறையின் விழ்ச்சியிலிருந்து, அடிமை சமூக உற்பத்தி முறை தோன்றியது. சமூக வரலாற்றில் அடிமை சமூகம் சுரண்டலின் தொடக்கமாகவும், அப்பட்ட வடிவமாகவும் இருந்தது.

வாழ்விற்கு தேவையானதை விட, சிறிது அதிகமான பொருட்கள் உற்பத்தி செய்திட முடிந்த போது, அடிமைச் சமூகம் தொடங்குகிறது. தொடக்கத்தில் அடிமைகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தனர்.

அடிமைகளோடு ஆண்டான்களும் உழைப்பில் ஈடுபட்டனர். தனியுடைமையின் தோற்றத்துடன், தாய்வழிச் சமூகம் மறைந்து. தந்தைவழிச் சமூகம் தொடங்கியது. இந்த தந்தை வழி குடும்பத்திற்கான தேவைகளை நிறைவு செய்வதற்கு அடிமையின் உழைப்பு பயன்பட்டது.

தொன்மைக்கூட்டுவாழ் சமூகத்தில் உழைப்புக் கருவிகள் கல்லால் ஆனவை, மற்றும் வில், ஈட்டி போன்றனவாகும். அடிமைச் சமூகத்தில் இரும்பு கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது, இதை உருக்கும் முறையும் ஓரளவிற்கு அறிந்திருந்தது, இதனால் இரும்பாலான கருவிகள் பயன்படுத்தப்பட்டது, இது மனித உழைப்பின் ஆற்றலைப் பெருக்கியது. இரும்பாலான கோடாரியும், கலப்பையின் கொழுமுனை ஆகியவையும், இரும்பால் அமைத்துக் கொண்டபோது, முன்பைவிட அதிகமான நிலப்பரப்பில் உழவுசெய்திட முடிந்தது.

தொடக்கத்தில் இருந்த குறைந்தளவில் உள்ள அடிமைகளின் எண்ணிக்கை போதாமல் போனது. இனக்குழுக்களிடையே நடைபெற்ற சண்டைகளில், தோற்ற போர்வீரர்களை முன்பைப் போல் கொலை செய்திடாமல், அவர்களையும் அடிமைகளாக்கி உழைப்பில் ஈடுபடுத்தினர். அப்போது அடிமைகளின் எண்ணிக்கை அதிகரித்தது. கால்நடை வளர்ப்பும் வளர்ச்சி பெற்றது, பெரிய மந்தைகள் உருவாகியது, அடிமைகளின் உழைப்பால் கால்நடைகள் பராமரிக்கப்பட்டது. பெருகிய அடிமைகளால், முன்பைவிட அதிகமான நிலபரப்பில் சாகுபடி செய்திட முடிந்தது. தொன்மைக்கூட்டு சமூகத்தில் உழைப்பென்பது, விருப்பப்படியான உழைப்பும், அனைவரிடையே ஒத்துழைப்பும் இருந்தது. அடிமை சமூகத்தில் அடிமையின் உழைப்பு கட்டாயமாக்கப்பட்டதாகவும், சலிப்பூட்டுவதாகவும் இருந்தது.

தொடக்கத்தில் விவசாயிகள் தமக்கு வேண்டிய உலோகக் கருவிகளைத் தாமே செய்து கொண்டும், பழுதுபார்த்துக் கொண்டும்

இருந்தனர். இரும்பை உருக்கிச் செய்யும் கருவிகளின் தேவை அதிகரித்த போது, கைவினைஞர்கள் என்ற தனி உழைப்புப் பிரிவினை ஏற்பட்டது. இது சமூகம் கண்ட இரண்டாம் உழைப்புப் பிரிவினையாகும்.

சமூகத்தில் வேலைப் பிரிவினையால் ஏற்பட்ட வளர்ச்சியின் போது, தனித்தனியாக செயற்பட்ட இனக்குழுக்கள், தங்களிடையே சிறு பண்ட பரிமாற்றங்களை நிகழ்த்திக் கொண்டன. இந்த பரிமாற்ற வளர்ச்சியில், கிடைக்கும் இடத்தில் குறைந்த விலைகொடுத்து பொருட்களை வாங்கி, தேவைப்படும் இடங்களில் அதிக விலைக்கு விற்கும் வணிக தொழில் நடைபெற்ற போது, வணிகர்கள் என்ற மூன்றாம் சமூக உழைப்புப் பிரிவினை தோன்றியது.

கைவினைஞர்களும், வணிகத் தொழிலும் வளர்ச்சி பெற்ற போது, பல ஊர் மக்கள் சந்திக்கும் சிறு நகரம் தோன்றியது, நாளடைவில் கைவினைஞர்களின், வணிகர்களின் மையங்களாக மாற்றம் பெற்ற போது, சிறுநகரங்கள் பெரிய நகரங்களாக உருப்பெற்றது.

உற்பத்திச் சக்திகளின் அதிகரிப்பால் ஆண்டைகளிடம் செல்வம் சேரத்தொடங்கியது, அடிமைகளின் மீதான சுரண்டல் அதிகரித்து, சிறிதளவாக இருந்த தனியுடைமை அதிகரித்து, உறுதிப்படத் தொடங்கியது. செல்வந்தர்களின் வாழ்க்கை ஆடம்பரமாக மாறியது, அடிமையின் வாழ்வோ மிகவும் சொல்லொணாத் துயரத்தை சந்தித்தது, உயிர் பிழைத்து வாழ்வதற்கு தேவையான உணவிற்கு மேல் கிடைப்பதென்பது அரிதாய் போனது.

சமூகத்தில் கடன் பெற்றவர்களில், கடன் செலுத்த முடியாமல் போனவர்கள் அடிமைகளாக மாற்றப்பட்டனர். கடன் கொடுத்தவருக்கும், கடன் பெற்றவர்களுக்கும் இடையே முரண் அதிகரித்துக் கொண்டே வந்தது.

கடன் கொடுக்கும் முறையில் கடுவட்டி முறை தோன்றியது.

புதிதாகத் தோன்றிய இந்த சமூக கொந்தளிப்பிற்கு, பழைய இனக்குழு தலைவர்களும், அனுபவம் பெற்ற மூத்தோர் அறிவுரைகளும், சண்டையில் ஈடுபடும் போது, தலைமை ஏற்றவர்களும் இன்று பயனற்று போயினர், அப்போது, புதிய குறுநில மன்னர்கள் தோன்றினர்.

சமூக கொந்தளிப்பை அடக்குவதற்கு, ஆயுதம் தாங்கிய படைகளும், சட்ட நியதிகளும், சிறை தண்டனைகளும், சுரண்டப்பட்ட மக்கள்மீது ஆளும் வர்க்கத்தின் வன்முறைக் கருவியாக அரசு தோற்றம் பெற்றது. வர்க்க முரண்பாட்டில் உருவெடுத்த அரசு

நிர்வாகம், கொந்தளித்த அடிமைகளை கட்டுப்படுத்தவும், அடிமைச் சமூகத்தை கட்டிக்காக்கவும் பயன்பட்டது.

## அடிமை சமூகத்தில் உற்பத்தி உறவுகள்

தொன்மைக்கூட்டுவாழ் கம்யூனிச சமூகத்தில் உழைப்புச் சாதனங்கள், அனைவருக்கும் பொதுவாக இருந்தது. அடிமை சமூகத்தில உற்பத்தி சாதனங்கள், அடிமையின் எசமானனுக்கு சொந்தமாகிவிட்டது. இத்துடன் அடிமைகளையும் உடைமையாக பெற்றிருந்தனர். அடிமைகளின் கடுமையான உழைப்பே இச்சமூகத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்தது. நூற்றுக் கணக்கிலும், சில இடங்களில் ஆயிரம் அடிமைகளைக் கொண்டும் வேலை வாங்கப்பட்டது.

அடிமையின் உழைப்பு கட்டாயமாக்கப்பட்டதாகும். ஆடு மாடு களைப் போல் அடிமை நடத்தப்பட்டார். அடிமையின் உழைப்பில் விளைந்தவை அனைத்தும், அடிமையின் எசமானனுக்கே சென்றது. அடிமைக்கு உயிர் பிழைத்திருப்பதற்கு மேல் உணவு கிடைப்பதில்லை. சத்தற்ற உணவும், சலிப்புற்ற உழைப்பும் அடிமையின் வாழ்க்கையாக இருந்தது. எசமானர்களின் வாழ்க்கை ஆடம்பரமாக, களியாட்டங்களாக இருந்தது. இந்த காலகட்டத்திலிருந்து கலைகள், ஓவியம், இலக்கியம் போன்ற படைப்புகள் அதிகரித்தது. இவ்வகை இலக்கியம், எசமானனின் மகிழ்விற்காகவே படைக்கப்பட்து.

விலங்குளைப் போல் அடிமைகளை விற்பதும், வாங்குவதும் நடைபெற்றது. அடிமைகளின் வேலைப்பளு அதிகமாக இருந்தது. பண்ட பரிமாற்ற வளர்ச்சியை ஒட்டி அடிமைகளின் மீதான சுரண்டல் மிகவும் கடுமையானது. தொடக்கத்தில் அடிமையுடன் வேலை செய்த எசமானன், அடிமைகளின் எண்ணிக்கை அதிகரித்த பிறகு, உழைப்பிலிருந்து விடுபட்டார். அடிமைகளிடமிருந்தே, அவர்களை கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டது. உடலுழைப்பும், மூளை உழைப்பும் தனித்தனியாகப் பிரிந்தது. இதனைத் தொடர்ந்து உழைப்பை இழிவாக கருதும் போக்கு வளர்ந்தது. குறைந் தளவிலுள்ள எசமானருக்காக, அடிமைகள் அனைவரும் உழைத்திட வேண்டியிருந்தது.

## அடிமைகச் சமூகத்தின் முரண்பாடும் - வீழ்ச்சியும்

சுரண்டலுக்கு ஆளான அடிமைக்கு, தாம் எவ்வளவு பாடுபட்டும், தமது வாழ்வில் பெரிய மாற்றம் ஏற்படாததால், உழைப்பின் விளைபயனில் அக்கரையின்மை ஏற்பட்டது. அதனால் அடிமையின் உற்பத்தி திறன் குறைந்து போனது. ஆடிமைகள், எண்ணிக்கையில் மிகுந்திருந்ததாலும்,

எளிதில் கிடைத்ததாலும், உழைப்பின் உற்பத்தித் திறனை பெருக்கு வதற்கு எசமானருக்கு விரும்பம் ஏற்படாமல் போனது. அடிமையின் கடும் உழைப்பால் விளைந்தவை அனைத்தும், எசமானரின் ஆடம்பரச் செலவில் வீணடிக்கப்பட்டது, கேளிக்கை களியாட்டங்கள் மிகுந்து காணப்பட்டது, சமூகத்தின் விளைபொருட்கள் ஊதாரித்தனத்தால் அழிந்து நாசமானது.

அடிமைகளை அடித்தும், வதைத்தும் வேலை வாங்கப்பட்டது. சிறு தவறுகளுக்கும் கடும் தண்டனை கிடைத்தது. எசமானனால் அடிமையை கொலை கூட செய்ய முடிந்தது. இதனை தடுப்பதற்கும், அடிமைகளை காப்பாற்றுவதற்கும், அன்றைய சட்டநியதிகள் துணைபுரியவில்லை. அடிமைகள் பேசும் விலங்குகளை போலானார்கள்.

அடிமைச் சமூகத்தின் இறுதியில், கடும் முரண்பாடுகள் தென்பட்டன. இதில் உற்பத்திக்கு தேவையான உழைப்புச் சக்தியாக இருந்த அடிமைகளை, அடக்கு முறைகளாலும், கொலைகளாலும் சமூக வளர்ச்சி தேக்கம் பெற்றது. அடிமைக்கும் எசமானருக்கும் சண்டைச் சச்சரவுகள் மிகுந்தன. அடிமைகளின் எண்ணிக்கை குறைந்துபோனதால், மற்றவர் களுடன் சண்டையிட்டு, தோற்ற போர்வீரர்களை அடிமையாக்கும் முயற்சி கடுமையாக நடைபெற்றது. போரின் போது அதிகமானவர்கள் இறக்க வேண்டியதாகியது. போரின் சுமையால் வரிகள் அதிகம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. போர் மற்றும் அடிமைகளின் உயிரிழப்பால் மக்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கிற்று. வளமையாய் விளைந்த வயல்வெளிகள் பாழானது. வணிகம் வளர்ச்சியற்று தேக்கம் கண்டது. கைவினைஞர்கள் நலிவுற்றனர். நகரங்கள் சீரழிந்தன, உழவர்கள் கீழ்நிலையடைந்தனர்.

இறுதியாய் அடிமைகளின் எழுச்சி, சமூகத்தை ஆட்டம் காண வைத்தது. இவர்களுடன் நலிவுற்ற சிறுசாகுபடியாளர்களும், போராட்டத் தில் இறங்கினர். போராட்டம் குறிக்கோளற்ற முறையிலும், பழைய சமூகத்தை மீட்டெடுக்கும் கனவு முயற்சிலும் நடைபெற்றதால், சுரண்டல் சமூகத்தை வெற்றி கொண்டு, மாற்றிட முடியாமல் போனது.

**சமூகத்தின் உற்பத்திச் சக்தியாய் இருந்த அடிமைகளுக்கு மாற்றாக, வேறு உற்பத்திச் சத்திகள் தேவைப்பட்டன. பெருநிலப் பரப்பில் எற்பட்ட உற்பத்தி பாழ்பட்டுப்போனபோது, சிறுநிலத்தில் உற்பத்தி செய்வது பாதுகாப்பாக தோன்றியது.** அடிமைச் சங்கிலி யிருந்து விடுபட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. பெருநிலங்கள் துண்டு நிலங்களாகப் பிரிக்கப்பட்டு சில பொறுப்பாளர்களிடம் சாகுபடிக்கு விடப்பட்டது. இந்தப் பொறுப்பளார்கள் அடிமைப் போலல்லாது, கொடுக்கப்பட்ட நிலத்தில் உழுதுபயிரிட்டு விளைச்சலில் கிடைத்ததைக்

கொண்டு பணமாகவோ, அல்லது விளைபொருளாகவோ பெரும்பங்கை நிலம் அளித்தவருக்கு கொடுத்தனர். இவர்கள் முழுதும் விடுதலைப் பெற்ற உழவர்களாக வாழவில்லை, ஒதுக்கப்பட்ட நிலத்தில் பிணைக் கப்பட்டவர்களாக இருந்தனர். பெறப்பட்ட நிலத்திலிருந்து விடுபட்டு போகமுடியாத நிலையில் இருந்த, இவர்கள் நிலம் விற்கப்படும் போது, அத்துடன் இவர்களும் சேர்த்து விற்கப்படக் கூடியவர்களாகவே இருந்தனர்.

இவ்வாறு அடிமைச் சமூகத்திலிருந்தே, நிலப்பிரபுத்துக் கூறுகள் கருக்கொள்ள தொடங்கியது. அதே நேரத்தில், வெளி நாட்டவர்களின் படையெடுப்புகளும் நிகழ்தது. போர் கடுமையாக தொடர்ந்தன. இந்த வெளி தாக்குதல்களும், உள்ளே தோன்றிய எழுச்சிகளும் முடிவில் அடிமைச் சமூகத்தை வீழ்த்தியது.

புதியதாய் தோன்றிய நிலப்பிரபுத்துவ அமைப்பு, சமூகத்தில் உள்ள சுரண்டலை அகற்றிடவில்லை, அதனிடத்தில் நிலப்பிரபுத்துவ சுரண்டல் என்னும் புதிய அமைப்பாக வடிவம் பெற்றது.

## 3. நிலப்பிரப்புத்துவ சமூக உற்பத்திமுறை

### நிலப்பிரப்புத்துவ சமூகத்தின் உழைப்பு சக்திகள்

துண்டு நிலங்களாக பிரித்தளித்த போக்கிலிருந்து, நிலப்பிரத்துவ அமைப்பு தோற்றம் பெற்றது. இது அடிமைச் சமூகத்தின் வீழ்ச்சியின் போது அதன் உள்ளிருந்து தோன்றியது. அடிமைச் சமூகத்தை நீக்கி, அதனிடத்தில் நிலப்பிரத்துவம் நிலைபெற்றது. அனைத்து நாடுகளிலும் அடிமை முறை முழுவளர்ச்சி பெற்றிடவில்லை. சிலநாடுகளில் தந்தைவழி அடிமையுடைமையின் சிற்சில கூறுகளை பெற்று, செம்மை அடிமை சமூகத்தின் வடிவத்தில், முழுவளர்ச்சியை எட்டாமல், நிலப்பிரப்புத்துவ கட்டத்திற்குச் சென்றது. இந்தியா, ரஷ்யா போன்ற நாடுகள் அடிமைச் சமூகத்தின் கூறுகளிலிருந்து, நேரடியாக நிலப் பிரத்துவத்திற்குச் சென்றது.

இந்த செம்மை அடிமை சமூகத்தின் சிதைவின் போது, இதன் அரசமைப்பு வீழ்ச்சியடைந்தது, வெற்றி அடைந்தவர்களிடம் எச்சமாக இருந்த இனக்குழு முறையும் சிதைந்தது. இந்த இனக்குழு பல்லாண்டு களாக போரில் ஈடுபட்டுவந்ததால், படைத்தலைவர்களையும், அவர் களைக் காப்பாற்றும் மெய்காப்பாளர்களும் கொண்ட அமைப்பாக இருந்தது. வெற்றி கொண்ட பகுதிகளை தங்களுக்கிடையே பகிர்ந்து கொண்டனர். பெரும் பகுதி போர்தளபதிகள் தமதாக்கிக்கொண்டனர், மற்றவற்றை போர் வீரர்களுக்கு வாழ்வுநாள் முழுமைக்கும் மட்டும்

www.padippakam.com

உரிமையாக பகிர்ந்தளிக்கப்பட்டது. நாளடைவில் தலைமுறை தலைமுறையாக உரிமை பெற்றவர்களானார்கள். நிலத்தில் உழைத்த உழவர்களிடமும் மாற்றம் ஏற்பட்டது. நிலத்தை மானியமாக பெற்றவர் கள், அரசுக்கு போர் சேவை செய்யவேண்டும்.

முன்பைப் போலவே உழவர்கள், நிலத்தில் உழுது பயிரிட்டனர். இப்போது நிலப்பிரபுவை சார்ந்து வேலை செய்ய வேண்டியதாயிற்று.

தொடக்கத்தில் உழவர்கள் நிலத்தோடு பிணைக்கப்படாமல் இருந்தனர், அதனால் பிற நிலச் சொந்தக்காரரிடம் சென்று வேலை செய்ய முடிந்தது.

நிலப்பிரத்துவ வளர்ச்சிக்கட்டத்தில் உழவர்கள் பண்ணையாட் களாக மாற்றம்பெற்றனர்.

உழவர்கள் தங்களது தேவைகளுக்காகவே உற்பத்தி செய்தனர். பண்ட பரிமாற்றம் என்பது பெரிய அளவில் நடைபெறவில்லை. நிலப்பிரபு தமக்கும், தம்மோடு இருப்பவர்களின் தேவைக்காகவும், பண்ணையாட் களின் உழைப்பால் உற்பத்தி செய்து கொள்ளப்பட்டது.

நிலப்பிரபுத்துவத்தின் தொடக்கக்காலத்தில் உழவுக் கருவிகள், தொன்மை சமூகத்தின் கருவிகளிடமிருந்து, பெரிய அளவிற்கு மாற்றமில் லாமல் இருந்தது. அவை மண்வெட்டி, அரிவாள், மரத்தாலான கலப்பை போன்றவையாகும். போர்களும் அதிகமாக நடைபெற்று வந்ததால், கால் நடை பற்றாக்குறை ஏற்பட்டு, உழவர்களே ஏரை இழுத்துச் செல்ல வேண்டிய நிலையும் உருவாயிற்று. இருப்பினும் அடிமைச் சமூகத்தில் இருந்த உற்பத்தி சக்திகளைவிட நிலப்பிரபுத்துவத்தில் அதிகரித்தே காணப்பட்டது.

உழப்பட்ட நிலம், விளைச்சலுக்குப்பின், தரிசாக 20 முதல் 25 ஆண்டுகளுக்கு விடப்பட்டு, பின்பே சாகுபடிக்குப் பயன்படுத்தும் முறை கையாளப்பட்டு வந்து. இதனால் ஐந்தில் அல்லது நான்கில் ஒரு பங்கு நிலம்தான் பயன்பாட்டில் இருந்தது.

பின்நாட்களில் தானியச் சாகுபடி, காய், கனி, தோட்ட பயிர் வளர்த்தல், திராட்சை சாறைவடித்தல், வெண்ணை எடுத்தல் போன்றவை வளர்ச்சியுற்றது. உழவுக் கருவிகளில் மேம்பாடும், இரும்பு போன்ற உலோகங்களை உருக்கும்முறையில் மேம்பாடும் உற்பத்திச் சக்தி களின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியது. கைத்தொழில் மற்றும் உழவுத் தொழில்களில், மனித உடலுழைப்பே முதன்மைப் பெற்று விளங்கியது.

அடிமைச் சமூகத்தில் வீழ்சியடைந்த கைவினைஞர்களின் தொழில், நிலப்பிரத்துவ சமூகத்தில் படிப்படியாக வளர்ச்சி பெற்றது. இரும்பாலான



படிப்பகம்

www.padippakam.com

கலப்பைகளும், இரும்பை உருக்கி செய்யப்படும் கருவிகள் பலவும், இக்காலகட்டத்தில் வளர்ச்சியுற்றது. முதலாளித்துவத்தின் கருவாய் விளங்கிய பட்டறைத் தொழில், இதன் தொடர்ச்சியாய் வளர்ந்து தனி பொருளாதார கிளையாய் நிலைபெற்றது.

## நிலப்பிரபுத்துவ சமூகத்தில் உற்பத்தி உறவுகள்

நிலப்பிரப்புத்துவ அமைப்பு, நிலத்துடன் பிணைக்கப்பட்ட மக்கள் மீது, நேரடியாக ஆட்சி செலுத்தியது. உற்பத்திச் சாதனங்களில், நிலமே முதன்மை பெற்றுவிளங்கியது. நிலங்கள் நிலப்பிரபுக்களின் உடைமை யாக இருந்தது.

நிலப்பிரபு நிலங்களில் சிலவற்றை தம்மிடம் வைத்துக் கெண்டார். பிறபகுதிகளை உழவர்களுக்கு பகிர்ந்து கொடுத்தார். அடிமைச் சமூகத் தில் சிதைந்த உழைப்புச் சக்தி, நிலப்பிரபுத்துவத்தில் பண்ணையடிமை களாக மாற்றம் பெற்றது. இந்த பண்ணையடிமை முறையே நிலப்பிரத்துவ அமைப்பில் உழைப்புச் சக்தியாகயாக விளங்கியது.

தமக்கு பகிர்ந்து கொடுத்த நிலத்தில், வாரத்திற்கு சில நாட்களுக்கு வேலைசெய்தும், பிறநாட்களில் நிலப்பிரபுவின் நிலத்தில் கூலியின்றி உழைப்பதும், தமக்களிக்கப்பட்ட நிலத்தில் விளைந்ததில், ஒரு பகுதியைக் நிலக்குத்தையாகக் கொடுக்க வேண்டியதும் ஆகியவை கட்டாயமாகக்ப்பட்டது. நிலக்குத்தகையாக தானியம், ஆடு, கோழி போன்ற பொருள்களை கொடுக்க வேண்டும் அல்லது பணமாக செலுத்த வேண்டும்

இதன் மூலம் உழவர்களுக்கு பெரிய வாழ்வு ஏதும் பெற்றிடவில்லை, என்றாலும், அடிமைச் சமூகத்தை விட சிறிது முன்னேற்றம் கண்டது, நிலச் சொந்தக்காரனுக்காக வாரத்தில் சில நாட்கள் உழைத்து முடித்து, தமக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தில் பிறநாட்களில் உழைத்திட முடிந்தது, அந்தளவிற்கு உரிமை பெற்வராக இருந்தனர்.

சில நூற்றாண்டுகள் சென்ற பின்பு, நிலக்குத்தையாக விளைபொருள், உயிரினம் போன்றவற்றிக்கு பதிலாக பணம் மட்டும் செலுத்த வேண்டும், என்று நில உரிமையாளரால் கட்டாயப்படுத்தப்பட்டது. உழவர் விளை பொருளையும், கோழி, ஆடு போன்றவற்றை சந்தையில் விற்று பணமாக்கி அதனை நிலப்புரபுவிற்கு ரொக்கமாக கொடுத்தனர்.

இதைத் தொடர்ந்து உழவர்களின் பண்டமாற்று உற்பத்தி முறை யாக மாற்றம் பெற்றது. பண்ட உற்பத்தி முறை வளர்ச்சியடையும் போது உழவர்களிடையே பல அடுக்குகள் தோன்றத் தொடங்கின, பண்ட



படிப்பகம்

பரிவர்த்தனை வளர்ந்ததால் சில உழவர்கள் பணக்காரர்களாகவும், மீதமுள்ள பெரும் பகுதியினர் ஏழைகளாகவும் மாறினர்.

உழவர்களுக்குத் தேவைப் படும் கருவிகளுக்கான பொருட்களை, நகரத்து கைவினைஞரிடம் கொடுத்து, கேட்ட பொருட்களை செய்து பெற்றுக் கொண்டனர். கைவினைஞரின் உழைப்புக் கருவிகள் தொன்மை வகையினதாக இருந்தது. நாளடைவில் கைவினைஞர்கள் உழவர்களின் தேவையானதை செய்து கொடுத்தும், தேவைப்படும் பொருட்களைச் செய்தும் சந்தையை நோக்கி அனுப்பினர். இதனைத் தொடர்ந்து கைவினைஞருக்கும், உழவருக்கும், மற்றும் சிற்றூரும், நகரத்திற்கும் இடைவெளி பெரியதாகி, தனித்து பிரிந்தது. கைவினைஞர்களின் பொருட்கள் சந்தையை நோக்கி உற்பத்தி செய்திடும் போது, வணிகத் தின் வளர்ச்சிய பெரிய அளவில் அதிகரித்தது.

உழவர்களின் தேவையின் அதிகரிப்பும், வணிகத்தின் வளர்ச்சி யடைய வேண்டிய நிலையும், கைவினைஞர்களின் உற்பத்தி முறையின் போதாமையும், ஏற்பட்ட போது, பட்டறைகள் தோன்றியது. இவ்வகையில் முதலாளித்துவ கூறுகள், நிலப்பிரபுத்துத்தினுள்ளேயே பிறந்தது.

## நிலப்பிரப்புத்துவ சமூகத்தின் முரண்பாடும் - வீழ்ச்சியும்

உழவர்களின் தொழில்நுட்ப வளாச்சியும், இரும்பாலான கலப்பை, இரும்பாலான கருவிகளின் பெருக்கமும், சாகுபடியில் முன்னேற்றமும், தோட்டப்பயிர் வளர்ச்சி, திராட்சையிலிருந்து சாறெடுக்கும் பக்குவம் மற்றும் பாலாடை, வெண்ணை போன்ற தயாரிப்பு முறையும் வளர்ச்சி யடைந்தது, கைவினைஞர்களின் உற்பத்தி முறை பட்டறை தொழிலாக மாறியது. இந்த வளர்ச்சியடைந்த உற்பத்தி சக்திகளுகளோடு, பழைய உற்பத்தி உறவுகள் முரண்பட்டு நிலப்பிரபுத்துவம் வீழ்ச்சியை சந்தித்தன.

பண்ட உற்பத்தியில் ஏற்பட்ட போட்டியின் காரணமாக, நொடிந்து போன உழவர்களும், கைவினைஞர்களும் வேலையற்று போய், முளைவிட்டுக் கொண்டிருக்கும் முதலாளித்துவ முறையில் கூலிகளாக வேலைக்குச் சென்றனர்.

வணிகத்தில் பெரும் ஆதாயம் அடைந்தவர்களிடம் சேர்ந்த பணம், வணிக மூலதனமாக மாறியது. இந்த வணிக மூலதனம், தொழில் மூலதனமாக மாற்றம் பெற்றது, வணகர்கள் தொழில் முதலாளிகளாக மாறினர்.

நிலப்பிரபுத்துவத்தில் காணப்பட்ட முரண்பாடுகளால் எழுச்சி யடைந்த உழவர் கூட்டத்தைப் பயன்படுத்தி, இளம்முதலாளிகள் அதி காரத்தை கைப்பற்றினர்.

புதியதாய் தோன்றிய முதலாளித்துவ அமைப்பு, சமூகத்தில் உள்ள சுரண்டலை அகற்றிடவில்லை, அதனிடத்தில் முதலாளித்துவ சுரண்டல் என்னும் புதிய அமைப்பாக வடிவம் பெற்றது.

## 4. முதலாளித்துவ சமூக உற்பத்தி முறை

### முதலாளித்துவத்தில் உழைப்புச் சக்திகள்

நிலப்பிரபுத்துவத்தின் வீழ்ச்சியிலிருந்து தோன்றிய, புதிய உற்பத்தி முறையே முதலாளித்துவமாகும். நிலப்பிரபுத்துவத்தின் ஊடே தோன்றிய சிறுபண்ட உற்பத்தியாளர்கள், மற்றும் நிலப்பிரபுத்துவத்தால் தூக்கி எறியப்பட்ட, அதவாது நகரத்தை நோக்கி துரத்தப்பட்ட வேலை யற்ற பட்டாளம் ஆகியவற்றில் முதலாளித்துவத்தின் தொடக்கம் அடங்கியிருக்கிறது. அதாவது முதலாளித்துவம் தோன்றுவதற்கு முக்கியமான இரண்டு நிபந்தனைகள் இருந்தன. ஒன்று சிலரது கைகளில் செல்வம் குவிதல், மற்றொன்று தனக்கென பிழைப்புச் சாதனம் ஏதுமற்ற மக்கள் கூட்டம் , இதனை நிலப்பிரபுத்துவம் தனது அழிவின் போது உண்டாக்கியவையாகும். சிறு பண்ட உற்பத்தியாளர்களிடையே தோன்றிய கடுமையான போட்டாபோட்டி அவர்களில் சிலருக்கும் செல்வத் தையும், மற்றவருக்கு அழிவையும் தந்து அவர்களில் பலரை நகரத்தை நோக்கி ஏதுமற்றவராய் துரத்தியது. இவர்களுடன் நிலப்பிரபுத்துவத்தில் உழைத்துவந்த பலருக்கு சொந்த ஊர்களில் வேலை ஏதுமில்லாது, உயிர் வாழ்வதற்கு தேவையான சாதனங்கள் ஏதுமற்றவராய் நகர் புறங்களை நோக்கி துரத்தியது. இவையே முதலாளித்துவத்தின் தோற்றத்திற்கு முதன்மையான காரணமாகும்

முதலாளி உற்பத்தி தொடங்குவதற்கு முன், தன்னிடமுள்ள பணத்தைக் கொண்டு தொழிற்சாலைக் கட்டிடங்களைக் கட்டுகிறார், அடுத்து தேவைப்படும் இயந்திரங்களை வாங்கி நிறுவுகிறார், உற் பத்திக்கான மூலப்பொருட்களையும், தொழிற்சாலைக்கு தேவைப்படும் எரிப்பொருட்களையும் சேகரித்துக்கொள்கிறார். இவ்வகையான பொருட்களை மட்டும் வைத்துக் கொண்டு உற்பத்தியை, முதலாளியால் நிகழ்த்திவிட முடியாது. உற்பத்திச் சாதனங்கள் ஏதுமற்றவராய், தனது உழைப்புச் சக்தியை மட்டுமே விற்கக்கூடிய நிலையிலேயுள்ள தொழி லாளியை, முதலாளி தன்னிடம் உள்ள உற்பத்திச் சாதனங்களுடன் இணைத்து சரக்கை உற்பத்தி செய்கிறார்.

www.padippakam.com

இதுவரை சமூகம் கண்ட உற்பத்தி முறைகளுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது, மிகக் குறைவான வரலாற்று கட்டத்திலேயே முதலாளித்துவம் வலுவான உற்பத்திச் சக்திகளைப் படைத்தளித்துள்ளது.

## முதலாளித்துவத்தில் உற்பத்தி உறவுகள்

இயற்கை பொருளாதாரத்தில் ஒருவர் தனக்கு தேவை என்று கருது வதையே உற்பத்தி செய்கிறார். பிறருக்காக என ஒரு பொருளை செய்யும் போது, வேண்டுபவரின் விருப்பத்தை அறிந்த பின்பே உற்பத்தியில் ஈடுபடுகிறார். முதலாளித்துவ சரக்கு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள முத லாளியோ தான் விரும்பும் எந்த சரக்கையும் உற்பத்தி செய்ய முனைய லாம். இதனால் இவருக்கு ஏதோ ஒருவித சுதந்திரம் இருப்பது போல் தோன்றும். ஆனால் அவர் சமூக உழைப்புப் பிரிவினையால் கட்டப்பட்ட வராவார். தான் விரும்பும் பொருளை உற்பத்திசெய்ய அவருக்கு மூல பொருள், இயந்திரம் போன்ற பொருட்கள் தேவையாய் இருக்கிறது. இதனை அவர் உற்பத்தி செய்திடுவதில்லை. பிற உற்பத்தியாளர் உண் டாக்கிய பொருளை பெற்றே தனது உற்பத்தியைத் தொடங்குகிறார். அதாவது அவர் மற்ற தனிப்பட்ட உழைப்பாளரின் பொருட்களைச் சார்ந்தே இருக்க வேண்டியவராகிறார். ஒவ்வொரு தனிப்பட்ட உழைப்பும், சமூக உழைப்பின் பகுதியாகவே இருக்கிறது.

எளிய பண்ட பரிவர்த்தனையில் உழைப்பதற்கு தேவைப்படும் சாதனங்களும், உழைப்பும் உற்பத்தியாளரைச் சார்ந்தே நடைபெற்றது. ஆனால் முதலாளித்துவத்தில் உற்பத்தி சாதனங்கள் முதலாளிக்குச் சொந்தமானவையாகவும், உழைப்பதற்கு என்று தனியே தொழிலாளர் களை, வைத்து உற்பத்தி நிகழ்த்தப்படுகிறது. எளிய பண்ட உற்பத்தி யின் இறுதி நோக்கம் உற்பத்தியாளரின் சொந்த தேவைகளை நிறைவு செய்ய வேண்டும் என்பதாகும், முதலாளித்துவத்தில் ஆதாயத்தை அடைய வேண்டும் என்னும் நோக்கத்தின் அடிப்படையில் உற்பத்தி நடத்தப்படுகிறது. எனவே இயற்கை பொருளாதாரத்தில் பரிவர்தனையாக செய்யப்பட்ட பண்டத்திற்கு, சாதாரனமாக பொருள் என்ற வகையிலேயே நிகழ்த்தப்படுகிறது, முதலாளித்துவத்தில் அப்பொருளுக்கு சரக்கு என்று பெயர்பெறுகிறது.

சரக்கு உற்பத்தி என்பது சமூக வேலைப் பிரிவினையிலும், இத னோடுகூட உற்பத்தி சாதனங்கள், தனிநபர்களிடம் தனியுடைமையாய் ஒன்றுகுவிவதன் மூலமும் தோன்றுகிறது.

முதலாளித்துவ சமூகத்தில் உற்பத்திச் சாதனங்களும், வாங்கப் பட்ட உழைப்புச் சக்தியும், முதலாளிக்குச் சொந்தமானவையாகும்,



படிப்பகம்

www.padippakam.com

அதனால் எதை உற்பத்தி செய்ய வேண்டும், எவ்வளவு, எப்படி செய்ய வேண்டும் என்பதை, முதலாளியே முடிவு செய்கிறார். இத்தகைய முதலாளியின் கட்டுப்பாட்டின் கீழ் தொழிலாளி வேலை செய்கிறார். தொழிலாளியால் உற்பத்தி செய்யப்பட்ட சரக்கு, விற்று பணமாக்கி அதனை முதலாளி சொந்தமாக்கிக் கொள்கிறார்.

முதலாளி, தொழிலாளிக்கு அவரது உழைப்புச் சக்தியின் மதிப்பிற்கு மட்டுமே சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதாவது சரக்கு என்ற முறையில் உழைப்புச் சக்திக்கு மட்டுமே இங்கு சம்பளம் தரப்படுகிறது. தொழிலாளி தமது இன்றியமையாத் தேவைகளை நிறைவு செய்யப் பட்டால் தான் அவரால் தொடர்ந்து உழைக்க முடியும். ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட அளவு சாப்பட்டிற்கு செலவு செய்கிறார். அவரது ஆடைகள், காலணி போன்ற தேவையான பொருட்கள் தேய்மானம் அடைகிறது. வீட்டு வாடகைக்கு என குறிப்பிட்ட பணத்தை கொடுக்கிறார். முதலாளிக் கான புதிய உயிருள்ள சரக்கான வளர்ந்து வரும் குடும்பத்தையும் கவனிக்கிறார். இந்த செலவிற்கான பணத்தை மட்டுமே தொழிலாளிக்கு சம்பளமாக தரப்படுகிறது.

முதலாளித்துவ உற்பத்தி முறையில் தொழிலாளி செலுத்தும் உழைப்பு இரு பகுதியாக செயல்படுகிறது. அதாவது தொழிலாளி வேலை நாளின் ஒரு பகுதியில் தமது உழைப்புச் சக்தியின் மதிப்புக்குச் சமமான மதிப்பை உற்பத்தி செய்கிறார். இதற்கு இன்றியமையா உழைப்பு என்றழைக்கப்படுகிறது. உற்பத்தி செய்த மற்றொரு பகுதிக்கான மதிப்பை தொழிலாளிக்கு பணம் கொடுக்காமல், முதலாளி தனதாக்கிக் கொள்கிறார். இதற்கு மிகை உழைப்பு என்றழைக்கப்படு கிறது. இந்த மிகை உழைப்பே, மிகை மதிப்பை தோற்றுவிக்கிறது. இன்றி யமையா உழைப்பிற்கு மட்டுமே தொழிலாளி சம்பளம் வாங்குகிறார். மிகை உழைப்பிற்கு என்று எதையும் பெற்றுக்கொள்ளவில்லை. தொழிற் சாலை முதலாளிக்குச் சொந்தமானவை, அங்கு உற்பத்தி செய்யப்பட்ட சரக்கு அனைத்தும் முதலாளிக்குச் சொந்தமானதாகிறது, ஆகவே இந்த மிகை மதிப்பு முதலாளிக்கு எவ்வித செலவுமில்லாமல் சென்றுவிடுகிறது.

அதிகமான ஆதாயத்தைத் தேடி அலையும் முதலாளிகள், உற்பத்தி செலவைக் குறைக்க இரு முறைகளைக் கையாளுகிறார்கள்.

முதலாவதாக, உழைக்கும் நேரத்தை நீட்டிப்பதின் மூலம் நடத்தப் படுவது. இது மிகை உழைப்பின் அளவை அதிகப்படுத்துவதால் கிடைக் கிறது. இதுபோன்ற நேரங்களில் தொழிலாளிக்கும் முதலாளிக்கும் பகைமையும், எதிர்ப்புகளும் அதிகமாகிறது. இதனை தவிர்ப்பதற்காக இரண்டாம் வழிமுறையை கடைபிடிப்பதிலியே முதலாளி அதிகம்



படிப்பகம்

www.padippakam.com

கவனம் செலுத்துகிறார். அதாவது மேம்பாடு அடைந்துள்ள இயந்திரங் களை பயன்படுத்த விளைகிறார். புதிய தொழில்நுட்பத்தில் மேம்பாடு அடைந்த இயந்திரத்தை உற்பத்தியில் ஈடுபடுத்துகிறார்.

இயந்திரங்கள் அதிகம் புகுத்தப்பட்ட தொடக்க காலத்தில் தொழி லாளர்கள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து, அதனை அடித்து, உடைத்து துடைத்தெறிய முனைந்தனர். தங்களது வேலையை இயந்திரம் பறித்துவிடுகிறது என்று நினைத்தனர். பிற்காலத்தில் இயந்திரங்கள் தமக்கு எதிரானதல்ல, இவைகளை பயன்படுத்திவரும் முதலாளித்துவ அமைப்பு முறையே பகைமையானது என்பதை கண்டுகொண்டனர்.

**முதலாளித்துவத்தின் முரண்பாடும் வீழ்ச்சியும்**

தொழிற்சாலையில் புதிய இயந்திரம் புகுத்தப்படும் போது தொழி லாளர்களின் பணிகள் எளியதாக்கப்பட வேண்டும், ஆனால் முத லாளித்துவ உடைமை அமைப்பு, இதற்கு இடம் கொடுக்காமல் உழைப்பின் கடுமையை உச்சத்திற்கு கொண்டு செல்கிறது.

உழைப்பின் உற்பத்தித் திறன், உயர்வதின் மூலம் இயந்திரங்கள் சமூகச் செல்வத்தை அதிகரிக்க செய்கிறது. ஆனால் முதலாளித்துவ சமூகத்தில் தனிச்சொத்துடைமை நிலவுவதால், கிடைத்திடும் பலன்கள் முழுமையையும் முதலாளிகள் தம்முடையதாக்கிக் கொள்கிறார்கள். இதனால் உருவான முரண்பாடு, முதலாளித்துவ அமைப்பு நெடுகிலும் தீர்க்கப்படாமல் தொடர்கிறது.

குறிப்பிட்ட பொருளுக்கு, சந்தையில் பொதுவாய் காணும் தேவை யின் அடிப்படையில், அனைத்து முதலாளிகளும் சரக்கை உற்பத்தி செய்கின்றனர். தனது பொருளை சந்தையில் மிகுதியாய் விற்கவேண்டும் என்கிற போட்டி முதலாளிகளுக்கிடையே நிலவுகிறது. இதன் விளை யாய். அதிக ஆதாயத்தை அடைவதற்கும், சந்தையில் தமது பொருட்கள் மிகுந்த அளவிற்கு விற்பதற்கும், பொருளின் விலை, போட்டி உற்பத்தி யாளர்களின் சரக்குகளின் விலையைவிட குறைவாக இருக்க வேண்டி யது இன்றியமையாததாகிறது, அதனால் தங்களது சரக்கின் உற்பத்திச் செலவை குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். அதனால் முதலாளிகள் புதிதுபுதிதான தொழில்நுட்பத்தையும், புதுமையான இயந்திரத்தையும், தமது தொழிற்கூடத்தில் புகுத்துகின்றனர்.

சந்தையின் தேவையை நோக்கி பல்வேறு உற்பத்தியாளர்கள் ஒரே நேரத்தில் ஒருங்கிணைந்த திட்டம் ஏதுமில்லாமல் சரக்கை உற்பத்தி செய்திடுகிறார்கள். இதனால் உற்பத்தியில் அராஜகம் (Anarchy of Pro-



படிப்பகம்

duction) ஏற்படுகின்றது. குறிப்பிட்ட சரக்கின் தேவை சந்தையில் உருவாவதைக் காணும் போது, பல்வேறு முதலாளிகள் அப்பொருளையே உற்பத்தி செய்திட முனைகின்றனர். கால ஓட்டத்தில் அப்பொருளின் தேவைவிட அதிகமாக உற்பத்தியாகிவிடுகிறது, அதனால் உற்பத்தி யான சரக்கு சந்தையில் விற்பனையாகமல் தேங்கிவிடுகின்றன. இது போன்ற நேரங்களில் விலையில் கடுமையாக இறக்கம் காண்கிறது. அதானல் உற்பத்தியாளர், அச்சரக்கின் உற்பத்தியை குறைத்துக் கொள்கிறார், அல்லது முழுவதுமாக நிறுதிவிட்டு, வேறொரு சரக்கை உற்பத்தி செய்ய முயல்கிறார்.

ஆதாயம் பெருகுவதையே நோக்கமாக கொண்ட முதலாளி களுக்கிடையே உள்ள போட்டா போட்டியின் விளைவாக மிகுதி யான சரக்குகள் உற்பத்தி செய்து விடுகின்றனர், அதற்கான சந்தையின் தேவையைப் பற்றி கணக்கில் எடுத்துக் கொள்வ தில்லை. இவ்வாறு மிகுஉற்பத்தி(overproduction) என்னும் சிக்கலில் வீழ்கிறது முதலாளித்துவச் சமூகம்.

முதலாளித்துவ அமைப்புத் தோன்றுவதற்கு முன்பு பல நெருக் கடிகளை சமூகம் கண்டிருக்கின்றன. அது வறட்சி, பெருவெள்ளம் போன்றவற்றால் ஏற்பட்டவை, அதாவது இவை இயற்கையின் சீற்றத்தால் உருவானவை. மிகு உற்பத்தி என்ற இந்த நெருக்கடியை முதலாளித்துவ அமைப்பால் மட்டுமே உருவாக்க முடிந்திருக்கிறது.

மிகு உற்பத்தியால் வாணிபம் சுருங்குகின்றன, சந்தையில் பொருட்கள் விற்பனையாகாமல் குவிந்துவிடுகிறது, இதனைத் தொடர்ந்து தொழிற்சாலையில் உற்பத்தி குறைத்தல், உற்பத்தியை நிறுத்துதல், தொழிற்சாலை மூடுதல் போன்றவை ஏற்படுகிறது. தொழிலாளிகளின் வேலையிழப்பு தொடர்கிறது.

இந்த மிகை உற்பத்தி என்பது, ஒருவகையில் சார்பானதாகும். அதாவது உண்மையில் சமூகத்திற்குத் தேவையானது போக மீத முள்ளதை, இந்த மிகைஉற்பத்தி குறிப்பிடவில்லை, இந்த முத லாளித்துவ உற்பத்தி முறை, தொழிலாளர் மற்றும் பல வேலையாளர்களை வேலையிழக்கச் செய்து, அவர்களிடம் வாங்கும் சக்தியிழக்க செய்துவிட்டது. முதலாளித்துவம், தனியுடைமை முறை யில் செயல்படுவதால், உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும், பலன் களை கையகப்படுத்தும் தனிவுடைமை பெற்ற முதலாளித்துவ வடிவத்திற்கும் இடையே காணும் முரண்பாடாய் விளங்குகிறது.

முதலாளித்துவ உற்பத்தியில் ஏற்பட்ட அராஜக போக்காலும், மூலதனத்தின் உழைப்பைச் சுரண்டுவதின் விளைவுகளும், தொழிலாளி

www.padippakam.com

களிடையே வாங்கும் திறனற்றுப் போயிற்று. முதலாளித்துவத்தில் உற்பத்தியின் நோக்கம், மக்களின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும் என்பதல்ல, உழைப்பாளியின் மிகை உழைப்பை சுரண்டி மூலதனத்தை பெருக்குவதே ஆகும்.

முதலாளித்துவத்தின் சரக்கு உற்பத்தியானது, நுகர்வுடன் தொடர்புடையதாகும், ஆனால் உழைப்பாளிகள் மற்றும் அனைத்து மக்களின் வாங்கும் திறனை இழக்கச் செய்து விடுகிறது முதலாளித்து வம். நுகராமல் சந்தையில் சரக்கு குவிந்து கிடக்கும் காலகட்டத்தில் உழைப்பாளியும். மக்களும் நுகரமுடியாமல், வேலையிழந்து, பட்டினியில் கிடந்து அவதிபடுகின்றனர்.

முதலாளித்துவ அமைப்பில் மிகுஉற்பத்தி, நெருக்கடி, தேக்கம், ஏற்றம், செழுமை என்ற சுற்று மீண்டும் மீண்டும் ஏற்படுகிறது. வீழ்ந்து போகாமல் தாக்குப்பிடித்த, தொழில் நிலையங்கள் புதிய ஏற்றம் பெற்று, புத்துயிர் உற்று வளர்கிறது. மீண்டும் முதலாளித்துவத்தில் திறனுடைய தேவையை கணக்கில் எடுக்காமல், மிகுஉற்பத்தி என்ற நிலையை நோக்கிச் செல்கிறது. மீண்டும் சந்தை சுருங்குதல், சரக்குகள் சந்தையில் குவிதல், உற்பத்தியில் வீழ்ச்சி, உற்பத்தி நிறுத்தம், தொழிற்கூடம் மூடுதல் என்ற பழைய நிலைமைகளை விட, கடுமையான நிலைமைகள் மீண்டும் அரங்கேறுகிறது.

இந்த உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையேயுள்ள மோதல், சோஷலிசப் புரட்சிக்கான அடித்தளத்தை, இந்த பொருளாதார சூழல் அமைத்துத் தருகிறது. உற்பத்திச் சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும், இடையே ஏற்படும் முரண்பாடு தான், புதிய சமூக உற்பத்தி முறைக்கான மாற்றத்திற்கு இட்டுச்செல்கிறது. இதைத் தொடர்ந்து சோஷலிச உற்பத்திமுறை தோற்றம் பெறுகிறது.

இவ்வாறு சமூக மாற்றத்தை மார்க்ஸ் வரலாற்றியல் பொருள்முதல் வாதம் என்ற தத்துவயிலின் மூலம் விளக்கியுள்ளார். இந்த தத்துவவிய லின் சாரத்தை புரிந்து கொள்ளாமல் - புரிந்து கொண்டு அதனை ஏற்றுக் கொள்ள முடியாமல் - இருப்பவர்கள், இத் தத்துவவியலின் அடிப்படை களை திருத்த முயற்சிக்கின்றனர். இப்போக்கு எவ்வாறு நடைபெறுகிறது என்பதை அடுத்த இயலில் சுருக்கமாக பார்ப்போம்.



படிப்பகம்

# V. சமூகத்தின் அடித்தளம் மேற்கட்டமைப்பு பற்றிய திருத்தல் போக்கு

வரலாற்றை இயக்கும் விசை எது? என்ற கேள்விக்கு மார்க்ஸ் கண்டுபிடித்ததும், அதனை "வரலாற்றியல் பொருள்முதல்வாதம்" என்று அழைத்ததும் அவரது அறிவொளியின் வெளிப்பாடாகும். இதனை ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள் தங்களை மார்க்சியர் என்று அழைத்துக் கொண்டு, மார்க்சிய அடிப்படையில் திருத்தலை செய்ய முற்படுகின்றனர். இதற்கு முதன்மையான காரணம் அவர்களால் இயக்கவியல் பொருள்முதல்வாதத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்பதும். அவர்களது சிந்தனையில் உள்ள கருத்துமுதல்வாதப் போக்கை விட்டுவிடமுடியவில்லை என்பதும் ஆகும்.

இந்த சிந்தாந்தப் புரட்டல் வேலையால், இளம் மார்க்சியவாதிகளை குழப்ப முயற்சிக்கின்றனர். சோவியத் தகர்வு போன்ற காரணத்தைப் பயன்படுத்தி, மார்க்சியத்தை ஏற்றுக் கொண்டவர்களிடம், மார்க்சியத்தின் மீது சந்தேகத்தை எழுப்புகின்றனர்.

மார்க்சியத்தின் அடிப்படைகளை முழுமையாகப் புரிந்தவர்களிடம் இந்த திருத்தல் வேலையும், சோவியத் தகர்வும் போன்ற காரணமும் எதையும் சாதித்திட முடியாது. ஆனால் மார்க்சியத்தின் அடிப்படைகளை அறிந்திராத, மார்க்சியத்தின் பால் ஈர்ப்பை மட்டும் பெற்றவர்களுக்கு, இந்த சிந்தாந்த புரட்டல்கள் குழப்பத்தை விளைவிக்கும். இது மட்டு மல்லாது சமூகவியல், வரலாற்றியல், தத்துவவியல், பொருளியல், தமிழ் போன்ற பாடங்களைப் படிக்கும் கல்லூரி மாணர்களுக்கு இதுபோன்ற குழப்பும் செயல்களால், பாதிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது.

அடித்தளமும் மேற்கட்டமைப்பும் பற்றி, மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோர், கூறிய கருத்துகளிலிருந்து தொகுப்போம். தொகுத்ததை மார்க்சிய ஆசான்களின் படைப்புகளைக் கொண்டு சரிபார்த்து, உறுதிப்படுத்திக் கொள்வோம். இந்தக் கருத்தோட்டத்தைப் பற்றி அதிகமான திருத்தல்வாதப் போக்கு இருப்பதால், இந்த முறையினைக் கையாள்வது சிறந்ததாயிருக்கும்.

## I

மனிதர்கள் தமது வாழ்க்கைக்காக உற்பத்தி செய்திடும் போது, தவிர்க்க முடியாத வகையில் திட்டவட்டமான உறவுகளில் ஈடுபடுகிறார்கள். இந்த உறவுகள் மனிதர் களுடைய சித்தங்களிலிருந்து தனித்து புறநிலையாக இருப்பவையாகும். இதுவரை வளர்ச்சியடைந்துள்ள பொரு ளாதார உற்பத்திச் சக்திகளின் மட்டத்திற்கு ஏற்ப, உற் பத்தி உறவு ஏற்படுகிறது. இந்த உற்பத்தியின் கூட்டு மொத்தமே அன்றைய அரசியல் பொருளாதார அமைப் பாகும், அதுவே அச்சமூகத்தின் அடித்தளமாகும். இந்த அடித்தளத்தின் மீது சட்டம், அரசியல் பேறன்ற மேல் கட்டமைப்பு எழுப்பப்படுகிறது. இதற்கு பொருத்தமாக சமூக உணர்வின் வடிவங்கள் தோன்றுகின்றன.

மனிதர்களின் உணர்வுநிலை அவர்களுடைய வாழ் நிலையை நிர்ணயிப்பதில்லை, அவர்களுடைய சமூக வாழ் நிலையே அவர்களுடைய உணர்வுநிலையை நிர்ணயிக் கிறது. இந்த மாற்றம் விரைவிலோ அல்லது சற்றுதாமத மாகவோ நடைபெறலாம். மனிதர்களின் சமூக வாழ் நிலையே அவர்களது உணர்வுநிலையை நிர்ணயிக்கிறது. இவ்வகையில் தான் சமூக உணர்நிலையின் மாற்றத்தை புரிந்து கொள்ள முடியும். ஒவ்வொரு சமூக அமைப்பும் அதன் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியை எட்டுவதற்கு முன்பாக மறைந்திடுவதில்லை. அச்சமூகத்திலுள்ள பழைய உற்பத்தி உறவுகள் அகற்ற வேண்டுமானால், புதிய உற் பத்தி உறவுகள் தோன்றுவதற்கான, பொருளாயத நிலைமைகள் அச்சமூகத்தில் தோன்றியிருக்க வேண்டும்.

## II

உற்பத்தியும், மறுவுற்பத்தியும், அடித்தளத்தை நிர்ணயிக் கிற சக்தியாகும். ஆனால், மேற்கட்டமைப்பு அடித்தளத்தை தாக்கம் செலுத்துவதையும், இடைச்செயல் புரிவதையும் மார்க்சியம் மறுத்திடவில்லை. இந்த இடைத்தொடர்பு மிகவும் தொலைவானதாக இருக்கிறது, முடிவில்லாத தற் செயல் நிகழ்வுகளுக்கு மத்தியில், முடிவில் பொருளாதார இயக்கம் இன்றியமையாததாகத் தன்னை நிறுவுகிறது. மேற்கட்டமைப்பு பலயினங்களில் வடிவத்தை நிர்ணயிப் பதில் பெரிதளவாயிருக்கின்றன.

## III

இரண்டாம் நிலையானாலும் சித்தாந்தங்கள் அடித்தளத்தின் மீது எதிர்ச்செயல் புரிவதை மார்ச்சியம் மறுக்கவில்லை. இதனை மறுப்பவர்கள் வரலாற்றியல் பொருள்முதல் வாதத்தை இயக்கவியல் கண்ணோட்டத்தில் பார்க்க வில்லை, காரணத்தை ஓரிடத்திலும், விளைவை வேறோர் இடத்திலும் காண்கிறார்கள். ஆனால் இந்த இடைச்செயல் சார்பானதாகும், மேற்கட்டமைப்பு அடித்தளத்திற்கு கட்டுப்பட்ட வகையில் தனது செயற்பாட்டில் சுதந்திரம் பெற்று அடித்தளத்தில் தாக்கம் செலுத்துகிறது. இந்த சார்பான தாக்கம், மேற்கட்டமைப்பின் முழுச்சுதந்திரம் பெற்றதாகவோ, அடித்தளத்தை நிர்ணயிக்கிற சக்தி உடையதாகவோ கணக்கிடமுடியாது. பொருளாதார இயக்கம் மிகவும் வலிமையானதாகவும், ஆதிமூலமான தாகவும், தீர்மானகரமான சக்தியாகவும் இருக்கிறது.

இந்த மூன்று பகுதியின் தொகுபிற்குரிய மார்க்சிய ஆசான்களின் கருத்துக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## I

**மார்க்ஸ் கூறுகிறார் :-**

"மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக ஈடுபடும் சமூக உற்பத்தியில் திட்டவட்டமான உறவுகளில் தவிர்க்க முடியாத வகையில் ஈடுபடுகிறார்கள். இந்த உறவுகள் அவர்களுடைய சித்தங்களிலிருந்து தனித்து நிற்பவையாகும், அதாவது அவர்களுடைய உற்பத்தியின் பொருளாயத சக்திகளில் வளர்ச்சியில் அந்தக் குறிப்பிட்ட கட்டத்துக்குப் பொருத்தமான உற்பத்தி உறவுகளாகும்.

இந்த உற்பத்தி உறவுகளின் கூட்டுமொத்தமே சமூகத்தின் பொருளாதார அமைப்பாக, அதன் உண்மையான அடித்தளமாக அமைகிறது. இதன் மீது சட்டம், அரசியல் என்ற மேற்கட்டமைப்பு எழுப்பப்பட்டு, அதனோடு பொருந்தக் கூடிய சமூக உணர்வின் குறிப்பிட்ட வடிவங்களும் உருவாகின்றன. பொருளாயத வாழ்க்கையின் உற்பத்தி முறை சமூக, அரசியல், அறிவுத்துறை வாழ்வின் பொதுவான போக்கை நிர்ணயிக்கிறது. மனிதர்களின் உணர்வுநிலை அவர்களுடைய வாழ்நிலையை நிர்ணயிப்ப தில்லை, அவர்களுடைய சமூக வாழ்நிலையே அவர் களுடைய உணர்வுநிலையை நிர்ணயிக்கிறது.

www.padippakam.com

... ... ...

**பொருளாதார அடித்தளத்தில் ஏற்படும் மாற்றங்கள், அந்த மாபெரும் மேற்கட்டுமானம் முழுவதையுமே சீக்கிரமாகவோ அல்லது சற்றுத் தாமதமாகவோ, மாற்றியமைக்கின்றன.** இப்படிப்பட்ட மாற்றங்களை ஆராய்கிற பொழுது உற்பத்தியின் பொருளாதார நிலைமையில் ஏற்படுகிற பொருள்வகை மாற்றங் களுக்கும் (இயற்கை விஞ்ஞானத்தைப் போல இதைத் துல்லிய மாக நிர்ணயிக்க முடியும்) சட்டம், அரசியல், மதம், கலைத் துறை அல்லது தத்துவஞானத் துறைகளில் - சுருக்கமாகச் சொல்வ தென்றால் சித்தாந்தத் துறைகளில் - **இந்தப் போராட்டத்தை மனிதர்கள் உணர்ந்து கொண்டு அதில் இறுதி முடிவுக் காகப் போராடுகின்ற கொள்கை வடிவங்களுக்கும் வேறு பாட்டைக் காண்பது எப்பொழுதுமே அவசியமாகும்.**

... ... ...

இந்த உணர்வைப் பொருளாயத வாழ்க்கையின் முரண்பாடுகள் மூலமாக, உற்பத்தியின் சமூக சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் இடையே உள்ள போராட்டத்தின் மூலமாகவே விளக்க முடியும்.

**எந்த சமூக அமைப்பும் அதற்குப் போதுமான உற்பத்தி சக்திகள் அனைத்தும் வளர்ச்சியடைவதற்கு முன்பாக ஒருபோதும் அழிக்கப்படுவதில்லை,** புதிய, உயர்வான உற்பத்தி உறவுகள் தாங்கள் நீடித்திருக்கக் கூடிய பொருளாயத நிலைமைகள் பழைய சமூகத்தின் சுற்றுவட்டத்துக்குள் முதிர்ச்சி யடைவதற்கு முன்பே பழைய உற்பத்தி உறவுகளை ஒருபோதும் அகற்றுவதில்லை. "

*அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு*
*ஒரு பங்களிப்பு முன்னுரை*

## எங்கெல்ஸ் கூறுகிறார்:-

**"சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டமைப்புதான் மெய் யான அடித்தளமாய் எப்பொழுதும் அமைகிறது. இதி லிருந்து தொடங்கினால்தான் வரலாற்றின் அந்தந்தக் காலக் கூறுக்கும் உரிய நீதிநெறி அரசியல் நிறுவனங்களும் மற்றும் சமயக் கருத்துக்களுமாகிய மேற்கட்டமைப்பு அனைத்திற்கும் நாம் முடிவான விளக்கம் காணமுடி**



படிப்பகம்

கிறது.... இதுகாறும் செய்யப்பட்டது போல மனிதனது உணர்வைக் கொண்டு அவனுடைய வாழ்நிலைக்கு விளக்கம் கூறுவதற்குப்பதில், மனிதனது வாழ்நிலையைக் கொண்டு அவனுடைய உணர்வுக்கு விளக்கம் கூறுவதற்கு ஒரு வழி கண்டறியப்பட்டது.”

*டூரிங்குக்கு மறுப்பு*

## II

**எங்கெல்ஸ் கூறுகிறார்:-**

“...வரலாற்றியல் பொருள்முதல்வாதக் கருதுகோளின்படி மெய்யான வாழ்க்கையின் உற்பத்தியும் மறுவுற்பத்தியுமே வரலாற்றை முடிவாக நிர்ணயிக்கின்ற சக்திகளாகும். மார்க்சோ, நானோ இதற்கு மேல் ஒருபோதும் சொல்லவில்லை. ஆகவே பொருளாதாரக் கூறு ஒன்றுதான் நிர்ணயிக்கின்ற ஒரே கூறு என்று யாராவது இதைத் திரித்துக் கூறினால், அவர் இந்தக் கருதுகோளைப் பொருளில்லாத, சூக்குமமான, அர்த்தமில்லாத சொற்றொடராக மாற்றிவிடுகிறார். பொருளாதார நிலைமைதான் அடிப்படை, ஆனால் மேற்கட்டமைப்பின் பல்வேறு கூறுகள் - வர்க்கப் போராட்டத்தின் அரசியல் வடிவங்களும் அதன் விளைகளும், வெற்றிகரமான சண்டைக்குப் பிறகு வெற்றி பெற்ற வர்க்கம் நிறுவிய அரசியலமைப்பு, இதரவை, சட்டவியல் வடிவங்கள், பங்கெடுப்பவர்களின் அறிவில் இந்த மெய்யான போராட்டங்கள் எல்லாவற்றின் மறிவினைகளும் கூட, அரசியல், சட்டவியல், தத்துவஞானத் தத்துவங்கள், சமயக் கருத்துக்களும் வறட்டுக் கோட்பாடுகளைக் கொண்ட அமைப்புகளாக அவற்றின் கூடுதலான வளர்ச்சியும் - வரலாற்றுப் போராட்டங்களின் நிகழ்வுப்போக்கின் மீது தாக்கம் செலுத்துகின்றன, பல இனங்களில் அவற்றின் வடிவத்தை நிர்ணயிப்பதில் பெரிதளவாயிருக்கின்றன.

இக்கூறுகள் அனைத்தும் இடைச்செயல் புரிகின்றன, அந்த முடிவில்லாத தற்செயல் நிகழ்வுகளுக்கு (அதாவத, பொருள்கள் மற்றும் சம்பவங்களின் உள் இடைத்தொடர்பு மிகவும் தொலைவானதாக அல்லது நிருபிக்க முடியாததாக இருப்பதால் அதை இல்லை என்று, அற்பமானதென்று நாம் கருத முடியாது) மத்தியில் முடிவில் பொருளாதார இயக்கம் இன்றியமையாததாகத் தன்னை நிறுவுகிறது.”

*பிரோஹுக்கு எழுதிய கடிதம் செப்டெம்பர் 21 (22) 1890*

www.padippakam.com

# III

**எங்கெல்ஸ் கூறுகிறார் :-**

"... பொருளாயத வாழ்க்கை முறை முதன்மையாக இருந்தாலும் சித்தாந்த துறைகள் தம்மளவில் - **இரண்டாம் நிலையான விளைவுடன் என்றாலும் கூட** - எதிர்ச்செயல் புரிவதை இது தடுக்கவில்லை என்பதை இந்த நபர் இன்னும் கண்டுபிடிக்க வில்லை என்றால், அவர் எதைப் பற்றி எழுதுகிறாரோ, அந்தப் பொருளைப் புரிந்து கொண்டிருப்பது சாத்தியமல்ல."

*கோ.ஷ்மிட்டுக்கு எழுதிய கடிதம் ஆகஸ்ட் 5, 1890*

**எங்கெல்ஸ் கூறுகிறார் :-**

"இந்தக் கனவான்கள் எல்லோரிடமும் இயக்கவியல் கிடையாது. அவர்கள் எப்பொழுதும் ஓரிடத்தில் காரணத்தையும் இன்னோர் இடத்தில் விளைவையும் பார்க்கிறார்கள். அது ஒன்றுமில்லாத சூக்குமம், அத்தகைய இயக்க மறுப்பியலான எதிர்முனைக் கோடிகள் மெய்யுலகத்தில் நெருக்கடிகளில் மட்டுமே நிலவு கின்றன, அப்பொழுது மொத்த, பரந்தகன்ற நிகழ்வுப் போக்கும் இடைச்செயலின் வடிவத்தில் நடைபெறுகிறது (இடைச்செயலில் ஈடுபடும் சக்திகள் மிகவும் சமமில்லாதவை என்றாலும், இவற்றில் பொருளாதார இயக்கம் இதுவரை மிக வலிமையான, மிகவும் ஆதிமூலமான, மிகவும் தீர்மானகரமான சக்தியாக இருக்கிறது) இங்கே எல்லாமே சார்பு நிலையானது. எதுவுமே தனிமுதலானது அல்ல - இதை அவர்கள் ஒருபோதும் பார்ப்பதில்லை."

*எங்கெல்ஸ் ஷ்மிட்டுக்கு எழுதிய கடிதம்*

அரசியல், சட்டவியல், தத்துவஞான, சமய, இலக்கிய, கலை, இதர வளர்ச்சி பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது, ஆனால் இவை அனைத்தும், ஒன்றின் மீது ஒன்றும், பொருளாதார அடிப்படையின் மீதும் எதிர்ச்செயல் புரிகின்றன. மற்றவை ஒவ்வொன்றும் செயலற்ற விளைவை மட்டுமே கொண்டிருக்கின்றன, பொருளாதார நிலைமை காரண மாக, தனியாக சுறுசுறுப்புடன் செயல் புரிகிறது என்பதல்ல. **பொருளாதார அவசியத்தின் அடிப்படையில் அது இறுதி யில் எப்பொழுதும் தன்னை வலியுறுத்துகிறது இடைச் செயல் நடைபெறுகிறது.**

*-எங்கெல்ஸ் வொ.போர்கியுசுக்கு எழுதிய கடிதம், லண்டன், ஜனவரி 25, 1894*



படிப்பகம்

தொகுத்துக் கொண்டதை, மார்க்சிய ஆசான்களான மார்க்ஸ், எங்கெல்ஸ், ஆகியோர்களின் கூற்றைக் கொண்டே சரிபார்த்தோம். இப்போது மார்க்சியத்தை புரட்டுபவர்கள் எவ்வாறு திருத்தல் பணியினை செய்கின்றனர் என்பதை காண்போம்.

ஏன் இவ்வாறு தொகுக்க வேண்டிவந்தது என்றால், மார்க்சியம் கூறும் அடித்தளம் மேற்கட்டமைப்பு என்றகிற கருத்தாக்கத்தை சிதைக்கும் போக்கு தமிழகத்தில் மிகவும் கடுமையாக நடத்தப்பட்டு வருகிறது. "அடித்தளம் மேற்கட்டுமானம் என்ற எதிர்வுகளுக்கு மார்க்சிய முதலாசிரியர்கள் கூட இவ்வளவு இறுக்கத்தை வழங்கினார்களா என்பது சந்தேகமே. இயங்கியல் எதிர்வுகளை நெகிழ்வாகப் பயன்படுத்த வேண்டும் என்பதே அவர்களது நிலைப்பாடு ஒன்றிலிருந்து மற்றதை வருவிக்கும் முறையியலை அவர்கள் ஏற்கவில்லை. ஹெகலிய இயங்கியலில் கூட இத்தனை இறுக்கம் கிடையாது" என்று மார்க்சின் கருத்தை புரட்டி, சிதைக்கும் போக்கு அதிகமாகவே நடத்தப்படுகிறது. இவர்களது கருத்து மேலே தொகுத்த மார்க்சிய கருத்தாக்கத்தை சந்தேகிக்கும் போக்காகும்.

அதுமட்டுமல்லாது, மார்க்சியம் எதை எதிர்த்து தோன்றியதோ, அந்த பழைய நிலைக்கு மார்க்சியத்தை எடுத்துச்செல்லும் வேலையை செய்கிறது இந்தப் போக்கு.

## மார்க்சின் உடலைப் புதைக்கின்ற பொழுது எங்கெல்ஸ் நிகழ்த்திய உரையில் கூறினார்:-

> " .. ஒரு குறிப்பிட்ட மக்களினம் அல்லது குறிப்பிட்ட சகாப்தத்தின் போது அடைந்திருக்கின்ற பொருளாதார வளர்ச்சியின் அளவு என்னும் அடிப்படையின் மீது சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்கள், சட்டவியல் கருத்தாக்கம், கலை மற்றும் மதக் கருத்துக்கள் கூட வளாச்சியடைகின்றன, ஆகவே அதன் ஒளியில் அவற்றை விளக்க வேண்டமே அல்லாது இதுவரை செய்யப்பட்டதைப் போல மறுதலையாக விளக்கக் கூடாது."

"இதுவரை செய்யப்பட்டதைப் போல மறுதலையாக விளக்கக் கூடாது." என்று எங்கெல்ஸ் குறிப்பிட்டதற்கு மாறாக பழையபடி மீண்டும் மறுதலையாக, அதாவது மனிதர்களின் உணர்வுநிலையைக் கொண்டு சமூகவாழ்நிலையை விளக்க முற்படுகின்றனர்.

இந்த போக்கு அனைத்துலகிலும் காணப்படுகிறது.

மேலை நாடுகளில் மார்க்சியத்தை சிலர் விஞ்ஞான மார்க்சியம், விமர்சன மார்க்சியம் என இரண்டாகப் பிரித்து பார்க்கின்றனர்.

விஞ்ஞான மார்க்சியம் என்பது சமூக எதார்த்தத் தை, சமூக உற்பத்தி முறைகளில் உள்ள புறவய முரண்பாடுகளில் காண்கிறது. கட்சி, நடைமுறை, புரட்சியின் அகவயக் காரணிகள், கருத்தியல் போன்ற தத்துவார்த்த நடவடிக்கைகளுக்கு முதன்மை கொடுப்பது விமர்சன மார்க்சியம் என்கின்றனர்.

மார்க்சியத்தை இரண்டாக்குவதின் மூலம், மார்க்சியத்தை நீர்த்து போக வைக்க முயற்சிக்கின்றனர். மார்க்ஸ், எங்கெல்ஸ் கூற்றுகளை திரித்தும், மாற்றியும் விளக்கம் அளிப்பதின் வழியில் இதனை செய்கின்றனர்.

இதற்கு எங்கெல்ஸ் எழுதிய இரு கடிதங்களை பயன்படுத்து கின்றனர். ஆதில் 'பொருளாதார மண்டலத்தில் நடைபெறும் மோதல்கள் இயல்பாகவே அரசியல் புரட்சிகளில் பிரதிபலிக்கிறது என்ற இயந்திரத் தனமான துர்வியாக்கியானத்தை அம்பலப்படுத்தி எங்கெல்ஸ்' எழுதி யிருப்பதாக தெரிவிக்கின்றனர். இக் கூற்றில் பொருளாதார உற்பத்தி முறை என்னும் அடித்தளம் மேற்கட்டமைப்பை தீர்மானிக்கிறது என்பதை தெரிவிக்காமல், மார்க்சின் கண்டுபிடிப்பான வரலாற்றியல் பொருள் முதல்வாதம் மறைக்கப்படுகிறது. இதன் மூலம் 'அடித்தளத்துக்கும் மேற் கட்டுமானத்துக்குமான உறவுகள் பொருளாதாரத்துக்கு நேர் பொருத்த மாக அரசியல், கலை, இலக்கியம் என்றெல்லாம் வருவது கிடையாது. ஒவ்வொரு துறைக்கும் சுயேச்சையான தனி வரலாறு உண்டு. இவற்றி டையே செயற்கையாக முடிச்சுப் போடும் முயற்சிகள் உண்டு. அதேபோல இவை ஒன்றின் மீதொன்று செலுத்துகிற தாக்கத்தைக் காணாதிருப்பதும் தவறு' என்ற மார்க்சியத்திற்கு முரணான முடிவிற்கு வருகின்றனர்.

இந்த வழியில் செல்லும் போது 'மார்க்சியத்தில் மிக அடிப்படையான ஒரு கூறு அடித்தளத்துக்கும் மேற்கோப்புக்கும் இடையிலான உறவு. அடித்தளமும் மேற்கோப்பும் ஒன்றை ஒன்று பாதிப்பது. ஒன்றோடொன்று முரண்படுவது.' ஏன்று கூறி, பிறகு 'அடித்தளம் மேற்கட்டுமானத்தை தீர்மானிக்கிறது. மேற்கட்டுமானமும் அடித்தளத்தை தீர்மானிக்கிறது' என்ற முடிவிற்கு வருகின்றனர். இறுதியாக மார்க்சின் கண்டுபிடிப்பான, ஏடறிந்த வரலாற்று அனைத்தும் வர்க்கப் போராட்டத்தின் வரலாறு என்பதும், அதன் விளக்கமான, அடித்தளம் மேற்கட்டமைப்பு என்ற கருத் தாக்கமும், ஆக வரலாற்றியல் பொருள்முதல்வாதத்தையே கொச்சைப் படுத்திவிடுகின்றனர்.

சமூக வாழ்நிலை தான், சமூக உணர்வுநிலையை உருவாக்குகிறது என்பதை எற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதால், மார்க்சிய முடிவுகளை நோக்கி இவர்களால் வரமுடியாமல் போகிறது.

## எங்கெல்ஸ் கூறுகிறார் :-

"வரலாற்றியல் பொருள்முதல்வாதக் கருத்தோட்டமானது (மனித வாழ்வுக்கு ஆதாரமான சாதனங்களின்) உற்பத்தியும், அதற்கு அடுத்தபடி இந்த உற்பத்திப் பொருள்களின் பரிவர்த்தனையும் தான், சமுதாயக் கட்டமைப்பு அனைத்துக்குமான அடித்தளமாகும் என்ற வரையறுப்பிலிருந்து தொடங்குகிறது. வரலாற்றில் தோன்றியுள்ள ஒவ்வொரு சமுதாயத்திலும் எவ்விதம் செல்வம் வினியோகிக்கப்படுகிறது, சமுதாயம் எப்படி வர்க்கங்கள் அல்லது படிநிலைகளாய் பிரிக்கப்பட்டிருக்கிறது என்பது, என்ன உற்பத்தி செய்யப்படுகிறது, எப்படி உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்திப் பொருள்கள் எவ்விதம் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகின்றன என்பவற்றைச் சார்ந்தே உள்ளது. இந்தக் கண்ணோட்டத்தின் படி எல்லாச் சமுதாய மாறுதல்களுக்கும் அரசியல் புரட்சிகளுக்குமான இறுதிக் காரணங்களைப் பொருளுற்பத்தி மற்றும் வினியோக முறைகளின் மாற்றங்களில் கண்டறிய வேண்டுமே அல்லாது, மனிதனது மூளையில் அல்ல, நிலையான சாசுவத உண்மை மற்றும் சாசுவத நீதி குறித்து மனிதனுக்குக் கிடைக்கப் பெறும் முன்னிலும் சிறப்பான உள்ளுணர்வில் அல்ல. இவற்றை அந்தந்த சகாப்தத்தின் பொருளியலில் கண்டறிய வேண்டுமே அல்லாது தத்துவவியலில் அல்ல."

*-டூரிங்குக்கு மறுப்பு*

## லெனின் கூறுகிறார்:-

"இயற்கை பற்றிய அறிதலை மனித சமுதாயம் பற்றிய அறிதலாகவும் (மார்க்ஸ்) விரிவாக்கினார். மார்க்சின் வரலாற்றியல் பொருள்முதல்வாதம் விஞ்ஞானச் சிந்தனைக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாக அமைந்தது. முன்பெல்லாம் வரலாற்றையும் அரசியலையும் பற்றிய கருத்துக்களில் குழப்பமும் தான்தோன்றித் தனமும் ஆதிக்கம் செலுத்தி வந்தன. இப்போது அவை போய், வியப்பூட்டும் அளவுக்கு ஒருமித்த முழுமையும் உள்ளிணக்கமும் கொண்ட ஒரு விஞ்ஞானத் தத்துவம் வந்துவிட்டது."

*மார்க்சியத்தின் மூன்று தோற்றுவாய்களும் மூன்று உள்ளடக்கக் கூறுகளும் - லெனின்*

மேலே எங்கெல்சின் கூற்றான சமுதாய மாறுதல்களை தத்துவயி யலில் அல்ல பொருளியலில் கண்டுபிடிக்க வேண்டும் என்பதையும், லெனின் கூறிய வரலற்றையும், அரசியலையும் பற்றி பழைய குழப்பமும், தான்தோன்றித் தனமும் நீங்கிவிட்டதும், உள்ளிணக்கம் கொண்ட ஒரு விஞ்ஞானத் தத்துவத்தையும், இந்த புரட்டல் பகட்டு அறிஞர்கள் ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை.

புரட்டல்வாதிகள் தவறாகப் பயன்படுத்தும், எங்கெல்சின் இரு கடிதங்களை இப்போது பார்வையிடுவோம்.

## எங்கெல்ஸ் பிரோஹுுக்கு எழுதிய (செப்டெம்பர் 21 (22) 1890) கடிதம்:-

“இளைஞர்கள் சில சமயங்களில் பொருளாதாரத் தரப்பின் மீது உரியதைக் காட்டிலும் அதிகமான அழுத்தம் கொடுப்பதற்கு மார்க்சும் நானும் பகுதியளவுக்குப் பொறுப்பாகும். முக்கியமான கொள்கையை மறுத்த எதிரிகளுக்கு எதிராக நாங்கள் அதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டியிருந்தது, இந்த இடைச்செயலில் பங்கெடுக்கின்ற மற்ற கூறுகளுக்கு உரிய அழுத்தம் கொடுப்ப தற்கு அவசியமான காலம், இடம் அல்லது சந்தர்ப்பம் எங்களுக்கு எப்பொழுதும் இருக்கவில்லை. ஆனால் வரலாற்றின் ஒரு காலகட்டத்தை ஆராய்ச்சி செய்வது, அதாவது செய்முறை யில் அதைக் கையாளுவது என்பது வேறு விஷயம், அங்கே தவறு செய்வதை அனுமதிக்க முடியாது.”

## எங்கெல்ஸ் மேரிங்குக் எழுதிய (ஜுலை 14, 1893)கடிதம்:-

“...மற்றபடி ஒரே ஒரு விஷயம் மட்டுமே இடம் பெறவில்லை, ஆனால் மார்க்சும் நானும் எங்களுடைய எழுத்துக்களில் அதைப் போதுமான அளவுக் வலியுறுத்தத் தவறினோம், அதைப் பொறுத்தமட்டில் நாங்கள் சம அளவுக்குத் தவறு செய்தவர்களே. அதாவது, நாங்கள் பிரதான அழுத்தத்தை முதலாவதாக அரசியல், சட்டவியல் மற்றும் இதர சித்தாந்தக் கருத்துக் களையும் இக்கருத்துக்கள் என்னும் ஊடகத்தின் மூல மாகத் தோன்றுகின்ற நடவடிக்கைகளையும் அவற்றின் அடிப்படையான பொருளாதார மெய்விவரங்களிலிருந்து பெறுவதற்குக் கொடுத்தோம், அப்படிச் செய்யக் கடமைப் பட்டிருந்தோம். ஆனால் நாங்கள் அப்படிச் செய்கின்ற பொழுது, உள்ளடக்கத்துக்காக வடிவத்தைப் பற்றிய

www.padippakam.com

பிரச்சினையை, அதாவது இக்கருத்துக்கள் ஏற்படுகின்ற வழிகளை, இதரவற்றைப் புறக்கணித்தோம். அது நமது எதிரிகள் எங்களைத் தவறாகப் புரிந்துக் கொள்வதற்கும் திரித்துக் கூறுவதற்கும் விரும்பத்தக்க சந்தர்ப்பத்தை அளித்தது.

...விஷயத்தின் இந்த அம்சத்தை என்னால் இங்கே ஓரளவு தான் சுட்டிக்காட்ட முடிகிறது. இந்த அம்சத்தை நாம் அதற்குரியதைக் காட்டிலும் அதிகமாகப் புறக்கணித்திருக்கிறோம் என்று நான் நினைக்கிறேன். அது பழைய கதையே, உள்ளடக்கதுக்காக முதலில் வடிவம் எப்பொழுதுமே புறக்கணிக்கப்படுகிறது. ஏற்கெனவே நான் கூறியபடி நானும் இதைச் செய்திருக்கிறேன், அது தவறு என்று பிற்பாடுதான் எனக்குப் பட்டிருக்கிறது. ஆகவே நான் உங்களை இதற்காக எவ்விதத்திலும் குறைசொல்லாதது மட்டுமன்றி - தவறு செய்த தரப்பினரின் மூத்தவர் என்ற முறையில் அப்படிச் செய்வதற்கு எனக்கு உரிமையில்லை - அதற்கு மாறாக. எனினும் மற்றவை எப்படியிருந்தாலும் எதிர்காலத்தை முன்னிட்டு இந்த அம்சத்தை உங்களுடைய கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

வரலாற்றில் பாத்திரம் வகிக்கின்ற பல்வேறு சித்தாந்தத் துறைகள் சுயேச்சையாக வரலாற்று ரீதியில் வளர்ச்சி அடைவதை நாம் மறுப்பதால், அவை வரலாற்றின் மீது எவ்விதமான தாக்கத்தைச் செலுத்துவதையும் நாம் மறுக்கிறோம் என்னும் சித்தாந்திகளின் முட்டாள் தனமான கருத்தும் இதனுடன் சேர்ந்திருக்கிறது. காரணமும் விளைவும் தவிர்க்க இயலா எதிர்முனைகள் என்னும் பொதுப்படையான, இயக்கவியல் அல்லாத கருதுகோள், இடைச்செயல் முற்றிலும் கருதப்படாமல் இருப்பது இதற்கு அடிப்படை ஆகும். வரலாற்று நிகழ்ச்சி மற்ற காரணிகளால், முடிவில் பார்க்குமிடத்து பொருளாதாரக் காரணிகளால் ஏற்படுவதால், அது உடனேயே தீவிரமான காரணியாகிறது, அதன் சூழ்நிலை மற்றும் அதைத் தோற்றுவித்த காரணங்களின் மீது கூட அதனால் எதிர்ச்செயல் புரிய முடியும் என்பதை இந்தக் கனவான்கள் பெரும்பாலும் அநேகமாக திட்டமிட்ட முறையிலும் மறந்து விடுகிறார்கள்."

உள்ளடக்கத்தை விளக்கிய அளவிற்கு வடிவத்தை விளக்கவில்லை என்று வருத்தப்பட்டிருக்கிறார் எங்கெல்ஸ், அத்தோடு இதை அன்றே பழைய கதை என்றும், எதிர்காலத்தை முன்னிட்டும் கவனத்திற்கும் கொண்டுவந்து விவரித்தும் உள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

எங்கெல்ஸ் சித்தாந்த துறையின் தனித்த சுயேச்சையைத் தான் மறுக்கிறார். சித்தாந்தம் வரலாற்றின் மீது எவ்வித தாக்கத்தையும் செலுத்தவில்லை என்று மறுப்பதான, முட்டாள் தனமான சித்தாந்திகளின் கூற்றைத் தான் எதிர்க்கிறார். அத்துடன் காரணமும் விளைவும் தவிர்க்க இயலாத எதிர் முனைகள் என்னும் பொதுப்படையான, இயக்கவியல் அல்லாத கருதுகோள், இடைச் செயல் முற்றிலும் கருதப்படாமல் இருப்பது இதற்கு அடிப்படை ஆகும் என்று முட்டாள் தனமான சித்தாந்திகளின் கருத்தை சுட்டிக்காட்டு கிறார்.

அடித்தளத்தின் மீது மேற்கட்டமைப்பு எதிர்ச்செயல் புரிவதை மார்ச்சியம் மறுக்கவில்லை. இதனை மறுப்பவர்கள் வரலாற்றியல் பொருள்முதல்வாதத்தை இயக்கவியல் கண்ணோட்டத்தில் அணுகவில்லை என்கிறார் எங்கெல்ஸ். மேற்கட்டமைப்பு அடித்தளத்திற்கு கட்டுப்பட்ட வகையில் தனது செயற்பாட்டில் சுதந்திரம் பெற்று அடித்தளத்தில் தாக்கம் செலுத்துவதை மார்க்சியம் மறுத்திடவில்லை.

## இயக்கவியலை தளரவிட்டவரைப் பற்றி எங்கெல்ஸ் ஷ்மிட்டுக்கு (அக்டோபர் 27, 1890) கடிதம்

> "...பொருளாதார இயக்கத்தின் அரசியல், இதர பிரதிபலிப்புகள் அந்த இயக்கத்தின் மீது செலுத்துகின்ற ஒவ்வொரு எதிர்த்தாக் கத்தையும் நாங்கள் மறுப்பதாக பார்ட் கருதினால், அவர் வெறும் கற்பனையுடன் போராடுகிறார். அவர் மார்க்ஸ் எழுதிய பதினெட் டாம் புருமேரைப் பார்த்தால் போதும், அரசியல் போராட்டமும் சம்பவங்களும் - பொருளாதார நிலைமைகளை அவை பொதுப் படையில் சார்ந்திருக்கின்ற நிலைக்குள் என்பது மெய்யே - வகித்த குறிப்பிட்ட பாத்திரத்தை இந்நூல் அநேகமாக முற்றாக ஆராய்கின்றது, அல்லது மூலதனத்தை, உதாரணமாக நாள் வேலை நேரத்தைப் பற்றிய பகுதியைப் படிக்கட்டும், அரசியல் நடவடிக்கையான சட்டம் அத்ததைய பெரும் அழுத்தத்தைக் கொண்டிருக்கிறது, அல்லது முதலாளி வர்க்கத்தின் வரலாற்றைப் பற்றி பகுதியை (அத்தியாயம் xxiv) படிக்கட்டும். அரசியல் அதிகாரம் பொருளாதார ரீதியில் சக்தியில்லாதது என்றால், பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் சர்வாதிகாரத்துக்காக நாங்கள் போராடுவது ஏன்? பலாத்காரம் (அதாவது, அரசின் ஆட்சியதிகாரம்) ஒரு பொருளாதாரச் சக்திதானே!



படிப்பகம்

www.padippakam.com

... ... ...

**இந்தக் கனவான்கள் எல்லோரிடமும் இயக்கவியல் கிடை யாது. அவர்கள் எப்பொழுதும் ஓரிடத்தில் காரணத்தையும் இன்னோர் இடத்தில் விளைவையும் பார்க்கிறார்கள்.** அது ஒன்றுமில்லாத சூக்குமம், அத்தகைய இயக்க மறுப்பியலான எதிர்முனைக் கோடிகள் மெய்யுலகத்தில் நெருககடிகளில் மட்டுமே நிலவுகின்றன, அப்பொழுது மொத்த, பரந்தகன்ற நிகழ்வுப் போக்கும் இடைச்செயலின் வடிவத்தில் நடைபெறுகிறது (இடைச்செயலில் ஈடுபடும் சக்திகள் மிகவும் சமமில்லாதவை என்றாலும், இவற்றில் பொருளாதார இயக்கம் இதுவரை மிக வலிமையான, மிகவும் ஆதிமூலமான, மிகவும் தீர்மானகரமான சக்தியாக இருக்கிறது) **இங்கே எல்லாமே சார்பு நிலையானது. எதுவுமே தனிமுதலானது அல்ல - இதை அவர்கள் ஒருபோதும் பார்ப்பதில்லை."**

பொருளாதார இயக்கத்தின் அரசியல், இதர பிரதிபலிப்புகள் அந்த இயக்கத்தின் மீது செலுத்துகின்ற ஒவ்வொரு எதிர்த்தாக்கத்தையும் நாங்கள் மறுப்பதாக கருதினால், அவர் வெறும் கற்பனையுடன் போராடு கிறார் என்று தெளிவாக இக்கடிதத்தில் எங்கெல்ஸ் கூறுயிருக்கிறார்.

மார்க்சியத்தை புரட்டுபவர்கள் கிராம்சியின் "பண்பாட்டு மார்க்சியத்தை", மார்க்சியத்தின் அடிப்படைகளில் திணிக்க விரும்புகின்றனர்.

கிராம்சியின் கண்ணோட்டத்தைப் பார்ப்போம்.

கிராம்சியின் கருத்துக்கள் குழப்பம் நிறைந்தாக காட்சியளிக்கிறது, இந்தக் குழப்பம் அவரது முடிவுகளை பாதிக்கிறது.

> " ..பொருளாதார சக்திகள் உள்ளடக்கமாவும் கருத்துநிலைகள் வடிவமாகவும் அமைகின்றன. ஆனால் உள்ளடக்கம் என்றும் வடிவம் என்றும் வேறுபடுத்திப் பார்ப்பது விஷயத்தைப் புரிந்து கொள்வதற்காகச் செய்யப்படும் பாகுபாடே அன்றி வேறல்ல."

*(கிராம்ஷி புரட்சியின் இலக்கணம் எஸ்.வி.ராஜதுரை வ.கீதா பக். 466)*

மார்க்சியம் கூறும் அடித்தளம் மேற்கட்டமைப்பு என்பதை, வெறும் புரிந்து கொள்வதற்கு வகுத்துக்கொண்ட பாகுபாடாக மட்டுமே பார்க்கிறார். பொருளாதார சக்திகள் மேற்கட்டமைப்பை தீர்மானிக்கிறது என்ற மார்க்சின் கண்டுபிடிப்பை ஏற்றுக்கொள்ளும் நிலையில் கிராம்ஸ்கி இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

" .. வரலாற்று ரீதியாக, பொருளாயதச் சக்திகளை அவற்றுக் குள்ள வடிவங்களிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. அதுபோல பொருளாயதச் சக்திகளிலிருந்து கருத்துநிலை வடிவங்களைப் பிரித்துப் பார்த்தால் அவை தனிமனிதர்களின் வெறும் கற்பனை யாகவே காட்சியளிக்கும்."

*(கிராம்ஷி புரட்சியின் இலக்கணம் எஸ்.வி.ராஜதுரை வ.கீதா பக். 466)*

இதில், பொருளாதார சக்திகளை அதற்குரிய வடிவங்களி லிருந்து பிரித்துப் பார்க்க முடியாது, பொருளாதார சக்திகளிலிருந்து கருத்துநிலை வடிவங்களை பிரித்துப் பார்த்தால் அது தனி மனிதர்களின் வெறும் கற்பனையாகவே இருக்கும் என்று கூறும் கிராம்ஸ்கியின் கூற்றில் பொருளாதார சக்திகள் வடிவத்தை (மேற்கட்டமைப்பை) தீர்மானிக்கிறது என்ற மார்க்ஸ் கண்டுபிடிப்பை பற்றி புரிதல் இல்லை. அதனை ஏற்றுக் கொள்ளவும் இல்லை என்பது தான் உண்மை. அடித்தளம் மேற் கட்டமைப்பு என்ற இரண்டையும் சமநிலையில வைத்துப் பார்க்கிறார். இந்த மார்க்சியத்திற்கு மாறான கருத்தாக்கத்தில் நிலைகொண்டிருப்ப தால், அவரது முடிவுகள் மார்க்சியத்திற்கு எதிராக வெளிப்படுகிறது.

**கிராம்சி கூறுகிறார்:**

"..அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்பே பாட்டாளி வர்க்கம் தனது மேலாண்மையை வளர்த்துக் கொள்வதும் அதி காரத்தைக் கைப்பற்றிய பிறகு உருவாக்கும் எதிர்கால சோசலிச அரசின் கூறுகளை இப்போதே உருவாக்கத் தொடங்குவதும் அவசியம். இங்குதான் அறிவாளிகளின் பங்கு முக்கியமாகிறது"

(கிராம்ஷி புரட்சியின் இலக்கணம் எஸ்.வி.ராஜதுரை வ.கீதா பக். 470)

கிராம்சி மேலே கூறிய "பொருளாயதச் சக்திகளிலிருந்து கருத்து நிலை வடிவங்களைப் பிரித்துப் பார்த்தால் அவை தனிமனிதர்களின் வெறும் கற்பனையாகவே காட்சியளிக்கும்" என்பதற்கு மாறாக, இங்கே அவரே எதிர்கால சோஷலிச அரசிற்கு தேவைப்படும் வடிவத்தை, இப்போதே உருவாக்க தொடங்கவும், அதற்கான அறிவாளிகளின் பங்கையும் முதன்மை படுத்தவும் செய்கிறார். மேலே கூறிய கிராம்க்சியின் கூற்றின்படி, அரவரது பாட்டாளி வர்க்கத்தின் மேலாண்மை என்பது அறிவாளிகளின் கற்பனையாகவே முடியும் என்பது சந்தேகம் இல்லை.

**லெனின் கூறுகிறார்:-**



படிப்பகம்

"‥ நாம் கற்கனாவாதிகள் அல்ல.

‥ புரட்சிக்குப் பிறகு சில காலத்துக்கு பழைய அறநெறியின் சாயல்கள் புதியதன் இளங் குருத்துக்களை விஞ்சி ஆதிக்கம் புரியவே செய்யும் என்பதையும் அறிவோம். குறிப்பிட்ட சிறிது காலத்துக்கு பழையது அதைக் காட்டிலும் பலம் கொண்டதாகவே இருக்கும். இயற்கையிலும் சமூக வாழ்விலும் எப்பொழுதும் இப்படித்தான்"

*மாபெரும் தொடக்கம்*

இங்கு அறநெறிக்கு கூறியது, பொதுவாக எல்லா கருத்துநிலை களுக்கும் பொருந்தும்.

கிராம்சியின் மார்க்சியத்திற்கு முரணான சிந்தனை, அவரது கீழ் காணும் முடிவில் அடங்கியிருக்கிறது.

**கிராம்சி கூறுகிறார்:**

"பொருளாதாரக் கட்டமைப்புக்கும் அரசியல் அமைப்புக்கும் இடையில் எளிமையான, நேரடியான உறவுகள் இல்லை. மக்களின் வரலாறு என்பது பொருளாதார விவரங்களை மட்டும் கொண்டு உருவாக்கப்படவில்லை. அரசியல் அமைப்புக்கான காரணகாரியங்களைக் கண்டிறிவது சிக்கலானது கடினமானது மாகும். இக்காரண காரியங்களைப் பிரித்துப் பார்ப்பதற்குப் பல்வேறு வகையான சிந்தனைகளையும் நடைமுறைகளையும் ஆழமாகவும் பல்வேறு கோணங்களிலிருந்தும் ஆராய்ந்து அறிவது இன்றியமையாதது‥ வரலாறு என்பது கணிதம் அல்ல"

*(கிராம்ஷி புரட்சியின் இலக்கணம் எஸ்.வி.ராஜதுரை வ.கீதா பக். 13)*

கிராம்சியின் சிந்தனைகள், மார்க்ஸ் கண்டுபிடிப்பான, வரலாற்றியல் பொருள்முதல்வாதத்திற்கு எதிரானது என்பது, வெளிப்படையாகவே தெரிந்து விடுகிறது. வரலாற்றியல் பொருள்முதல்வாதத்தின் சாரமே, வரலாற்றின் வளர்ச்சியை கணித்துக் கண்டறிவதுதானே.

'மார்க்சிய சிந்தனையை நமது சொந்தச் சூழல்களுக்கேற்ப வளர்த்தெடுக்க வேண்டும் என்பது பேராசியர் நா.வா. அவர்களே மாணவர் களுக்கு இட்ட பணியாகும்' என்ற கருத்தும் தமிழகத்தில் காணப்படு கிறது. பேராசியர் நா.வானமாமலை அவர்கள் நமது சொந்தச் சூழல் களுக்கேற்ப மார்க்சிய சிந்தனையை வளர்த்தெடுக்க சொன்னதாக

சொல்வதில் உள்ள தொனி, மண்ணிற்கேற்ற மார்க்சியம் என்பது போல் ஒலிக்கிறது. ஆனால் பேராசியர் நா.வா. அவர்களின் கருத்தை 'மார்க்சிய தத்துவம்' என்ற தமது நூலில் தெளிவாக எழுதி யிருக்கிறார்.

> "இந்த நூல் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் இவர்களுடைய தத்துவக் கொள்கைளை விளக்கும் முயற்சியில் ஒரு சிறிய காணிக்கை. இந்நூலில் பொருள்முதல்வாதம், ஆன்மீகவாதம், இயக்கவியல் முதலிய கருத்துக்களை விளக்க இந்திய தத்துவங்களிலிருந்து உதாரணங்களைத் தந்துள்ளேன். பல நாட்டு அறிஞர்கள் மார்க்சின் தத்துவம்பற்றி எழுதியுள்ளார்கள். ஒரு ஜெர்மன்அறிஞர் எழுதிய புத்தகத்தை நான்படித்தேன். அவர், அவரது நாட்டுத் தொழிலாளிகளுக்குப் புரியும்படி ஜெர்மன் உதாரணங்களைக் கொடுத்து கருத்துக்களை விளக்கியுள்ளார். பூலிட்ஸர் என்ற பிரெஞ்சு பேரறிஞர், பிரெஞ்சு தத்துவம், வரலாற்றுத் துறைகளில் இருந்து எடுததுக்காட்டுகள் தந்து மார்க்சிய கருத்தமைப்புகளையும், கருத்துக்களையும் விளக்கியுள்ளார். மாரிஸ்கான்போர்த் என்னும் ஆங்கில மார்க்சிய அறிஞர், ஆங்கில உதாரணங்கள் தந்து மார்க்சிய தத்துவத்தை விளக்கியுள்ளார். இந்தியாவில் இத்தகைய முயற்சி மிகக் குறைவு, அவ்வாறு முயற்சி செய்கிறவர்கள் மார்க்சி யத்தை, வேதாந்தத்திற்குச் சமமாகவே ஆக்கிவிடு கிறார்கள்."

இதில் பேராசிரியர் எச்சரிக்கையோடு தனது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். இந்திய தத்துவயியலிருந்து உதாரணங்களைக் கொடுத்து மார்க்சிய தத்துவயியலை தந்துள்ளேன் என்றுதான் கூறுகிறார். இது மட்டுமில்லாது, இதுபோன்ற முயற்சியில் ஈடுபடுபவர்கள் மார்க்சியத்தை வேதாந்தத்திற்குச் சமமாகவே ஆக்கிவிடுகிறார்கள் என்று வருத்தத்தோடு எழுதியுள்ளார். மார்க்சியத்தை வேதாந்தத்திற்கு சமமாக ஆக்கியர்களில் கோவை ஞானி, தோழர் காலன்துரை முதன்மை யானவர்கள்.

மார்க்சிய திருத்தல்வாதிகளைப் பற்றி லெனின் கூறிய கருத்தோடு, இப்போதைக்கு முடித்துக்கொள்வோம்:-

> "மார்க்சிய போதனை - தற்காலச் சமுதாயத்தின் மிகவும் முன்னேறிய வர்க்கத்துக்கு அறிவொளி ஊட்டி அதை ஒழுங்கமைக்க நேரடியாய் உதவுவதும், இந்த வர்க்கத்தின் முன்னுள்ள கடமைகளைச் சுட்டிக்காட்டுவதும்,

தற்போதுள்ள அமைப்பு (பொருளாதார வளர்ச்சி காரண மாய்) தவிர்க்க முடியாதபடி வீழ்த்தப்பட்டு அதனிடத்தில் ஒரு புதிய அமைப்புத் தோன்றுமென்பதை நிருபிப்பதுமான மார்க்சியப் போதனை - அதன் வாழ்வு முழுவதும் ஒவ்வொரு அடியும் போராடியே முன்னேற வேண்டியிருந்துள்ளது என்பதில் வியப்பு ஏதுமில்லை.

..மார்க்சியத்துக்கு முற்பட்ட சோஷலிசம் நொறுக்கப்பட்டு விட்டது. முன்பு போல தனது சொந்த அடிப்படையிலிருந்து போராடுவதற்குப் பதிலாய், இப்பொழுது அது மார்க்சி யத்தின் பொது அடிப்படையிலே நின்று, திருத்தல்வாத மாய்ப் போராட்டத்தை நடத்தி வருகிறது."

*மார்க்சியமும் திருத்தல்வாதமும்*

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



அங்கக இயற்கையின் (organic nature) வளர்ச்சி விதியை டார்வின் கண்டு பிடித்ததைப் போல, மனித சமூக வரலாற்றின் வளர்ச்சி விதியை மார்க்ஸ் கண்டுபிடித்தார், மனிதன் அரசியல், அறிவியல், கலை, மதம், இதரவற்றில் ஈடுபடும் முன்னர் முதலில் உண்ண உணவைவும், இருக்க இருப்பிடத்தையும், உடுக்க உடையையும் பெற்றிருக்க வேண்டும் என்னும் சாதாரணமான உண்மை இதுவரை சித்தாந்த மிகை வளர்ச்சியினால் மூடி மறைக்கப் பட்டிருந்தது, ஆகவே உடனடியான பொருளாதார வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்தல், அதன் காரணமாக ஒரு குறிப்பிட்ட மக்களினம் அல்லது குறிப்பிட்ட சகாப்தத்தின் போது அடைந்திருக்கின்ற பொருளாதார வளர்ச்சியின் அளவு என்னும் அடிப் படையின் மீது சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்கள், சட்டவியல் கருத்தாக்கம், கலை மற்றும் மதக் கருத்துக்கள் கூட வளர்ச்சியடைகின்றன, ஆகவே அதன் ஒளியில் அவற்றை விளக்க வேண்டுமே அல்லாது இதுவரை செய்யப்பட்டதைப் போல மறுதலையாக விளக்கக் கூடாது.

எங்கெல்ஸ்